# திராவிட இயக்கம்



பேராசிரியர்

க. அன்பழகன்

09 4 99

# திராவிட இயக்கம்

## சென்னைப் பல்கலைக்கழகம்

### கருத்தரங்குத் தொடக்கப் பேருரை

---

**பேராசிரியர் க. அன்பழகன்**

---

**பூம்புகார் பதிப்பகம்**
63, பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

1 தி.இ. - 405

விலை ரூ. 35/-

பூம்புகார் வெளியீட்டு எண் : 405
முதற் பதிப்பு : பிப்ரவரி 1999
உரிமை : ஆசிரியருக்கே

அச்சிட்டவர்கள் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013

# பதிப்புரை

தொல்பழங்கால முதல் நாகரிக வளர்ச்சி பெற்ற வரலாறு கொண்ட தென்னகத்தில், முதற் சங்க கால முதலே இலக்கிய இலக்கண நலம் வாய்ந்த முத்தமிழ் முழங்கிய தமிழர்களிடையில், மூவேந்தர் ஆண்ட மும்மண்டலமாகத் திகழ்ந்த தமிழகத்தில், மக்கள் வாழ்ந்த நிலம் - ஏற்ற தொழில் - பயின்ற பழக்க வழக்கம் காரணமாகப் பல்வேறு பிரிவினராக - வெவ்வேறு பெயரினராக வாழ்ந்தனர் எனினும், பிறவியினால் உயர்வு தாழ்வு கருதாத சமுதாயமாகத்தான் திகழ்ந்தனர். வேளாண்மையில் ஈடுபட்டவருள் உழுவித்து வாழ்வாரும், உழுதுண்டு வாழ்வாரும் எனப் பிரிவுகள் தலைதூக்கினும், பிறவி உயர்வு தாழ்வு உணர்வுகளுக்கு அவர்கள் ஆட்பட்டிருக்கவில்லை.

இடைக்காலத்தில், 2000 ஆண்டுகளுக்கு முன் தென்னகத்தில் வந்தேறிய ஆரிய இனத்தார் பெரும்பாலும் பிராமணச் சந்நியாசிகளாதலின் - தமது வேதமகிமை பேசி, வேள்விப்பலன் கூறி, வேந்தர்களிடத்திலே செல்வாக்குபெற்று, வேத கட்டளைகளென்று வருணாசிரம தருமப்படியான சத்திரியர்களாக மன்னர்களைக் கற்பித்துத் தாம் அரச குருமார்களாகி, பூசுரர்களாகி, அர்ச்சகருமாகி, வருணதருமத்தைப் புகுத்தி நாட்டு மக்களை எல்லாம் சூத்திரர்களாய்ப் பட்டியலிட்டு ஆதிக்கம் பெற்றனர்.

தென்னகம் சேர்ந்த ஆரியம் - பிராமண வடிவில் மட்டுமே வந்தது; பிற வருணத்தார் வரவில்லை. இங்கு வாழ்ந்திருந்தோரை வருண வாய்பாட்டிற்கு ஆளாக்கி - ஆரியர் அனைவரும்

எசமான சாதியாகி, தம் கைப்பாவை ஆக்கிய கடவுள் பெயரால் தென்னக திராவிடர்களை இழி பிறவியாக்கி, அவர்தம் மொழிகளை நீச பாஷையாகத் தாழ்த்தி, தமது வடமொழியைத் தேவ பாஷையாக உயர்த்தி, வரலாறு படைத்திருந்த திராவிட இனத்தையே தமது அடிவருடிக் கிடக்கும் அவலத்திற்கு ஆளாக்கி விட்டனர்.

ஒருவேளை இது ஆரியரின் திட்டமிட்ட சதி ஆகாவிடினும் அவர்தம் வைதிக மத வழிபாட்டு முறையில், பிராமணர்கள் கற்பித்துக் கொண்டிருந்த பிறவி உயர்வுக் கோட்பாடு - அவர்தம் வேத மந்திர வைதிகக் கோலத்தால் - எழுந்த மாயை நாட்டுமக்களை இணங்கச் செய்திருக்கலாம். விளைவு, தமிழினம் தாழ்ந்தது - திராவிடம் சீரழிந்தது.

இந்த அநீதியான சாதி - வருணமுறை சித்தர்கள் பலரால் அவ்வப்போது கண்டிக்கப்பட்டாலும், இறையடியார் சிலரும், கவிஞர்கள் சிலரும் அதனை மறுத்தனர் எனினும், தென்னக மன்னர்கள் ஆதரவில் தழைத்த வைதிகம், சைவத்தையும் - வைணவத்தையுமே வைதிக முறையின் ஆதிக்கத்திற்கு ஆட்படுத்திவிட்ட நிலையினால் - சாதிப்பிரிவு கடவுள் பற்றால் வளர்ந்த சமயப் பிடிப்பால் வேர்விட்டுத் தழைத்து நிலைபெறலாயிற்று. இதன் விளைவாக ஆதிக்கம் பெற்ற ஆரியத்தினால் பயன்பெற்ற பார்ப்பனர்களின் ஆதிக்க நிலையும் அதைத் தேடிக் கொள்ளும் முறையும் துறைதோறும் படரலாயின.

அதன் கெடுவிளைவினை உணர்ந்து - நாட்டு மக்களின் உரிமை வாழ்வுக்கு வழிகாண - ஆங்கிலேயர் ஆட்சியினால் வாய்த்த இருபதாம் நூற்றாண்டின் சூழ்நிலையே இடமளித்தது.

கடந்த 19-ஆம் நூற்றாண்டு முதலாகத்தான் - தமிழ்மொழி முதலான தென்னக மொழிகளின் தனித்தன்மை, தென்னக மக்களின் தொன்மை வரலாறு,

நாகரிகப் பெருமை, கலைகளின் தனிச் சிறப்பு ஆகியவை - மேல்நாட்டு ஆய்வு அறிஞர்களின் நூல்களால் வெளிப்பட்டதால் - தென்னக அறிஞர்களிடம் ஓர் விழிப்புணர்வும் தெளிவும் ஏற்படலாயின.

அதன் பயனாகவே சமுதாய உரிமைக்கு வாதிடும் திராவிட இயக்கம் உருக்கொண்டது. திராவிட இயக்கத்தின் வேர்களாக விளங்கியவர்கள் கண்ட எதிர்ப்புகள் பல; போராட்டங்கள் பல; ஏற்ற தியாகங்கள் இணையற்றவை.

அவர்தம் வழியில் சுடர் விட்டு ஒளிர்ந்த பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஊட்டிய உணர்வுடன், அறிஞர் அண்ணா வகுத்த நெறியில் கடந்த அறுபது ஆண்டுகளாக, இனமான உணர்வு போற்றும் இலட்சிய வீரராக நடைபோடுபவர் இந்நாள் கல்வி அமைச்சர் **பேராசிரியர் அன்பழகன்**. அவரது அறிவார்ந்த பேச்சாற்றலை - அவரது உரையைப் பலகாலும் கேட்டுள்ள தமிழ்கூறு நல்லுலகம் நன்கறியும்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் - பல்கலைக்கழக மானியக்குழுவின் உதவியுடன், கடந்த 27-04-98 ஆம் நாள், அதன் துணைவேந்தர் டாக்டர் பி.மனோகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிட இயக்கக் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து, பேராசிரியர் ஆற்றிய வரலாற்றுத் தெளிவளிக்கும் உரையினை இந்நூல் வடிவில் வெளியிடுவதன் மூலம், தமிழ் இனத்துக்கு ஓர் கடமையாற்றும் வாய்ப்புப் பெற்றது குறித்து மகிழ்கிறோம். நன்றி.

**பூம்புகார் பதிப்பகம்**

**சென்னை - 600 108.**

# சென்னைப் பல்கலைக் கழகம்

# திராவிட இயக்கக் கருத்தரங்கம்

## நாள் 27.4.1998

## கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களின்

# தொடக்க உரை

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மனோகரன் அவர்களே, வரவேற்புரை வழங்கிய பேராசிரியர் தாண்டவன் அவர்களே, கருத்தரங்கக் கட்டுரைச் சுருக்கம் பெறும் பேராசிரியர் பாலாஜி பிரசாத் அவர்களே, கருத்தரங்க இயக்குநர் பேராசிரியர் குணசீலன் அவர்களே, கருத்துரைகள் வழங்கவிருக்கின்ற பல துறைப் பேராசிரியர்களே! மாணவர்களே! நண்பர்களே!

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்தரங்கைத் தொடங்கி வைக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றதன் மூலம், என் வாழ்நாள் குறிக்கோளுக்கு உகந்த இலட்சியத்தை விளக்கும் வாய்ப்பினை எனக்கு அளித்திருப்பதற்காக என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாள், 20வது நூற்றாண்டின் இரண்டாவது பத்தாம் ஆண்டில்

திராவிடர் இயக்கம் தோன்றுவதற்கும், எழுச்சியும் வடிவமும் கொள்வதற்கும் வித்திட்ட வெள்ளுடை வேந்தர் தியாகராயருடைய பிறந்த நாள்; அதுவும் அவரது 147வது பிறந்த நாள் என்பதால் இந்தக் கருத்தரங்கு ஒரு பொருத்தமான நாளில் அமைந்திருக்கிறது என்பதை எண்ணி மகிழ்கிறேன். ஒரு வேளை தியாகராயர் தோன்றாவிட்டால் இந்தக் கருத்தரங்கு நிகழ்வதற்கான அடிப்படை தோன்றியிருக்காது. தியாகராயரே இந்த இனவரலாற்று ஆய்வு உண்மைகளையெல்லாம் கண்டுபிடித்து இந்த இலட்சியத்திற்கு வாதாடத் தலைப்பட்ட முதல் தலைவர்கூட அல்ல. அவருக்கு முன்னர் இந்த உணர்வுக்கு உரியவராக விளங்கியவர் டாக்டர் சி. நடேசனார் ஆவார். இந்த உணர்வுகளை உலகம் தெரிந்துகொள்ளச் செய்த பெருமைக்குரியவர் டாக்டர் டி.எம். நாயர். அதற்குப் பேராதரவாக இருந்த பெருமக்கள் பலர். எதிர்ப்புத் தெரிவித்த தேசிய அரசியல்வாதிகள் அதைவிட அதிகம் பேர்.

அப்படி ஓர் இயக்கம் தோன்றிய காரணத்தினாலேதான் சென்னைப் பல்கலைக் கழகத்திலே டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் 27 ஆண்டு காலத்திற்கும் மேலாகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றிருந்த ஒரு நல்வாய்ப்பை நாம் பெற்றிருந்தோம் என்பதை இந்தப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் உணர்ந்திருப்பர் என்று எதிர்பார்க்கிறேன். ஆனால் சூழ்நிலை மாற்றத்தால் அந்த அடிப்படையான உண்மைகளை மறந்திருக்கவும் கூடும். இன்றைக்கு இந்தத் தலைப்பில் பேசுவதற்கு நான் இங்கே நிற்பதுகூட, திராவிட இயக்கத்தினுடைய விளைவுதான். நீங்கள் பல நூறு பேர் கேட்பதும் அதனுடைய விளைவுதான். ஆனால் திராவிட இயக்கத்தின் சாதனையைப் பலர் உணராமல் இருப்பதுங்கூட நம்முடைய இன இயல்புதான். இந்தப் பல்கலைக் கழகத்திலே இப்படியொரு கருத்தரங்கு அமைந்து, இந்தத் தலைப்பில்

ஏறத்தாழ 100க்கு மேற்பட்டோர் பேசும் நிலை உருவாகியுள்ளது காலத்தின் கட்டாயமும் வரவேற்க வேண்டியதுமாகும்.

திராவிட இயக்கத்தினுடைய தோற்றத்திலே இருந்து அது வளர்ச்சியுற்ற காலத்தில் பல்வேறு கட்டங்களில் அதனுடைய இலட்சியம், கொள்கை, வளர்ச்சி, செயல்திட்டம், ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், பிரிவுகள், ஆகியவற்றை எல்லாம் ஆராய்ந்து பேசும் கடமையாற்றப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பலர் முன்வந்திருப்பதே பெருமையாகும். என்னுடைய நண்பர் ஈரோடு சுப்பிரமணியம் அவர்கள் தொடங்கி, இவ்வளவு பேராசிரியர்கள் ஈடுபடக்கூடிய கருத்தரங்கை உருவாக்கிய பேராசிரியர் தாண்டவனை நான் உளமாரப் பாராட்டுகிறேன்.

இந்த இயக்கம் எந்நிலை உற்றாலும், அந்தத் திராவிட இனஉணர்வு நமக்கு ஏற்படவேண்டும். நம்மைப் பொருத்தவரையிலாவது இன உணர்வோடு வாழ்வதில் ஓர் உறுதி கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன். உலகம் மிக வேகமாக மாறுகிறது. உலகத்தினுடைய சுழற்சிகூடப் பல்லாயிரம், ஆண்டுகளுக்கு முன்னர் சுழன்றதைப் போன்று ஒரே வேகத்தில் சுற்றினாலுங்கூட, தொன்மைக் காலத்தில் மனிதச் சிந்தனையினுடைய சுழற்சி வேகம் குறைவு. சங்ககாலத்தில் - திருவள்ளுவர் காலத்திலே இருந்த சிந்தனைச் சுழற்சி அதைவிட அதிகம். கடந்த நூற்றாண்டிலே இருந்ததைவிட இன்றைக்கு மாந்தர் எண்ணங்களுடைய வளர்ச்சியும், சுழற்சியும் பலமடங்கு வேகமானது. நாம் வாழும் சூழல் மாற்றம் அதைவிட அதிகம். சூழ்நிலை மாறுகிறபோது மனிதனின் எண்ணங்கள், விருப்பங்கள் எல்லாங்கூட நிலைத்து நிற்கமுடியவில்லை. வேகமாக ஓடுகிற நீரோட்டத்திலே குளிக்க இறங்கியவன்,

நீரோட்டத்தால் இழுக்கப்படுகின்ற நிலையில் கரையேறுவதற்கு முயல்வதைப் போல, காலவேகத்துடன் போட்டியிடும் அறிவியல் வளர்ச்சி, போக்குவரத்து விரைவு, உலகோர் நெருக்கம், கருத்துக்கள் பரிமாற்ற வாய்ப்பு, பத்திரிக்கைப் பெருக்கம், வானொலி - தொலைக்காட்சி வளர்ச்சி, இண்டர்நெட் வசதி, ஆகியவற்றால் மக்கள் எண்ணங்களும் பெருகி, எதிலும் மனநிறைவில்லாத நிலைமையும் பிறந்து, அப்படியொரு நெருக்கடியில் உழலுமாறு நமது வாழ்க்கை அமைந்திருக்கிறது. எனவே, பழைய நிகழ்ச்சிகளை, நமது கடந்தகால வரலாற்றை அறிந்து கொள்வதிலும், ஆழமாக எண்ணிப் பார்ப்பதிலும் ஆர்வம் ஏற்படுவதில்லை.

பலருக்கும் தத்தம் தாய் தந்தையர் பெயர் தெரியும்; பாட்டனார் பெயர் தெரியலாம்; முப்பாட்டனார் பெயர் நிச்சயமாகத் தெரியாது. அதற்குக் காரணம் வரலாற்றுப் பெருமை உணர்வும் இனப்பற்றும் நமக்குக் குறைவு என்பதுதான். எதனாலே குறைந்தது? வரலாற்றுப் பெருமை கொள்ளும் சூழலையும் நமது இனம் எது என்னும் கருத்தையும் நாம் இழந்துவிட்டோம். வரலாற்றுப் பெருமை மங்கிப் போன சூழ்நிலையில், அந்நிய ஆங்கிலேயர் ஆட்சியில் அடிமைப்பட்டவர்களாய், 'நாம் அடிமை' என்ற எண்ணத்தில், பல ஆண்டுகள் இருந்ததால், நமது இனம், மொழி குறித்த பல வரலாற்று உண்மைகள் வெளிப்பட்டாலுங்கூட நம்முடைய உணர்வில் நாம் ஒரு பெருமைக்குரிய சமுதாயம் என்ற நம்பிக்கை இழந்த ஒரு கூட்டமாகவே நடமாடுகிறோம்.

திராவிடர் இயக்கத்தைப் பற்றி இங்குப் பேசுகிறபோது, பேராசிரியர் தாண்டவன் அவர்கள் வரலாற்றுச் செய்தியை விளக்கப் பார்ப்பனர் என்ற சொல்லைப் பயன்படுத்தியபோது சமூகநீதியை உணர்ந்தவர்தான் பேராசிரியர் என்று நான் எண்ணி மகிழ்ந்தேன். ஆனால், இன்றைக்குப் 'பார்ப்பனர்'

என்று சொல்வதற்காக யாரும் குறை படமுடியாது. நாட்டு விடுதலையிலும் சமுகச் சமத்துவத்திலும் ஆர்வம் கொண்ட தேசியக்கவி பாரதியார்,

*'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப்*
*பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே'*

என்று பாடியுள்ளார்.

அந்தச் சொல்லுக்கு ஒரு கண்டனப் பொருள் இருக்குமானால், அந்தப் பொருளில், வெறுப்பில் அந்தச் சொல்லைப் பயன்படுத்திய நிலையிலிருந்து இன்று மாறியிருக்கிறது. இருந்தாலுங் கூட நான் ஓர் அடிப்படை உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தச்சொல் ஒரு கொள்கைச் சார்பைத்தான் இன்று குறிக்கின்றது. திராவிடர் இயக்கத்தைப் பற்றிப் பேசுகிற ஒருவர் ஒருவேளை ஆரியராகக்கூட இருக்கலாம். அதை எதிர்த்துப் பேசுகிற சிலர் திராவிடராகவேகூட இருக்கலாம். தனி மனிதனுடைய இனத்தைத் தீர்மானிக்கும் சொல்லாகவே இந்த 'ஆரியர்', 'திராவிடர்' பெயர்களை நாம் கருதத் தேவையில்லை. ஆனால், தொன்மையான இரண்டு பெரிய, தனித்தனிக் கலாச்சாரங்களுடைய பெயர்களாக அமைந்திருப்பவை அவை. கலாச்சாரம், என்பது மொழி, பண்பாடு, கலை, நாகரிகம் அதற்குப் பின்புலமாகக் காணப்படுகிற ஒரு தனி வரலாறு ஆகியவற்றைச் சுட்டுபவை அப்பெயர்கள். ஆனால், பாதிக்கப்பட்ட மக்கள் அதன் காரணத்தைக் குறிப்பிடுவதற்குத் திராவிடர், ஆரியர் என்னும் இனப் பெயர்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. உண்மையாகவே இந்தக் கருத்துக்களை, ஒரு கட்சியைச் சார்ந்தவன் என்னும் முறையில் பேசினால் இந்தக் கருத்தரங்கம் சிறக்காது என்ற காரணத்தால், நான் சில எண்ணப் போக்குகளை மட்டுமே சில சான்றுகளைக் கொண்டு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

தென்னாட்டுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அந்தச் சிறப்பு அரசியல் நிலையால் உருவானது அல்ல; தெற்கே நிலவும் கலாச்சாரத்தின் சிறப்பு நிலையினால் உருவானது. ஆனாலும், பிறரால் மதிக்கப்படாமல் மங்கிப்போகிற - பிறருக்குத் தாழ்ந்துள்ள ஒரு நிலை கடந்த 300, 400 ஆண்டுகளாக நாளடைவில் வளர்ந்து வந்துள்ளது. ஆங்கிலேயருடைய தலைநகரம் தில்லியாக அமைந்தது. முகம்மதிய சுல்தான்களின் பேரரசுகளின் தலைநகரமும் தில்லியாக அமைந்தது. எனவே, 400, 500 ஆண்டுகளாகவே, தில்லிக்கு ஏற்பட்ட அந்தச் சிறப்பு, தலைநகரத்தையொட்டி, அங்கே வாழுகிற மக்களையும் சார்ந்தது. அவர்களுக்கே இந்த நாட்டு ஆட்சி உரியதாக எண்ணுமளவுக்கு ஓர் எண்ணம் கால்கொண்டது. இந்தியாவின் பிற பகுதி மக்கள் அவர்கள் ஆட்சியில் இடம் பெற்றவர்கள் என்னும் மனப்பான்மையும் வளர்ந்தது.

மேல்நாட்டாருடைய ஆய்வுகள் எல்லாம் முதன்முதல் சமற்கிருத மொழி ஏடுகளைப் பற்றியதாக அமைந்துவிட்டதால் அவ்வடமொழி அடிப்படையிலேயே இந்திய நாகரிகம் மதிக்கப்பட்டது. உலகமே வியக்கத்தக்க கருத்துக்கள் எல்லாம் வேதங்களில் இருக்கின்றன, உபநிடதங்களிலும், சாத்திரங்களிலும், இதிகாசங்களிலும் இருக்கின்றன என்று கூறப்பட்டதை நம்புகிற வெளிநாட்டார் அதிகம் இருந்தார்கள் என்பதனாலும், தெற்கே வழங்கும் மொழிகளையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் அறிந்து ஆய்வு செய்வதற்கான ஆர்வம் மேல்நாட்டாருக்குங்கூட நீண்ட நாள் வரை ஏற்படாததாலும், அவர்களால் ஆரியமே போற்றி மதிக்கப்பட்டது. அந்தச் சூழ்நிலையின் தாக்கத்தால் தென்னகத்தினுடைய மொழி, கலாச்சாரம், பண்பாடு, இனம் ஆகியவற்றின் தனிச் சிறப்பு விளங்கித் தோன்றாமல் போய்விட்டது., அந்த நிலையிலிருந்து கொஞ்சம் விழிப்புற்ற

நிலையில், தென்னாட்டின் இணையற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவையிலே ஏப்ரல் 1962இல் பேசுகிறபோது இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

I claim, Sir, to come from a country, a part in India now, but which I think is of a different stock, not necessarily antagonistic. I belong to the Dravidian Stock. I am proud to call myself a Dravidian. That does not mean that I am against a Bengali or a Maharashtrian or a Gujarathi. As Robert Burns has stated, "A man is a man for all that, I say that I belong to the Dravidian stock, and that is only because I consider that the Dravidians have got something concrete, something distinct, something different to offer to the nation at large. Therefore it is that we want self-determination."

தலைவரவர்களே! இந்தியாவின் பகுதியாகத் தற்போதுள்ள ஒரு நாட்டிலிருந்து நான் வந்திருக்கிறேன். அங்குள்ள மக்கள் ஒரு வேறுபட்ட இனமாயினும் - முற்றும் எதிரான இனமல்ல என்றே கருதுகிறேன். நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன், திராவிடன் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். அதனாலேயே நான் வங்காளியருக்கோ அன்றி மராத்தியருக்கோ அல்லது குசராத்தியருக்கோ எதிரானவன் என்று பொருளாகாது. இராபர்டு பர்ன் - கூறியுள்ளதைப் போன்று, “மனிதன் என்பவன் எந்த இனமாயினும் மனிதனே.”

“நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று கூறிக் கொள்வதற்குக் காரணம் என்னவெனில், ஒருவகையில் திட்டவட்டமானதும், தனித்தன்மை வாய்ந்ததும், வேறுபட்டதுமான ஒரு பண்பினை - பரந்து விரிந்த இந்தச் சமுதாயத்திற்கு வழங்கக் கூடியவர்களாகத்

திராவிடர்கள் இருக்கிறார்கள் என்று நான் கருதுவதால்தான். அதனால்தான் - நாங்கள் சுயநிர்ணய உரிமை வேண்டுமென்கிறோம்," என்று பேசினார் அறிஞர் அண்ணா.

ஓர் அரசியல் கண்ணோட்டத்திலே தென்னாட்டுக்காகக் குரல் எழுப்புகிற முறையில் தமிழ்நாடு - திராவிடநாடு, தமிழ்மொழி, பண்பாடு, நாகரிகம், திராவிட மொழிகள், கலைகள் ஆகியவைகளுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான முக்கியத்துவத்தை வலியுறுத்தும் உணர்வோடு, அண்ணா அவர்கள் 'தென்னாடு அகில இந்தியாவிற்கும் வழங்குவதற்கான ஒரு தனித்தன்மை - சிறப்புடையதான கலாச்சார மேன்மை கொண்டதாக இருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள். ஒரு வேளை, அண்ணா அவர்கள் சொன்னது என்பதால், அந்தக் கருத்துக்கு அனைத்துத் தரப்பினரும் இசைவு தெரிவிப்பது கடினமல்லவா?

நூறு ஆண்டுகட்கு முன்னரே சுவாமி விவேகானந்தர் சொல்கிறார்:

The Madras Presidency is the habitat of the Tamil race whose civilization was the most ancient and a branch of whom called the Sumerians, spread a vast civilization on the banks of the Euphrates, in very ancient times, whose astrology, religious lore, morals furnished the foundation for the Assyrian, and Babylonian civilization, and whose mythology was the source of the Christian Bible. Another branch of the Tamilians spread from the Malabar coast, and gave rise to the wonderful Egyptian civilization, and the Aryans also are indebted to this race in many respects.

சென்னை மாநிலத்தை வாழ்விடமாகக் கொண்டுள்ள தமிழர்கள், மிகவும் தொன்மையானதொரு நாகரிகம் பெற்றவர்களாதலின், அவர்களில் ஒரு பிரிவினரான

சுமேரியர்கள், மிகவும் பழங்காலத்திலேயே யூப்ரடீஸ் நதிக்கரையில் விரிந்ததொரு நாகரிகத்தைப் பரப்பியதால், அவர்தம் சோதிடக்கலை, மதப்பழங்கதைகள், ஒழுக்க நெறிகள் ஆகியவையே அசிரியன், பாபிலோனிய நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையானதுமன்றி அவர்தம் புராணச் செய்திகளே கிறித்தவர்களின் விவிலியத்திற்கு (பைபிள்) மூலமாகவும் அமைந்தன. மேற்குக் கடற்கரையில் (மலபார்) இருந்து சென்று பரவிய மற்றொரு பிரிவான தமிழர்களே -வியக்கப்படும் எகிப்திய நாகரிக வளர்ச்சிக்கும் காரணமாயினர். ஆரியர்களும் இந்தத் தமிழ் இனத்திற்குப் பல வகையிலும் கடமைப்பட்டுள்ளனர், என்று கூறியுள்ளார் சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தர் அரசியல்வாதி அல்லர். திராவிடர் இயக்கத்தைக் கண்டதால் இப்படிச் சொல்கிறவர் அல்லர். உலகத்திற்கெல்லாம் ஒரு கலாச்சாரத்தை வழங்கிய வரலாறு படைத்த ஒரு தொன்மையான இனத்தைச் சார்ந்தவர்கள் வாழுகிற நிலம் தமிழ்நாடு என்று அவர் குறிப்பிட்டார். "இந்தியாவிலேயே நல்ல பண்பாடுடைய மக்கள் வாழுகிற பகுதியாக விளங்குவது தென்னாடு!" என்று பிறிதோர் இடத்திலே சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டார். ஆகவே, தென்னாட்டுக்கு ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது; மறக்கவும் கூடாது.

குமரிக் கண்டம் என்பது இந்தியாவினுடைய தென் பகுதியோடு ஒட்டியிருந்த ஒரு காலம் உண்டு. அக்குமரிக் கண்டம் தொல்லூழிக் காலத்தில் கடல் கொண்டதால் மறைந்தது. அங்கே வாழ்ந்திருந்த மானிடர் உலகமெல்லாம் பரவினார்கள் என்பது ஒரு வரலாற்று உண்மை. அவர்கள் இன்றையத் தமிழர்களைப் போலப் பேசினார்களா,

இன்றைய தமிழ் நடை அவர்கள் பேசிய பேச்சு நடையா என்பதெல்லாம் வேறு. அந்தத் தொன்மக்களுடைய வழியிலே வந்த தமிழர்கள் நாம் என்பது இங்கு **'நீராருங் கடலுடுத்த'** என்று தொடங்கிப் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் மூலம் நாம் உணரக்கூடியது.

*"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்*
*எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்*
*கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந் துளுவும்*
*உன்னு தரத்து உதித்து எழுந்தே ஒன்றுபல ஆயிடினும்*
*ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்*
*சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!"*

என்று அப்பாடலின் பிற்பகுதியில் மனோன்மணீயம் சுந்தரனார் பாடியுள்ளார். அவர் அப்படிப் பாடியதற்கே மிகவும் முக்கியமான காரணம் தமிழ் நீசமொழி, தமிழ் சூத்திரர் மொழி, சமற்கிருதம் தேவபாடை, மந்திரமொழி, எல்லா வகையிலேயும் தகுதியில் உயர்ந்தது; தமிழ் தகுதியற்றது, திருமூலர் காலம் முதல் இறைவனை வழிபடுவதற்கேகூடச் சமற்கிருதந்தான் அர்ச்சனை மொழியாகப் பயன்பட்டது என்று சொல்லும் நிலைமை நாட்டில் இருந்தபோது, மனோன்மணீயம் சுந்தரனார் தமிழுக்கு உள்ள தகுதி வடமொழிக்கு இல்லை என்பதை வலியுறுத்த அவ்வாறு பாடினார். தமிழின் மாட்சியை விளக்க நூற்றுக்கணக்கான சான்றுகள் தரமுடியும். அதை விரிவாக விளக்க இது இடமன்று. எனவே, வழக்கிழந்த வடமொழிக்குத் தமிழைவிட உயர்வான நிலை ஏன்? என்னும் உணர்வே அதற்கு அடிப்படையானது.

சென்னைப் பல்கலைக் கழகத்திலேகூட 1926வது ஆண்டு வரையில், புலவராக வடமொழிப் பயிற்சியுடன் இணைத்துத்தான் தமிழ் படிக்க முடியும் என்ற நிலை

இருந்தது. தனியாகத் தமிழ் படிக்கச் சென்னைப் பல்கலைக்கழகத்திலே உரிமை இல்லை. மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகப் படிக்கும் வாய்ப்பு முதன் முதல் இடைநிலை வகுப்பில் 1926ஆம் ஆண்டிலும், இளங்கலை வகுப்பில் 1930 ஆம் ஆண்டிலுமே ஏற்படுத்தப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன்றுவதன் இன்றியமையாமையை வலி யுறுத்த, தமிழுக்காக ஒரு பல்கலைக்கழகம் தேவை என்று கூற வேண்டிய நிலை இருந்தது. ஆந்திராவிலே தெலுங்குக்காக ஒரு பல்கலைக் கழகம் கேட்டு, சி.ஆர். ரெட்டி அவர்கள் ஆந்திரப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். அதன் மறுவிளைவாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருக்கொண்டது.

தமிழ்மொழியைத் தாழ்த்துவதற்கு எவருக்கும் நியாயமான உரிமை கிடையாது. ஆனாலும் காலப் போக்கில் - வரலாற்றில் தாழ்த்திவிட்டார்கள். தமிழன் வீட்டுத் திருமணத்தைக்கூடத் தமிழிலே நடத்துவதற்கு உரிமை அற்றவர்களாகத் தமிழர்கள் - திராவிடர்கள் ஆகும் அளவுக்கு, வடமொழிக்கு ஓர் ஏற்றமும் உயர் தகுதியும் கொடுக்கப்பட்டன. வடமொழியிலே உயர்ந்த தத்துவச் சிந்தனை இருக்குமானால், அந்தத் தத்துவத்திலே திளைப்பவர்கள், மக்களின் தாய்மொழியான தமிழை இழிவானதாகக் கற்பித்ததேன்? தமிழ் மக்களின் இறைவழிபாட்டுக்குக்கூடத் தமிழுக்குத் தரவேண்டிய உரிமைநிலை மறுக்கப்படும் அளவுக்குத் தமிழ் இழிவுபடுத்தப்பட்டது. தமிழ் பேசுகிற மக்கள் இழிந்த பிறவி, தாழ்ந்த சாதி மக்கள் என்ற உணர்வுக்கு ஆளான காரணத்தினாலேதான் அவர்தம் மொழியான தமிழ் தாழ்த்தப்பட முடிந்தது. வடமொழியின் தாக்கத்தால் தமிழில் இருந்து பிரிந்த தெலுங்குக்கும், கன்னடத்திற்கும் மலையாளத்திற்கும் இந்நிலை பொருந்தும். அந்தக்

காரணத்தினாலேதான் மனோன்மணீயம் சுந்தரனார் **"நீராருங் கடலுடுத்த"** என்று தொடங்குகிற பாடலில், வைதிகம் வளர்க்கும் வடமொழி ஆதிக்கத்தால் தமிழ் இழிவுக்கு ஆட்படுத்தப்பட்டதைப் பொறுக்காமல், வடமொழியின் தகுதியை உணர்த்த அம்மொழி வழக்கிழந்து ஒழிந்த மொழி என்று சொன்னார். நான் மொழி அடிப்படையிலே மேலும் விளக்கம் சொல்லத் தேவையில்லை. புரட்சிப் பாவேந்தர் பாடினார்,

*" ஆதிமனிதன் தமிழன்தான், அவன் மொழிந்ததும்*
*செந்தமிழ்த்தேன்*
*முதறிஞர் ஒழுக்க நெறிகள் முதலில் கண்டதும் தமிழகந்தான்*
*காதல் வாழ்வும், புகழ் வாழ்வும் காட்டியதும் தமிழ்*
*நான்மறைதான்*
*ஓதும் அந்தத் தமிழ் நான்மறை உலகம் போற்றும்*
*முத்தமிழ்தான்"*

என்று தமிழனுடைய பெருமையை விவரித்தார். மேலும் ஒரு பழம் பாடல் தமிழின் மாட்சியை உணர்த்துகிறது.

*"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழ விளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று, ஏனையது*
*தன்னேர் இலாத தமிழ்"*

என்பது அப்பாட்டு. உலகோர் துயருக்கு இடமாகும் இருளகற்றுவன இரண்டு - ஒன்று செஞ்ஞாயிறு - மற்றொன்று செந்தமிழ் என்பது பாடல் தரும் கருத்து. உலகத்தில் தோன்றிய முதல் மனிதனோடு ஒட்டிய உறவுடைய இனம் என்று, உலகத்து மக்களிடையே பல்வேறு தொடர்பு காட்டக்கூடிய இனம் இருக்குமேயானால் அவர்கள் தமிழர்களாக - திராவிடர்களாகத்தான் இருப்பார்கள். தமிழ் பேசுகிறவர்களை மட்டுமே நான் குறிப்பிடவில்லை. திராவிட இனம் என்று வரலாற்றில்

அடையாளம் காட்டப்படுகின்ற தென்னாட்டு இனத்தைக் குறிப்பிடுகிறேன். அதேபோன்று ஒரு வகை உறவு காட்டக்கூடிய இன்னோர் இனம் இருக்குமானால், அவர்கள் கருப்பு நிற நீக்ரோக்களாக இருப்பார்கள். வெள்ளை நிறத்தார் அல்ல. அதற்கு மேலும் தொடர்பு காட்டக்கூடியவர்கள் இருப்பார்களேயானால் இப்போது பெரும்பாலும் அழிந்துவிட்ட அமெரிக்கப் பழங்குடிகளான சிவப்பு இந்தியர்களாக இருப்பார்கள்.

*“முந்திய நாளினில் அறிவும் இலாது,*
*மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது,*
*செந்தாமரைக் காடு பூத்தது போலே,*
*செழித்தஎன் தமிழே, ஒளியே, வாழி!”* என்றும்

*“மானிடம் என்னுமோர் ஆதிப்பயிர் - தமிழ்*
*மக்களென் றேகுதித் தாடுவமே!*
*கானிடை வாழ்ந்திட்ட மனிதர்க்கெலாம் - நல்ல*
*கதியினிக் காட்டினர் தமிழரென்றே!”*

என்றும் புரட்சிப் பாவேந்தர் பாடினார். உலக நாகரிகத்திற்கு வித்திட்டவர் தமிழர் என்ற கருத்தினை அவ்வாறு அவர் குறிப்பிடுகிறார்.

உலகமொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ் என்பது மொழி நூல் ஆசிரியர்கள் பலருடைய கருத்து. ஆனால், உலகம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. உலகத்திலே மேற்கு நாடுகளிலே வழங்குகிற கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம் போன்ற மொழிகளின் பல்வேறு சொற்கள் தமிழோடு - திராவிடத்தோடு வேர்ச்சொல் தொடர்புடையவை என்பது யாழ்ப்பாணம் நல்லூர் ஞானப்பிரகாசர் என்ற அறிஞரால் எடுத்துக்காட்டப்பட்டு, அந்த அடிப்படையில் ஒப்பியல் மொழி நூல் அறிஞர் தேவநேயப் பாவாணரால் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தமிழின் வேர்ச் சொற்கள்

ஐரோப்பிய மொழிகளில் காணக்கிடப்பதை மொழி ஆய்வாளர் ஞானகிரி நாடார் விரிவாக ஆராய்ந்து தெரிவித்துள்ளார். சப்பான் நாட்டு அறிஞர்கள் அவர்தம் மொழிக்கும், தமிழுக்கும் உள்ள உறவை எடுத்துக் காட்டுகின்றனர். மொழி, கலாச்சார அடிப்படையில், சீன மொழியிலே கூடத் தமிழ்க் கலாச்சாரத் தொடர்பு இருக்கிறது. புத்தமதம் வடபுலத்திலே தோன்றினாலுங்கூடப் பின்னர்த் தென்னகத்திலே வளர்ந்து துளிர்த்திட்ட காலத்தில் அம்மதத்தில் தேர்ந்த ஞானிகளாகித் தத்துவ விளக்கம் செய்த பலர் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள். இத்துணைப் பெருமைகள் இருந்தாலுங்கூட இந்தியா முழுவதிலும் திராவிடப் பண்பாடு, கலாச்சாரம் மதித்துக் கருதப்படாமலே, ஆரியக் கலாச்சாரமே நிலவுவதாகக் கருதப்பட்டது.

பாரதியார் பரந்த உள்ளம் படைத்த தேசியக் கவிஞர். அவருக்கு உண்மை என்று மனத்தில் தோன்றியதை மறைத்தவர் அல்லர். ஆனால் அன்றைக்கு இருந்த சூழ்நிலையின் தாக்கத்தால் அவர் இந்தியர்களைப் பெருமைப்படுத்த ஆரியநாடு, ஆரியக் கலாச்சாரம், ஆரிய மைந்தர்கள், ஆரிய வீரர்கள் என்றெல்லாம் போற்றிப் பாடியிருக்கிறார். ஏனென்றால், ஆரிய - திராவிட இனவேறுபாடு பற்றி, ஆரியத்தால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்காத காலம் அது. அந்தச் சூழ்நிலையிலும் இராமசாமி சாத்திரி என்னும் வரலாற்று ஆசிரியர் இவ்வாறு எழுதுகிறார்.

During the Vedic age we have reason to infer that the Tamilians or Dravidians inhabited this land from the Himalayas to Cape Comerin and beyond and several of the Tamil Princes in Northern India were well versed in the philosophy of the Arrivars. Probably it was to one of these rulers, that the four Brahmans of the Chandokya Upanishad resorted for spiritual

enlightenment. In the process of time it came to pass that many of the ideal and words of this system found a prominent place in some of the Vedic songs and Upanishads, and a cycle of Sanskrit literature called Tantric or Agamic came into being as adoptions of the mystic lore of Tamil hymns. (The Hindu culture and Modern Age - Page - 381)

ஆரியர்களின் வேதப் பண்பாட்டுக் காலத்தில் இந்நிலத்தில் தமிழர்கள் - திராவிடர்கள் இமயத்திலிருந்து குமரி முனை வரையிலும், அதற்கப்பாலும் பரவி வாழ்ந்திருந்ததுடன் வடஇந்தியாவில் இருந்த தமிழ் மன்னர்கள் பலரும் அறிவர்களின் (சித்தர்) தத்துவத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று நாம் கருதுவதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறப்படும் பிராமணர் நால்வரும் ஆன்மீக ஞானத் தெளிவு பெற இந்தத் தமிழ் மன்னர்களில் ஒருவரைத்தான், அணுகி வேண்டியிருக்க முடியும். காலத்தின் போக்கில் இந்த (தமிழ்) நெறியில் பிறந்த சிந்தனையும் சொற்களுமே வேதப் பாடல்கள் சிலவற்றிலும் உபநிடதங்களிலும் வெளிப்படத் தனித்துத் தோன்றும் வகையில் இடம் பெற்றுள்ளன.

இறை வழிபாட்டுத் தமிழ்ப்பாடல்களுள் சித்தர்களின் (Mystic) ஆன்மீகப் பாடல்களை அப்படியே தழுவியதாகவே சமற்கிருத இலக்கியங்களுள் ஒரு தனிப்பிரிவாகக் காணப்படும் தாந்திரிகம், ஆகமம் முதலான சாத்திரங்கள் இயற்றப் பட்டுள்ளன என்று இராமசாமி சாத்திரி குறிப்பிடுகிறார். சாத்திரி என்று நான் குறிப்பிடுவது அவர் வேதத்தை வெறுக்கும் நோக்கம் உள்ளவர் அல்லர், பொதுநோக்கம் உள்ளவர் என்பதற்காகவே.

தென்னகத்தில் தோன்றிய அறிவரின் ஆழ்மன உணர்வுகள் தொடர்பான கருத்துக்கள் வடமொழியில் இடம்

பெற்றன என்பதைச் சாத்திரி தெரிவிக்கிறார். அவர் வரலாற்றுப் பேராசிரியர் ஆவதால் தத்துவங்களைப் பற்றி அவர் கூறுவதை எப்படி ஏற்பது என்று கேட்கலாம். இந்தியாவிலேயே குடியரசுத் தலைவராக விளங்கியவர்களுள், பெரும் பேராசிரியராக, ஆய்வாளராக, தத்துவ ஞானியாக மதிக்கப்பட்டவர் சர்வபள்ளி இராதாகிருட்டிணன். அவர் எழுதுகிறார் இவ்வாறு:

"The Vedic culture which resembles that of the Homeric Greeks or the Celtic Irish at the beginning of the Christian era, or that of the pre-Christian Teutons and Salves becomes transformed in the epics into the Hindu culture through the influence of Dravidians. The Aryan idea of worship during the earliest period was to call on the Father sky or some other shining one to look from on high on the sacrificer, and receive from him the offering of fat or flesh; cakes and sura drink. But soon puja or worship takes the place of Homa or sacrifice. Image worship which was a striking feature of the Dravidian faith was accepted by the Aryans. The ideals of vegetarianism and non violence (Ahimsa) also developed. The Vedic tradition has dominated by the Agama and today Hindu culture shows the influence of the (Dravidian) Agama as much as that of the Vedas. The Aryan and the Dravidian do not exist side by side in Hinduism. Contact with the highly civilised Dravidians led to the transformation of Vedism into a theistic religion".

“ஹோமர் காலத்துத் கிரேக்கர்கள், கிறித்தவ ஆண்டின் துவக்கத்தில் வாழ்ந்த கெல்டிங் - ஐரிஷ்காரர்கள் அல்லது கிறித்துவுக்கு முற்பட்ட காலத்து டியூட்டர் அல்லது சால்வ் மக்கள் பண்பாட்டை ஒத்திருக்கும் வேதகாலத்துப் பண்பாடானது, அதன் பின்னர்த் தோன்றிய இதிகாசங்களில்

காணப்படும் இந்துப் பண்பாடாக, திராவிட மக்களின் செல்வாக்கின் (தாக்குரவின்) விளைவாகவே மாற்றம் அடைந்துள்ளது.

அவர்கள் தந்தையாக மதித்த வானமோ, அன்றி வேறு எந்த ஒளி உமிழும் கோளோ, மேலிருந்து யாகம் செய்பவரைக் காண்பதாகவும், அவர்கள் வழங்கும் இறைச்சியையோ, தசையையோ, ரொட்டியையோ மதுபானத்தையோ (சுரா) ஏற்பதாகவும் கருதிடும் நிலையிலேதான் தொன்மையான காலத்தில் வழிபாடு பற்றிய ஆரியரின் எண்ணம் இருந்தது. ஆனால் விரைவிலேயே (திராவிடரின்) பூசை அல்லது (உருவ) வழிபாட்டுமுறை (ஆரியரின்) ஓமம் அல்லது யாகத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. திராவிடரின் மதத்தில் சிறப்பான இடம் பெற்ற திரு உருவ வழிபாடு ஆரியர்களால் ஏற்கப்பட்டது. உயிர்கட்குக் கேடு செய்யாமையும், புலால் உண்ணாமையும் ஆகிய நெறிகளும் இடம் பெற்று வளரலாயின. வேத மரபு வழி (திராவிடர்களின்) ஆகமத்தின் செல்வாக்குக்கு ஆட்பட்டது. அதனால் இன்றைய இந்துப் பண்பாடு வேதத்தின் செல்வாக்கிற்கு ஈடாக, ஆகமத்தின் செல்வாக்கிற்கு ஆளாகி இருப்பதைக் காணமுடிகிறது. இந்து மதத்தில் ஆரியமும் திராவிடமும் ஒன்றன் பக்கம் ஒன்றாக இடம் பெற்றிருக்கவில்லை. சிறந்த நாகரிக வளர்ச்சி பெற்றிருந்த திராவிடர்களுடன் கொண்ட தொடர்பினால், (இறைக்கொள்கை அறியாத) வேத மதம் இறை நம்பிக்கை கொண்ட மதமாக மாற்றமடையலாயிற்று."

வேத வழிப்பட்ட, ஆரிய நாகரிகம், இந்த இந்தியாவிலே தோன்றிய தலையான நாகரிகம் என்றெல்லாம் சொல்லிப் பெருமைப்படுகிறார்கள் அல்லவா? டாக்டர். இராதாகிருட்டிணன் சொல்கிறார்,

'ஆரியர்களின் வடமொழிச் சாத்திரங்களில் இடம் பெற்றிருக்கிற சில தத்துவச் செய்திகள் எல்லாங்கூடத் திராவிடர்களிடமிருந்து ஆரியர்கள் பெற்ற அறிவு காரணமாகவே சமற்கிருத சாத்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன' என்னும் கருத்தைக் கூறியுள்ளார். அந்த நாளிலே திராவிட இன மக்கள்தான் இந்தியா முழுவதும் பரவியிருந்தார்கள். அந்நாளில் வந்து குடியேறியவர் ஆரியர் என்பது வரலாறு. அந்த அடிப்படையில்தான் நாட்டின் கலாச்சாரம் உருவானது குறித்து விளக்கியுள்ளார். தனிப்பட்ட மனிதரை, அவர்தம் கலாச்சாரக் கோட்பாட்டால் அன்றி வேறு வகையில் ஆரியராகவோ - திராவிடராகவோ கருதுவதற்கு இன்று அவசியமில்லை.

இன்றைக்கு 3000 ஆண்டுகட்கு முன் மக்கள்தொகை மிகவும் குறைவாகத்தான் இருக்கும். ஆற்றோரங்களில் மட்டுந்தான் மக்கள் தொகை கொஞ்சம் அதிகமிருக்கும். அந்நாளில் இந்தியா (பரத கண்டம்) முழுவதும் 3 - 4 கோடி பேர்தான் வாழ்ந்திருக்கலாம். வடபுலத்தில் 2-கோடியும் - தென்னாட்டில் 1-கோடியும் தமிழகத்தில் 50-இலட்சமும் இருக்கலாம். அந்நாளில் வந்தேறிய ஆரியர்களும் 2-இலட்சம் முதல் 3-4 இலட்சம் வரை இருக்கலாம்.

ஆனால், கற்பிக்கப்படும் செய்திகளில் - புராணங்களில் முப்பத்து முக்கோடி தேவர் என்பது - அக்கால ஆரியரின் கருத்துப்படி மறைந்த அவர்தம் முன்னோரின் தொகையாக வேண்டும். பாரதப்போரில் இடம் பெற்றதாகக் கற்பிக்கப்படும். படைவீரர் தொகையோ இக்கால இந்தியப் படைவீரர் - தொகையையும் மிஞ்சும் எனில், அதன் உண்மைத் தகுதியை நாம் தெளியலாகும். ஆனால், அப்படிப்பட்ட பொய்யான கற்பனைகளாலேயே புராண இதிகாசங்கள் - மக்களை மயக்குதற்கு ஏதுவாயின. அப்படிப்பட்ட தொன்னாளில்

ஆரியரின் வேத நாகரிகம் - கிறித்தவ நூற்றாண்டுத் தொடக்க கால கிரேக்கர் - அல்லது கெல்டிக் இனத்தாரின் நாகரிகமோ அல்லது கிறித்துவுக்கு முற்பட்ட கால டியூட்டன்களும் சால்வுகளும் கொண்டிருந்த நாகரிகமோதான் - இதிகாசங்களிலும், இந்து நாகரிகத்திலும் - திராவிடர்களின் செல்வாக்கின் விளைவாக இடம் பெற்றிருக்கிறது என்கிறார் சர்வபள்ளி இராதாகிருட்டிணன். இது குறித்து ஆய்வாளர்கள் தரும் விளக்கம் சற்று வேறுபடினும், திராவிடத்தின் செல்வாக்கு ஆரியத்தில் பதிந்துள்ளது என்பதை மறுப்பார் இல்லை.

அக்காலத்தில் திராவிடர்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து வந்தவர்கள் ஆக இருக்கலாம் என்னும் தவறான கருத்து நிலவியதாலும், தென்னகத்திலிருந்தோ, கடலில் மறைந்த குமரிக்கண்டத்திலிருந்தோ மேற்கே சென்றவர்கள்தான், சுமேரிய, கிரேக்க, எகிப்திய நாகரிகங்கள் உருவாகக் காரணமானவர் என்னும் கருத்து வலுப்பெறாததாலும், பின்னர் அப்பகுதிகளிலும், இந்தியாவில் நுழைந்த ஆரிய இனத்தின் மற்றொரு பிரிவினர்தான் பலகிளைகளாகப் பரவினர் என்னும் வரலாற்று உண்மை தெளியப் படாததாலும் அவர் இப்படிக் கருத நேரிட்டிருக்க வேண்டும். ஆனால், தென்னாட்டையே மூல வாழ்விடமாகக் கொண்டிருந்த திராவிடர்களிடமிருந்துதான் ஆரியர் நாகரிகத் தத்துவச் சிந்தனை பெற்றனர் என்பதும், அவையே ஆரியர் உபநிடதங்களில் இடம்பெற்றன என்பதும் இன்று அறிஞர் பலரால் தெளிவாக்கப்பட்டுள்ளன.

தொடக்கக் காலத்தில் ஆரியர்கள், வானத்தையோ அல்லது யாதேனும் ஓர் ஒளிரும் கோளையோ தம் தந்தையாக மதித்ததால் அவை தாம் செய்யும் யாகத்தை மேலிருந்து காணும் என்னும் கருத்தினராய், யாகத்தில்

இடும் இறைச்சியுடனோ, ஊனுடனோர் வழங்கும் சுரா பானத்தையும் ஏற்கும் என்றும் நம்பி யாகம் செய்தனர். விரைவாகவே அக்கினி ஓமம் - உயிர்ப்பலி யாகம் ஆகியவைகட்குப் பதிலாக, உருவ வழிபாட்டுப் பூசை செய்யும் முறைகள் இடம் பெற்றன. திராவிடச் சமய நெறியின் சிறப்பு வாய்ந்த இறை உருவ வழிபாடு - ஆரியர்களால் ஏற்கப்பட்டது. புலால் உண்ணாமையும் எவ்வுயிர்க்கும் கேடு செய்யாத கொள்கையும் வளரலாயின. வேதம் போற்றும் வைதிக மரபு (திராவிட) ஆகம முறையின் செல்வாக்கிற்கு ஆட்பட்டதால், இன்றைய இந்துப் பண்பாட்டில் ஆகமத்தின் செல்வாக்கு - வேதத்தின் செல்வாக்குக்கு இணையாகவே இருக்கிறது.

இந்துச் சமயத்தில் ஆரிய திராவிடப் பண்பாட்டுக் கூறுகள் - ஒன்றன் பக்கம் ஒன்றாகத் தனித்தனியாக இல்லை. உயர்ந்த நாகரிகம் வாய்ந்த திராவிடர்களுடன் ஏற்பட்ட தொடர்பில், வேத மதம் - கடவுள் நம்பிக்கை மதமாக மாற்ற மடைந்துள்ளது. வேத அடிப்படையில் கடவுள் கோட்பாடு கொள்ளாத ஆரியம் - திராவிடத் தொடர்பால் ஒரு கடவுள் கோட்பாட்டைத் தழுவியதாக மருவியது.

மொஹஞ்சதாரோ, அரப்பாவிலே வாழ்ந்தவர்களைப் போன்றதொரு நாகரிக வளர்ச்சியோடும் ஒரு தத்துவச் சிந்தனையோடும் வாழ்ந்த திராவிடர்களோடு ஏற்பட்ட உறவு காரணமாகத்தான் ஆரியர்களிடம் அந்த மாற்றம் விளைந்தது என்று டாக்டர் இராதாகிருட்டிணன் சொல்கிறார்.

திராவிட நாகரிகமே இந்துமதம் தத்துவ முறையில் கடவுள் ஒன்றெனப் போற்றுகிற சமயமாக, மாறுவதற்கு வழிவகுத்தது என்று கூறுகிறார். வேதங்களிலிருந்து அறியப்படும் முறையில் ஒவ்வொரு காலகட்டத்தில்

ஒவ்வொன்றை உயர்வாகக் கருதி சூரியன், அக்கினி, இந்திரன், போன்ற பல தெய்வங்களைப் போற்றி வந்த ஆரியர் - பிரும்மா, விட்டுணு, ருத்திரன் என்னும் மும்மூர்த்திகளைப் போற்றி - யாகத்திற்கு அதிபதியாக அவற்றுள் ஒன்றை அழைக்கும் வழக்கத்தினராய் மாறிய காலத்திலும், 'கடவுள்' ஒன்றே என்னும் தத்துவக் கொள்கையை விளங்கிக் கொண்டவர் ஆகவில்லை என்பதற்குச் சான்றுகள் பல. அக்காலத்திற்குப் பின்னர் ஆரிய நாகரிகத்தில் பிரம்மம் - கடவுள் ஒன்றெனும் கொள்கையும் இடம்பெற்றது. அதிலே சில விளக்கங்களில் வேறுபாடு இருக்கலாம். ஒரு வேளை இங்கிருந்தும் மக்களிடம் நிலவிய சிலவகைக் கடவுள் நம்பிக்கை அங்கே போயிருக்கலாம்; அங்கிருந்தும் சில இங்கு வந்திருக்கலாம் என்பது வேறு. கடவுளைக் குறித்துப் பகுத்தறிவு அடிப்படையில் சிந்திக்க அக்காலம் இடந்தராது.

வரலாற்று ஆசிரியர் கே.எம். பணிக்கர் (A survey of Indian History) இவ்வாறு தெரிவித்துள்ளார்:

The doctrine of the Aryan origin of the Indian civilization which finds no support in Indian literature, which does not consider the Dasus as uncivilised, is the result of the theories of 'Indo-Germanic' scholars who held that everything valulable in the world originated from the Aryans. Not only is Indian civilization pre-vedic but the essential features of Hindu religion as we know is to day, were present in MohenjoDaro. "There is enough in fragments we have recovered" says Sir John Marshall about the religious articles found in the sites, "to demonstrate that.... this religion of Indus people was the lineal progenitor of Hinduism". In fact Siva and Kali, the worship of Lingam and other features of popular Hinduism were well established in India long before the Aryans came".

இந்திய நாகரிகம் வந்தேறிய ஆரியத்தினால்தான் தோன்றியது என்னும் கொள்கைக்கு எவ்விதமான ஆதாரமும், பழங்குடியினரான தாசர்களை நாகரிகமற்றவர் என்று கருத இடமளிக்காத இந்திய இலக்கியத்தில் இல்லை எனினும், உலகில் காணப்படும் மதிப்பு மிக்கவை எவையாயினும், ஆரியரிடமிருந்து தோன்றியவையாகவே இருக்க வேண்டும் என்னும் கருத்துடைய இந்தோ - செருமானியர்களின் கோட்பாட்டின் விளைவாக உருவானதே அக்கொள்கை.

இந்தியாவுக்கு வந்த இந்தோ செருமானிய அறிஞர்கள்தாம் முதன் முதலாக இங்குச் சமற்கிருதத்தில் இருந்த பல நூல்களை மொழி பெயர்த்தார்கள். அதற்குக் காரணம் அவர்கள் கொண்டிருந்த ஆரியன் என்ற இனக் கலாச்சார உணர்வுதான். இந்தோ செருமானியர் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அந்த அறிஞர்கள் எல்லோருமே உலகத்தில் மதிக்கப்படக்கூடிய அனைத்துமே ஆரியர்களிடமிருந்தே பிறந்ததெனும் கருத்தினராதலின் ஆரியர்களின் நாகரிகமே இந்தியாவினை நாகரிகப்படுத்தியது என்ற தவறான கருத்தை அன்று கொண்டுவிட்டார்கள்.

இந்திய நாகரிகம் என்பது வேத காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே நிலவியது மட்டுமன்றி இன்று காணப்படும் இந்து மதத்தின் இன்றியமையாத கூறுபாடுகள் (பண்பாடுகள்) பலவும் மொகஞ்சதாரோவில் வாழ்ந்த (திராவிட) மக்களிடம் இடம் பெற்றிருந்தவையே ஆகும்.

சிந்து நதிக்கரை மக்களிடம் நிலவிய மதத்தின் வழிப்பட்டதாக வந்ததே இந்துமதம் என்பதை எடுத்துக் காட்டுதற்கு வேண்டிய பேரளவிலான சிதிலங்களை நாம் அகழ்வாய்வினால் கண்டெடுத்துள்ளோம் என்று, அந்த இடங்களில் காணப்பட்ட மதச்சார்பு காட்டும் பொருள்களைக் குறித்து ஆய்வு நடத்திய சர் ஜான் மார்ஷல் கூறுவதுடன்,

உண்மையில் சிவனும், காளியும், லிங்க வழிபாடும் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற இந்து மதத்தின் பிற கூறுபாடுகளும் ஆரியர் வருகைக்கு நெடுங்காலம் முன்னரே இந்தியாவில் நிலை கொண்டிருந்தவையாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

இன்றைக்கு உயர்வாக எவ்வெவற்றைக் கருதுகிறோமோ அவை மொகஞ்சதாரோவிலே, அரப்பாவிலே நிகழ்ந்த அகழ்வு ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட உண்மைகளாக இருக்கின்றன. இவற்றைக் குறிப்பிடுவது ஆரியர்கள் வந்தவர்கள் என்பதால் அவர்களை அந்நியராகக் கருதவேண்டும் என்பதற்காக அல்ல. 'திராவிடர்' என்னும் ஓர் இனம் இந்த நாட்டில் இருந்ததையே பல பேர் அறியாதவர்களாக இருப்பதால் நாட்டின் வரலாற்றில் திராவிட இனம் உரிய இடம் பெறாததாக இருக்கிறதே என்பதாலும், திராவிட இன வரலாற்று உண்மைகளை நாம் அறியவேண்டும் என்பதற்காகவும், இந்தச் சூழ்நிலையிலே மெல்ல மெல்ல வேதக் கருத்து வருணாசிரம தரும கலாச்சாரமாக வளர்ந்தது. வேதத்திலே திட்டவட்டமாகப் பேசப்படாத வருணாசிரம தருமம், பிற்காலத்திலே நிலைநாட்டப்பட்டது; பகவத் கீதை அதை வலியுறுத்துகிறது. நால் வருணத்தை நானே படைத்தேன் என்று கிருட்டிணன் பகவத் கீதையிலே சொல்லியுள்ளார். இப்போது அந்தக் கிருட்டிணன் மக்களிடத்தில் வருவாரா என்றால் வரமாட்டார். ஏனென்றால், பிராமணனாகப் படைக்கப்பட்டவர் என்பவர் கூடக் கிருட்டிணன் படைப்பை முறையான செயல் என்று இன்று ஏற்கமாட்டார்கள்; காலமும் மாறியுள்ளது; அறிவும் வளர்ந்துள்ளது.

"கண்ணா! நீ படைத்த வருண முறையாலே நாங்களல்லவா பலருடைய கண்டனத்துக்கு ஆளாகிறோம்!" என்று சொல்லக்கூடிய உணர்வு அவர்களுக்குக்கூட வரும்.

மேலும், கிருட்டிணன் என்று ஒருவன் இருந்தான் என்பதே ஆராய்ச்சிக்கு உரியதாகியுள்ளது. 'பாரதப் போரிலே கலந்து கொண்டாரா? தேர் ஓட்டினாரா?' என்பதும் கேள்விக்குரியது. தோன்றிய அவதாரங்களிலே அதிகம் பொய் சொன்னதாக அறியப்படும் அவதாரம் கிருட்டிணன்தான். மூன்று நான்கு மனைவியரை மணந்திருந்த கிருட்டிணனை தெய்வீகப்பிறப்பு என்று கருதி, துவாரகையில் இருந்த கோபிகள் எல்லோரும் அவனைக் காதலித்து உறவுகொண்டதாகக் கூறும் அளவுக்கு, கிருட்டிணன் திருவிளையாடல் புரிந்ததாகக் கதைகள் இருக்கின்றன. பகுத்தறிவு எண்ணம் கொண்ட இந்துமத வழியினர் பலர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தக் காலத்திலே பிறந்த கற்பனைகளே பின்னர் மத நம்பிக்கையாக ஆகியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி Non Brahmin Regeneration in South India and the D.M.K., 1873 - 1943 என்ற பொருளில் ஆய்வு நடத்திய அறிஞர் கல்வேக்கர் என்பவர் பின்வருமாறு சொல்கிறார்: "இந்தியாவில் பொருளாதார, அரசியல், சமுதாய வாழ்வில் பிராமணீயம் மீண்டும் பிரதான ஆதிக்கம் செலுத்துவதற்குப் பிரிட்டிசு ஆட்சி உதவி செய்தது". இந்தோ செருமானிய அறிஞர்களேகூட வடமொழி அடிப்படையிலேதான் இந்தியாவைப் பார்த்தார்கள். ஆகவே, பிரிட்டிசு அரசிடமும் அந்த உணர்வுதான் இருந்தது. இந்தியக் கலாச்சாரம் சமற்கிருத ஏடுகளிலேதான் முழுமையாக இருக்கிறது என்று கருதினர். அந்த ஏடுகள் எந்த அளவு உண்மை கூறும் தகுதியுடையன என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்திருக்க அவர்களால் முடியாது. இரண்டாவதாகப் புலமை மிக்கவர்கள் - பண்டிதர் என்று சொல்லப்படுகின்ற பட்டியலிலே அந்தக் காலத்திலே சமற்கிருத அறிஞர்கள்தாம் இருந்தார்கள். அடுத்ததாகப் பாரசீக அறிஞர்கள் இடம் பெற்றனர். பாரசீக அறிஞர்கள்,

சமற்கிருத அறிஞர்கள் ஆகிய இரு சாராரை மட்டுமே வைத்துக்கொண்டு அவர்கள் கருத்துப்படிதான் நீதிமன்றங்களிலே தீர்ப்புகள் வழங்கப்பட்டன. ஆகவே பிராமணீயம் பிரதான ஆதிக்கம் செலுத்துவதற்குப் பிரிட்டிசு ஆட்சி உதவிகரமாக இருந்தது.

"பசியினாலும், அடக்கு முறையாலும் துன்பப்பட்ட தென்னாட்டுச் சமுதாயத்தின் தாழ்ந்த சாதி வகுப்பு மக்கள், பொருளாதாரத் துறையிலும் வளர வழியின்றித் தடைப்படுத்தப்பட்டுக் கிடந்தனர்". அக்காலத்திலே, வடலூர் வள்ளலார் அந்த மக்கள் நிலையை எண்ணிப் பார்த்து, கழிவிரக்கம் கொண்டு வருந்தி, அவர்தம் பசிதணிக்கும் வழிநாடிச் செயல்பட்டிருக்கிறார். மக்கள் பலர் பல நாட்கள் பசியிலே நொந்துபோய் வாடிச் சோர்ந்து, பல ஆண்டுகள் வாழக்கூடியவர்கள் சில ஆண்டுகளிலே மாண்டு போவதை வடலூர் வள்ளலார் பார்த்ததனால் பசித்தவர்க்கு உணவு வழங்குவதையே தலையான அறமாகச் சொன்னதுடன் - தரும உணவுச் சாலையும் ஏற்படுத்தினார். அப்படிப்பட்ட வறுமையின் கொடுமையில் உழலும் அளவுக்கு வருமானம் (கூலி) பெறமுடியாமல் பசியால் வாடிக்கிடந்தனர் தமிழர்கள்.

மேலும் கல்வேக்கர் கூறுகிறார்:

"அன்றிருந்த நிலைமையை அடிமைத்தனம் என்றே கூறலாம். அது ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து நிலவியது. ஒரே மதத்தைச் சார்ந்தவர்களில் மேல்சாதியினர் சமுதாயத்தைப் பிரித்து வைத்திருந்த விதம் அடிமைத்தனத்தை ஏற்படுத்தியது. பிராமணீயத்தை அமுல்படுத்தியதால் ஏற்பட்ட பிளவுகள், பாகுபாடுகள் காரணமாக, ஒரு சாதியினர் கொடுமைக்கு ஆட்படுத்தப் பட்டாலோ ஒதுக்கி வைக்கப்பட்டாலோ அந்தப் பிரச்சினை குறித்து இதர சாதியினர் ஒன்று சேர்ந்து அதை

எதிர்ப்பதில்லை; மாறாக அந்தக் கொடுமைகளைக் கண்டு மகிழ்ந்தனர்."

தமிழனுக்கு இருக்கிற ஒரே பெருமை இனம் ஆக ஒன்று சேர முடிவதில்லை எனில் இரண்டு சாதி எப்படி ஒன்றாகச் சேரும்? தமிழனுக்குப் பிரிந்து நிற்கிற இயல்பு. அது காரணமாக நீண்டகாலமாகவே தமிழர்கள் ஒன்றாக உணர்ந்தது கிடையாது. இதனால் தமிழினம் இழந்தவை ஏராளம். எனவே, அப்படி ஒரு சாதியினர் அடிமைப் படுத்தப்பட்டால், ஒதுக்கி வைக்கப்பட்டால் அந்த முறைகேடு குறித்து இதர சாதியினர் ஒன்று சேர்ந்து அதை எதிர்ப்பதில்லை; மாறாக அந்தக் கொடுமைகளைக் கண்டு மகிழ்ந்தனர்" என்கிறார் ஆசிரியர்.

ஒரு சாதிக்காரன் இன்னொரு சாதியினரைத் தாக்கினால், மற்ற சாதிக்காரன் அதைப்பார்த்து நம்மாலே தாக்க முடியவில்லை, அவனாவது தாக்குகிறானே என்று எண்ணித் திருப்தி அடையும் போக்கு உள்ளது. அதனால், பிராமணர்கள் இங்குப்போல - தென்னாட்டைப்போல வேறு எங்கேயும் ஏகபோக ஆதிக்கத்தை நுகர்ந்ததாகத் தெரியவில்லை. அதைப்பற்றி வாலெண்டின் சிரோல் சொல்கிறார், "In Southern India, Brahmanism has remained more fiercely militant than in any other part of India, chiefly perhaps nowhere had it wielded such absolute power within times which may perhaps still be called recent." (Indian Unrest - P.37)

பிராமணீயத்திற்கு ஒரு பெரும் செல்வாக்கு - ஆதிக்கம் தென்னாட்டிலே கிடைத்ததைப் போன்று வேறு எங்கேயும் கிடைக்கவில்லை என்கிறார். அதன் விளைவாகத் "தமிழன்" மரத்துப் போய்விட்டான்; "திராவிடன்" என்னும் உணர்வே இல்லை. உரிமையுள்ள "மனிதன்" மரித்துப் போனான். அந்த அளவுக்கு மனிதத்தன்மை அடியோடு மங்கிப்போன

நிலையில் ஆதிக்கம் செலுத்துபவருடைய செல்வாக்கு பெரிய அளவில் வேரூன்றி வளர்ந்துவிட்டது. "இந்தியாவில் வேறு எந்தப் பகுதியையும் விடப் பிராமணீயம் தென்னிந்தியாவில் தான் மிகவும் வல்லாண்மையுடையதாக இருந்து வருகிறது. ஏனெனில், அது வேறு எங்கும் அண்மைக்காலம் வரை அவ்வளவு சர்வ வல்லமை பொருந்திய சக்தியாக விளங்கவில்லை. பிராமணர்கள் தென்னிந்தியாவில் ஆச்சார சம்பிரதாய மதவிடயங்களில் மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதாரத் துறைகளிலும் தலைமை அதிகாரம் செலுத்தினர் என்பதையே இது உணர்த்தும்.

இது திராவிட இயக்கம் பற்றிய கருத்தரங்கு என்பதால் வரலாற்று அடிப்படையில் ஒரு தெளிவான கருத்து உருவாக வேண்டும் என்பதற்காகவே இவற்றைச் சொல்கிறேன். சர் சங்கரன் நாயர் தேசியக் காங்கிரசிலே இருந்தவர். 1904 ஆம் ஆண்டு அவர் ஓர் அவையில் பேசுகிற போது, இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைக்குமானால் அந்தச் சுதந்திரத்தைச் சனநாயக முறையில் பயன்படுத்திக் கொள்ள நம்முடைய மக்கள் தகுதி பெற்றுள்ளார்களா? என்று ஒரு கேள்வி எழுப்புகிறார். அதைப்பற்றி 'இந்து' ஏட்டில் (A Hundred Years of the Hindu P 77-78) வந்த குறிப்பை அப்படியே படிக்கிறேன்.

Sir C. Sankaran Nair provoked a controversy in December, 1904, when he said in a speech, that India "will never and ought not to be called into the councils of the Empire (UK) until we show we have fully and frankly accepted those principles of equality and brotherhood, upon which the British Government is based. இந்தியாவிலே உள்ள மக்களிடத்தில் சமத்துவமும், உடன்பிறப்பு உரிமையும் ஏற்பட்டால் தவிர சுதந்திரத்திற்கு நாம் தகுதி பெற்றவர்களாக ஆகாத நிலையில்,

அப்படிப்பட்ட நிலை வருவதற்கு முன்னதாக, நம்மை அழைத்து, பிரிட்டிசு பேரரசின் கவுன்சிலில் ஓர் உறுப்பு நாடாக ஆக்குவதற்கு முயற்சி செய்யப்படுமானால் அது நல்லதன்று என்னும் கருத்தைச் சொன்னார். மேலும் "Those principles are utterly repugnant to the caste system as understood and practised among us" என்றார். அந்தச் சமத்துவ சகோதரத்துவக் கொள்கைகள், நம்மால் பின்பற்றப்படும் சாதி அமைப்புக் கொள்கைகட்கு முற்றிலும் எதிரானவையாகும் என்றும் தெரிவித்திருந்தார்.

வருணப்பிரிவு ஏற்படுத்தப்பட்டதனால், அந்தநாள் மக்களிடையே தொழில் அடிப்படைப் பிரிவினால் அமைந்த குடும்பத் தொழிலை அவரவர் பிள்ளைகள் செய்வதால் தொழில் வளர்ச்சி நன்றாக அமைந்து, நாடும் வளம் பெறத் துணையாயிற்று என்று வைதிகச் சார்பினர் விளக்கம் தருவர். வருணாசிரம தருமப் பெயரால் பிறவி அடிப்படையில் அமையும் சாதி ஆகும் முன்னர் நாலு வகையாகத் தொழில்களைப் பிரித்துக் கொண்டார்கள் என்றாலும், இனப்போராட்ட அடிப்படையில் ஆரிய-திராவிட மாறுபாடு வளர்ந்த காலத்திலே, மாற்று இனத்தை வீழ்த்துவதற்கு ஏற்ற கருவியாக வருணதருமம் பயன்படுத்தப்பட்டது. ஆரிய இனத்தைச் சார்ந்தவர் தொழில்திறன் பெறுவதற்குத் தொடக்கக் காலத்தில் பயன்பட்டு, பின்னர் பிராமண சாதியைச் சேர்ந்தவர்கள் பிற சாதியினர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஏற்ற வடிவு கொண்டதாயிற்று என்பது வரலாறு.

'இந்து' கூறுகிறது, Sankaran Nair was criticised for saying this, by a reader of the 'Hindu', who called himself "Plainspeaker". அப்படி எழுதியவர் சங்கரன் நாயரின் கருத்தைக் கண்டித்து இந்து ஆசிரியருக்குக் கடிதம் எழுதுகிறார். ஏட்டில் அதைப் பார்த்த தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதி, அதைக் கண்டித்து 'இந்து'

ஏட்டிற்குக் கடிதம் எழுதுகிறார். அது இந்துவில் வெளிவந்துள்ளது. The Tamil Poet Subramania Bharati came to Sankaran Nair's rescue, with a letter in which he said, what the eminent social reformer means to say is simply this. There can be no political emancipation without the feeling of nationality. There can be no feeling of nationality where the caste system is prevalent or rather say (as some hypocritical men want us to believe, that the caste system is prevalent in all human communities) where the "Jati" (caste) system is prevalent, the wonderful system which makes a pariah philanthropist inferior to a Brahmin go-between. பாரதியினுடைய கடிதத்தில் காணப்படுவது இது. இந்த வருணதருமம் என்னும் சாதி அமைப்பு, பறையனாகப் பிறந்து ஊராருக்கெல்லாம் நன்மை செய்கிற கொடைவள்ளல் (Pariah Philanthropist) ஒருவனைக்கூட, இருதரப்பாரிடைத் தூது செல்லும் (கோ-பெட்வீன்) தொழில் செய்யும் பிராமணன் ஒருவனை விடத் தாழ்ந்தவனாக்குகிறது. சுப்பிரமணிய பாரதி பிராமண எதிரியா? ஆனால், அவருடைய உணர்வு எவ்வளவு தூண்டப்பட்டுள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். அவர் கூறுகிறார். Is it doubted in any quarter, that in England a cobbler boy with necessary merit finds his path clear to the premiership? செருப்புத் தைக்கிறவன் கூடத் தகுதியுடைய வனாக இருப்பின் இங்கிலாந்தில் பிரதமராகலாம் என்பதை எவராவது சந்தேகிக்க முடியுமா என்கிறார். And is it not treason in India to believe that a Sudra (not to speak of a Panchama) with an unparralleled knowledge of Sanskrit scripture and with exceptional goodness and piety can ever aspire to the SEAT of Sringeri? சமற்கிருதத்தில் இணையில்லாத வகையில் வேதசாத்திரம் பயின்று பண்புள்ள பக்திமானாகவும் உள்ள ஒரு பிராமணரல்லாத சூத்திரர் - பஞ்சமர் கூட

அல்ல - சிருங்கேரி மடத்திற்கு மடாதிபதியாக வரலாம் என்றெண்ணுவது இந்தியாவில் எவ்வளவு பெரிய துரோகமாகக் கருதப்படும்? சூத்திரன் எவ்வளவு அறிவாற்றல் பெற்றிருந்தாலும் அப்படிப்பட்ட தகுதி அவனுக்குத் தரப்படுமா? என்று கேட்டுவிட்டு அடுத்துச் சொல்கிறார்,

Why will people be so wilfully blind? Why do they refuse to find any difference between a mountain and a molehill? Where is Great Britain and alas! Where is India?

எதற்காக மக்கள் உண்மை உணர்ந்தும், தாமே உடன்பட்டுக் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும்? எதற்காக மலைக்கும் கரையான் புற்றுக்கும் உள்ள வேற்றுமை எதையும் காண மறுப்பவர்களாக இருக்க வேண்டும்? இங்கிலாந்து எந்த நிலையில் இருக்கிறது? அந்தோ! இந்தியா எந்த நிலையில் இருக்கிறது? என்று கேட்கும் பாரதி அடுத்துக் கேட்கிறார்.

The National Congress, I readily concede, has some of India's best sons in its ranks and its aspirations are of the worthiest. But does anybody seriously believe, that a man who in his stony heart, condemns a babe widow to perpetual misery might be worthy to be placed at the helm of a rising people?

தேசிய காங்கிரசு இந்தியாவின் சிறந்த மனிதர் (தலைவர்) சிலரை அதன் தலைமையில் பெற்றிருக்கிறது என்பதையும், அதன் நோக்கங்கள் உயர்ந்தவை என்பதையும் நான் இக்கணமே ஒப்புக் கொள்கிறேன். ஆயினும், இளம் பெண் ஒருத்தி கணவனை இழந்தால் என்றைக்கும் கொடுந் துன்பத்தில் உழலும் விதவையாகவே இருக்கவேண்டும் என்று சொல்கிற கல் நெஞ்சுடைய ஒருவர், எழுச்சி பெற்று வரும் இந்திய மக்களுடைய தலைவராக அமர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவர் என்று எவராயினும் உண்மையில் நம்புவரா? நம்ப முடியுமா?

Bharathi, who signed himself as a member of the Madras Social Reform Association, added, "Without social reform, our political reform is a dream, a myth, for social slaves can never really understand political liberty. And until and unless our social conferences prove a success, our National Congress is nothing but glare and dust."

சென்னைச் சமூகச் சீர்திருத்தச் சங்க உறுப்பினர் என்று தம்மைக் குறிப்பிட்டுக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ள பாரதியார், சமுதாயச் சீர்திருத்தம் என்ற அடிப்படையான பணி நிறைவேற்றப்படாமல் காங்கிரசின் அரசியல் சீர்திருத்தப் பணி எவ்வளவுதான் நடைபெற்றாலுங்கூட அது வெறும் கனவாக, புராணக்கதையாகத்தான் இருக்கும். சமூக அடிமைகள் அரசியல் விடுதலையை எந்நாளும் உண்மையில் உணர முடியாது. நம்முடைய சமூகச் சீர்திருத்த மாநாடுகள் வெற்றி பெற்றாலன்றி - வெற்றி பெறும் நாள் வரை - நம்முடைய தேசிய காங்கிரசு மாநாடு கண்ணைக் கூசும் ஒளியும் - தூசுமாகவே அமையும் என்றார். மானிட நேயம் கொண்ட பாரதி எழுப்பிய கேள்விகளினால் சுட்டப்பட்ட அந்த வைதிக வழிப்பட்ட அநீதியைத் துடைக்கத்தான் திராவிட இயக்கம் தோன்றியது எனலாம்.

1915வது ஆண்டு தியாகராயர் நீதிக்கட்சி தொடங்குவதற்கு முன்னர் ஒரு பிராமண சங்கம் கூடித் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியது. வேறு இனத்தின் கலப்பின்றிப் பிராமண இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பது அதன் கருத்தாகும். வேறு எந்தச் சமூகத்தோடும் உறவு கொண்டு விடாமல் பிராமண சமூகத்தைக் காப்பாற்றவேண்டும் என்பது அதன் வேண்டுகோள். அச்சமூகம் கலந்துபோய் 1500 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வரலாற்று விளைவு அது. 100க்கு 95 பேர் அளவில் பிராமணர் அல்லாதார் வாழ்கிற

தென்னாட்டிற்கு 100க்கு 3, 4 பேர் அளவில் கௌசிகர் - விசுவாமித்திரர் கோத்திரம் என்று சொல்லிக்கொண்டு வந்தவர்களாயினும் ஆண்கள் மட்டுமே வந்ததால், தென்னாட்டில் வாழும் திராவிட இனப் பெண்களைத்தான் திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தி மக்களைப் பெற்று வாழ்ந்தனர்.

வரலாற்றுப் பேராசிரியர் பி.டி. சீனிவாச அய்யங்கார் "ஆரியர்க்கு முற்பட்ட தமிழர் நாகரிகம்" (Pre Ariyan Tamil Culture) என்னும் ஒரு நூலையும், தமிழர் வரலாறு (History of the Tamils) என்னும் மற்றொரு நூலையும் ஆங்கிலத்திலே எழுதியிருக்கிறார். அதிலே அவர் குறிப்பிடுகிறார்: கோதாவரி நதிக்கரையில் விசுவாமித்திரர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள், 500க்கு மேற்பட்டவர்கள் வடக்கிலிருந்து வந்து அங்கே தங்கினார்கள் கி.மு. 400 அல்லது 500இல். அங்கே தங்கிய ஆரிய விசுவாமித்திர கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்த பெண்களைத்தான் மணக்க நேரிட்டது; மணந்து மக்களைப் பெற்றார்கள்; கோத்திரம் வளர்ந்தது; அப்படி வளர்ந்த கோத்திரத்திற்குத்தான் "பிரம்மராட்சச கோத்திரம்" என்று பெயர். அரக்கரும், பிராமணரும் சேர்ந்து உருவான கோத்திரம் என்பதால் பிரம்மராட்சச கோத்திரம் என்று பெயர் பெற்றது என்று பி.டி. சீனிவாச அய்யங்கார் ஆதாரத்தோடு எழுதியிருக்கிறார்.

அவ்வாறு மூலத்திலேயே கலந்தபோதும், அப்படி இனத்தைப் பாதுகாத்தல்தான் வேத மிரிதிகளுடைய ஒரே நோக்கம் என்றும், அப்போதுதான் பிறவியினால் தகுதி பெற்ற பிராமணர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொண்டு, வேதகாலச் சூழ்நிலையை உருவாக்க முடியும் என்றும் அந்தச் சங்கத்திலே பிராமணர்கள் தீர்மானம் நிறைவேற்றி யுள்ளனர். அந்தச் சங்கத்தைச் சேர்ந்த இருவர்

கும்பகோணத்திலிருந்து வெளியிட்டிருந்த பிரசுரம் ஒன்றில், வருணாசிரம தரும விதிகளின்படி, பிராமணன்தான் தகுதி பெற்ற தலைவன்; அதனால் அவன் ஒருவனுக்குத்தான் மற்றவர்களுக்கு வழிகாட்டும் தகுதி இருக்கிறது என்றும் கூறப்பட்டிருந்தது. ஆம், எப்படிப்பட்ட இனக்கலப்புக்குத் தலைமுறை பலவாக ஆளாகி இருப்பினும், ஏதோ பிராமணர்களின் சாதி தூயதாக, கலப்பின்றிக் காக்கப்பட்டது போல் ஒரு மாயையினை உருவாக்கி, அதனால் அவர்கட்கே பிற வகுப்பாருக்கெல்லாம் வழிகாட்டும் எசமான உரிமை இருப்பதாகக் கூறுவது, எப்படிப்பட்ட ஆணவம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

திருவரங்கத்திலிருந்து வந்த ஒரு பிரசுரம் பிராமணர்கள் அல்லாதாரும் ஆரியர்களே என்று கூறிப் பிரச்சினைக்கு முடிவு காண முயன்றுள்ளது. இது இந்த நாட்டிலே நீண்ட காலமாக நடைபெறுகிறது. ஆரியப் பெருமை பேச வாய்ப்புக் கிடைத்தால் ஆரியன் தனி இனம்; இல்லை என்றால் எல்லாரும் ஓரினம், ஆரியர் திராவிடர் என்பது எல்லாம் கற்பனை, எவரையும் இனம் பிரித்துக் காட்ட முடியாது என்று நிலைமைக்கேற்பப் பேசுதல் அவர்தம் முறை. அந்த முறையிலே பிராமணனுடைய தனித் தன்மையைக் காப்பாற்றுவது ஒரு நோக்கம்; வேதசாத்திரங்களை அவர்கள்தான் படித்துப் பாராயணம் செய்து காப்பாற்ற முடியும் என்பதால், அதற்காக அந்தச் சாதியைக் கலப்பின்றிக் காப்பாற்ற வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம். இன்னொரு பக்கம் இந்தியாவிலே இருக்கிற எல்லாருமே ஆரியர்கள்தான் என்று ஒரு வாதம். இந்த இரட்டை வேடம் ஏன்? திராவிடர் என்று சொல்லிக் கொள்ளும் மக்களுக்கு ஒரு நாகரிகம் இருந்தால், அது நால் வருணத்தை ஏற்காத ஒரு தனித்தன்மை உடையதாக ஆகிவிடுமே என்பதற்காக எல்லோருமே ஆரியர் என்று ஒரு சாகசப் பேச்சு.

இன்றைக்கு எண்பது ஆண்டுகட்கு முன்னர்கூட, "ஆரியர் - திராவிடர் என்னும் இனப் பாகுபாடு என்பது கற்பனை; ஆரியர்கள் வந்தார்கள் என்பதே புனைகதை என்றும் பேசப்பட்டது. தனியொரு மனிதன் ஆரியனா - திராவிடனா என்பதல்ல கேள்வி. கறுப்புநிற ஆரியரும், சிவப்புநிறத் திராவிடரும் இருக்கிறார்கள். வெள்ளை இனத்தாருடன் கலப்புற்ற கறுப்பர் வழிவந்த நீக்ரோ நிறம் மாறி உள்ளனர் அன்றோ! நம் நாட்டிலேயே வெள்ளையருடன் கலப்புற்றவர்கள் சிறிது வெள்ளை நிறத்தவராக இல்லையா? இந்த வகையில் இன்று ஆரியர் - திராவிடர் என்று யாரைச் சுட்டிச் சொல்ல முடியும்? எனவே, எல்லோரும் ஆரியரே; பிராமணரல்லாதார் - திராவிடர் என்று பிரித்துப் பேசுவது அரசியலுக்காக" என்று வாதாடினர். அதே சமயம் பிராமணரல்லாதார் வாழ்வுக்கும் வைதிகப் பிராமணனே வழிகாட்டி என்றனர். இங்கு (இவ்வுலகில்) நடத்தப்படும் வாழ்க்கைக்கும் இதற்கப்பால் (மறுவுலகில்) நடத்தப்படும் வாழ்க்கைக்கும் வைதிக பிராமணன் உங்களுடைய நண்பன், பாதுகாவலன் என்பதைப் பிராமணர் அல்லாதார் நம்ப வேண்டும் என்று விரும்பினர். பிராமணர் அல்லாதாரின் இந்த உலகத்து வாழ்வுக்கு வழிகாட்டி ஆவதோடு, மேல் உலகத்துக்குப் போனாலும் அங்கேயும் பிராமணர்கள்தான் வழிகாட்டி என்று கூறித் தமிழர்களை எல்லாம் திராவிட இன உணர்வு கொள்ளாமல் சூத்திரராகவே இருக்கக் கேட்டுக்கொண்டனர்.

அந்த அறிக்கைகளைக் கண்ட பாரதியார் இந்த வருணாசிரம தரும உபதேசத்தைக் கட்டோடு வெறுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நீதிபதி ரெட்டி என்பவர் 1915ஆம் ஆண்டு மே மாதம் 18ம் நாள், பிராமண சங்கத்தின் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் சுந்தரம் அய்யர் தெரிவித்திருந்த கருத்துக்கு மறுப்புக் கூறியிருந்தார்.

அதில் சுந்தரம் அய்யர் எழுதியிருந்த கருத்தும் சுட்டிக் காட்டப்பட்டு இருந்தது. அதைக் கண்ட பாரதியார் சொல்கிறார், "நான் பேராசிரியரிடமிருந்து மாறுபட்டு நிற்கிறேன். அவருடைய கருத்துடன் அடிப்படையாகவும், தீவிரமாகவும் முழுமையாகவும் நான் மாறுபடுகிறேன். பிராமணர்களாகிய நாமும் மனிதர்கள்தான் என்று நான் நினைக்கிறேன். மனிதன் என்றுதான் உன்னைப் பற்றி நீ சொல்லிக் கொள்ளலாமே தவிர, உயர்வாகச் சொல்லிக் கொள்ளாதே! ஒவ்வொருவருடைய குடுமியும், சாப்பாடும் அவரவர் சொந்த விஷயங்கள். பிராமணன்தான் தலைமை வகிக்க வேண்டும் என்று சாதி அடிப்படையிலே கேட்பது தவறு! *இன்றைய பிராமணர் தமக்குக் கொஞ்சம்கூடத் தகுதியில்லாத ஆன்மீகத் தலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் செய்கிற சாகசங்களையும், உபாயங்களையும் விவரிப்பதென்றால் எனக்கும், மற்றவர்களுக்கும் அது வருத்தத்தைத்தான் கொடுக்கும். ஆன்மீகத் தலைமை, கடவுளைக் காட்டுகிற வேலை. அது நல்ல பெரிய உத்தியோகம். அந்த உத்தியோகத்தை விட்டு மற்ற உத்தியோகத்திற்கு வந்து விடக்கூடாது". நான் சூடான வார்த்தையினால்தான் சொல்ல முடியும். "புதிய யுகத்தை நோக்கி எழுச்சி பெற்று வருகிறது இந்தியா! உண்மையிலேயே இப்போது நாம் விழிப்புற்று வருவதால், தங்களது ஏமாற்று வேலையையும் அதோடு சேர்ந்து அந்த ஏமாற்று வேலைகள் மீது அமைக்கப்பட்ட அற்பத்தனமான தேச (மக்கள்) விரோதப் பழக்க வழக்கங்களையும், பிராமண மக்கள் தாங்களாகவே முன்வந்து கைவிட்டுவிட்டு, இந்திய நாட்டில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை ஏற்றிட வழிகாட்டுவது அவர்களுக்கே நல்லது". சாதிப் பெருமையைக் கைவிடுங்கள்;: வழிகாட்டும் வேலையை நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள். எல்லோருக்கும் சுதந்திரம் கிடைப்பதற்கும்*

*நீங்களும் உங்களை உடன்பாடாக ஆக்கிக் கொள்ளுங்கள், மனிதராகுங்கள்!"* என்று அந்நாளிலேயே பாரதியார் அறிவுறுத்தினார்.

பிறிதோர் இடத்திலே "தமிழ்நாட்டிலே அறிவு வளர்க்கும் சாத்திரங்கள் இல்லை; அறிவியல் அடிப்படையிலே எண்ணங்களை வளர்க்கிற ஏடுகளான உண்மையான சாத்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்துவிட்டு, தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பொய்க்கதைகளை மூடர்களிடம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்" என்கிறார் பாரதியார். சமூகத்தைப் பிளவுபடுத்திச் சீர்குலைக்க ஏதுவாகும் சாத்திரக்கொள்கை எதுவாக இருந்தாலும் அதன் உண்மையை உணர்ந்தவர்கள் அதனை ஒப்ப முடியாது. அந்த முறையிலேதான் பாரதியார் சமூகநீதி விளைவிக்கும் சமத்துவ நோக்கத்திற்காக வாதாடியிருக்கிறார்.

இந்தியாவிலே பிராமண ஆதிக்கம் வளர்ந்து இருந்ததால், ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நின்ற இசுலாமிய சுல்தான்களின் ஆட்சி இருந்த காலத்திலுங்கூடப் பிராமணர்களுடைய செல்வாக்கை இசுலாமிய மன்னர்களும் ஏற்றுக்கொண்டிருந்தனர். இசுலாமிய சமூகத்தினுடைய அல்லது மதத்தினுடைய செல்வாக்கை அவர்கள் வளர்க்க விரும்பிய அதே நேரத்தில், இந்து சமூகத்தினுடைய தலைவர்களாக யாரைக் கருதினார்களோ அவர்களுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்தார்கள். பிரிட்டிசார் ஆட்சியிலேயும் சமுதாய ஆதிக்கம் பெற்றவர் என்ற முறையில் வருணதரும மதவாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பிராமணத் தலைவர்களுக்கு முக்கியத்துவம் கிடைத்துவிட்டது.

கேரளத்தின் புகழ்பெற்ற சீர்த்திருத்தச் செம்மல் நாராயண குரு என்பவர் - பெரியார் அவர்களுக்கு முன்னரே புகழுடன் விளங்கியவர். ஈழவர்கள் என்று சொல்லப்படுகிற

தாழ்த்தப்பட்ட மக்களை உரிமை உணர்ந்த மனிதராக்கினார். அவர் ஒரு சிவன் கோவில் அமைத்தார். அவர் ஒரு யோகி. அந்தச் சிவன் கோவில் எழுப்பிய போது வைதிக-நம்பூதிரி பிராமணர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். இந்தத் தீண்டாதவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சிவன் விக்கிரகத்தை வைத்து வழிபடலாமா? நாங்கள் அல்லவா சாத்திரப்படி மந்திரங்கள் சொல்லிச் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றார்கள். அப்போது நாராயண குரு சொன்னார், "நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான், ஆனால் எங்கள் சிவலிங்கம் ஈழவர்கள் சிவலிங்கம். இது உங்கள் பிராமணச் சிவலிங்கம் அல்ல என்றார்."

அவருடைய சீடரான சுவாமி தரும தீர்த்தா, என்பவர் History of Hindu Imperialism (P 159 - 160) "இந்து எதேச்சாதிகார வரலாறு" என்னும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்.

*"ஆங்கிலேயரின் பொது நோக்கினாலும் நல்லெண்ணத்தாலும் பிராமணர்களின் ஆதிக்கம் அடங்கி ஒடுங்குவதற்குப் பதிலாக, அவர்கள் ஆட்சியினை நம்பியிருந்த எளிய மக்கள் மீது, பிராமண ஆதிக்கம் நீடித்து நிலைக்க உதவினர்".* மேலும் அவர் அதன் காரணங்களையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

"ஆங்கிலேயர்கள் உயர்ந்தவையும் மிகுந்த வருவாய் உள்ளவையுமான நம்பிக்கைக்குரிய பதவிகளில் பிராமணர்களை நியமித்தனர்.

ஆங்கிலேயக் கம்பெனி அதிகாரிகளுக்கும் புரோகிதர்களுக்கும் லாபம் தரும் வகையில் கோயில்களைப் புதுப்பித்து, விக்கிரக வழிபாடு, உற்சவங்கள், நடன மாதர்களின் நாட்டியம் ஆகியவை நடைபெற ஆதரவு தந்தனர்.

இந்துக்களின் சாதி ஆதிக்கச் சின்னமாக நிலவிய சாதிக் கச்சேரிகளை - சாதிக் கச்சேரி என்றால் அந்தக் காலத்திலே பிராமணர்களே நீதிபதியாக அமர்ந்து நடத்தும் நீதிமன்றம் - நடத்த உதவினர். பஞ்சாயத்திலேகூட, கோயில் இருக்கிற ஊரிலே உள்ள பஞ்சாயத்து எனில், பிராமணர்களும், அர்ச்சகர்களும் அங்கே அமர்ந்து, அவர்கள்தான் வருகிற வழக்குகளை எல்லாம் விசாரித்துத் தீர்ப்பளிப்பார்கள். இந்து பிராமணர்களின் ஆதிக்கச் சின்னமான சாதிக் கச்சேரிகளாகிய நீதிமன்றங்களைச் செயல்படுத்தினர்.

காலத்தால் மறைந்த மனுதருமம் முதலான சாத்திரங்களை மறுபடியும் கைக்கொண்டு, அது அதிகாரபூர்வமான இந்து மதச் சட்டங்களில் நிலைபெற ஆதரவு அளித்தனர். மனுதருமத்தையே இந்துச் சட்டமாக ஏற்றுக் கொண்டார்கள்." மனுதருமம் இந்துச் சட்டமாகாது; ஏனெனில் இந்து என்றால் பிராமணர் - (ஆரியர்) மட்டுமல்லர். Hindu is not a Religion. Several religions practised by the people of this land are called by the name of Hinduism. இந்த நாட்டிலே எத்தனையோ மாறுபட்ட மதங்கள் வழங்கி வருகின்றன. ஆதி சங்கரரே ஆறு மதங்கள் என்று பிரித்துப் பேசியுள்ளார். உபநிடதங்களைக் கொண்டு பார்த்தால் பல்வேறு தத்துவங்கள், பல்வேறு மதங்கள் நிலவுவது உண்மை. அப்படிப்பட்ட நிலையில் முசுலீம் அல்லாதார், கிறித்தவர் அல்லாதார் என்னும் நோக்கில் இந்திய நாட்டுமக்கள் அனைவரையும் "இந்து" என்று வெள்ளையர் அழைத்தனர். இந்து என்னும் பெயர் திராவிடரையும் குறித்தது. ஆயினும், இடைக்காலத்தில் மங்கிப்போய்விட்ட மனுதருமத்தை மறுபடியும் இந்துக்களுக்குரிய சாத்திரமாக ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர்.

கோயில் நிருவாகத்தைப் பிராமண அறங்காவலர்களிடம் ஒப்புவித்து, பிராமணீய ஆதிக்கம் வளரவும், இதர சாதியினர் உரிமை இழக்கவும் ஏற்பாடு செய்தனர்.

சில சட்டங்கள், நிருவாக ஆணைகள் மூலம் முசுலீம், கிறித்தவர் முதலானோர் யாவரையும் இந்துச் சட்டத்திற்கு உடன்பட்டவர்களாகச் செய்தனர்.

சாதிப் பிரிவுக்கு ஆங்கிலேயர், அரசு அங்கீகாரம் கொடுத்தனர். நாட்டு மக்களின் மதத்தில் நாங்கள் தலையிட மாட்டோம் என்று சொல்லிக்கொண்டு, சாதி வேற்றுமையால் வருகிற பிரச்சினைகளிலே அந்தந்த வருண சாதிக்கு வைதிக முறையில், என்னென்ன வகையில் (வெவ்வேறு) நியாயம் வழங்கியுள்ளார்களோ அதனை அப்படியே ஏற்றுக்கொண்டார்கள். ஒரு குலத்திற்கு ஒரு நீதி வழங்கும் முறைகேட்டுக்கு ஆங்கிலேய அரசு பாதுகாப்பு கொடுத்தது.

சாதிவழி நிலைநாட்டப்பட்ட இழிநிலையை மாற்றி அமைக்க முற்பட்ட சமூகச் சீர்த்திருத்தவாதிகளின் நம்பிக்கையை ஆங்கிலேயர் நாசமாக்கினார்கள். வெள்ளைக்காரன் ஆட்சி இருக்கிறது என்பதால், சீர்திருத்தம் செய்யலாம்; தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிமை வாழ்வு கிடைக்கும்; பெண்களுக்கு வாழும் உரிமை கிடைக்கும் என்று நம்பிப் போராடியவர்கள், நீண்ட காலம் போராட வேண்டியிருந்தது. ராசாராம் மோகன்ராய் இறந்த கணவனுடன் மனைவி உடன்கட்டை ஏறுவதைத் தடுக்க, வைதிகத்தை எதிர்த்து ஒரு சட்டம் கொண்டுவர நீண்ட காலம் போராட வேண்டியிருந்தது.

மத விடயங்களில் தலையிடுவதில்லை என்று சொல்லிக் கொண்டு சாதிவழி அடிப்படைக் கொள்கைகள் வளரவும், நாட்டில் நிரந்தரமாகத் தொடரவும் இடம் அளித்தனர்.

அவர்களுள் சிலர், வைதிக முறையில் நிகழ்ந்த விக்கிரக ஆராதனையை மனித சமுதாயத்தை மகிழ்விக்கும் கலாச்சாரம் என்று கூறிப் புகழ்ந்தனர்.

தியசாபிக்கல் சொசைட்டி ஏற்படுத்திய அன்னிபெசண்ட் அம்மையார், இந்தியாவில் வேத நாகரிகத்திலேயிருந்து பிறந்து, இன்றைக்குப் பின்பற்றும் வைதிக முறைகள் எல்லாம் மிகவும் உயர்ந்தவை, மதிக்கத்தக்கவை என்று உலகத்துக்குச் சொன்னார். அதைப் பலபேர் நம்பினார்கள். அதனுடைய விளைவு திராவிட இனம் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது மட்டுமன்றி, திராவிட இனத்தின் மீது பிராமண சாதியினரின், ஆதிக்கம் வளர்ந்தது. பிராமணர்கள் போற்றிய மொழி - மதம் - கலாச்சாரம் ஆகியவை ஒரு தனி ஆதிக்க சக்தியாக வளர்ந்த காரணத்தாலேதான், தமிழ்மொழி, தமிழ் இசை, தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு, இலக்கியங்கள், தமிழர்களுடைய சமயச் சிந்தனைகள், சித்தர் வழிபாட்டு முறைகள், தமிழர்கள் நடத்திய சிறந்த ஆட்சிமுறைகள், தமிழிலே பிறந்த ஒப்பற்ற அறப் பொது நூலாகிய திருக்குறளுடைய சிறப்பு முதலான அத்தனையும் மதிப்பிழந்து மங்கிப் போகிற நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டது. அதே நிலைதான் தென்னாட்டில் வாழும் திராவிட மொழிகளைப் பேசும் மக்களுக்கெல்லாம் ஏற்பட்டது.

அதனாலேதான் 1916வது ஆண்டு பி.டி. தியாகராயர் இந்த நிலைமைக்கான காரணம் அத்தனையையும் விளக்காவிட்டாலுங்கூட, தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் முதல் அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் திட்டவட்டமாகச் சொல்வது இது:

"அன்றைக்கு இருந்த ஆங்கிலேய அரசு எந்த அளவுக்கு இந்த நாட்டு மண்ணுக்கு உரிய மக்களுடைய உரிமையை

மதிக்கவில்லை என்பதை, அப்போது அரசாங்க அலுவல்களில் இடம் பெற்றோர் யார் என்பதைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிக உயர்ந்த பதவிகள் எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டன என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஆளுநரின் ஆட்சிக் குழுவுக்கு இந்தியர்களையும் நியமிக்கலாம் என்று முடிவு செய்தபின், வரிசையாக மூன்று பேர் நியமிக்கப்பட்டனர்; அதில் கடைசி இருவர் பிராமண வழக்கறிஞர்கள்.

உயர்நீதிமன்ற இந்திய நீதிபதிகள் ஐவரில், நால்வர் அதாவது இந்துக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அனைத்திலும் பிராமணர்களே நியமிக்கப்பட்டனர்.

1914இல் அரசாங்கத்திற்கு ஒரு புதிய செயலாளர் பதவியைத் தோற்றுவித்து அதிலே ஒரு பிராமணரை நியமித்தனர். வெளியுறவு இந்தியச் செயலாளர் ஒரு பிராமணர்.

அரசாங்க அலுவலர்களிலேயிருந்து மாவட்டக் கலெக்டர்களாக நியமிக்கப் படவேண்டிய இருவரும் பிராமணர்களாகவே நியமிக்கப்பட்டனர்.

சென்னைப் பல்கலைக் கழக இந்திய உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் பிராமணர்களாக இருந்தபடியால்தான், தமிழுக்கு இங்கே மரியாதை இல்லாமலிருந்தது. சென்னைப் பல்கலைக்கழக இந்திய உறுப்பினர்கள் பெரும்பாலும் பிராமணர்களாக இருந்தபடியால், பல்கலைக்கழகத்திலிருந்து சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவோரில் (University representation) பிராமணர் அல்லாதார் எப்போதும் வெற்றிபெறுவதில்லை. இதனால் எத்துணைக் கல்வித் தகுதியுடையவராக இருப்பினும், பிராமணர்

அல்லாதார் இத்தேர்தலில் கலந்துகொள்ள விரும்பவில்லை. போட்டியிட நேர்ந்தால் ஆங்கிலேய உறுப்பினர் ஆதரவு கொண்டே வெற்றி பெறமுடியும். 1914ஆம் ஆண்டு சென்னைச் சட்டமன்ற மேலவைக் கூட்டத்தில் குஞ்சிராமன் நாயர் கேட்ட கேள்விகளுக்குக் கிடைத்த பதில் இது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் 650 பேர்களில் 452 பேர் பிராமணர்கள். 124 பேர் பிராமணர் அல்லாத இந்துக்கள். பிறஇனத்தவர் 74 பேர். இப்பொழுது தேர்தல் நடைபெற்றால் யாராவது ஒரு பிராமணர்தான் வருவார்.

1914இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பிராமணர்களே பெரும்பான்மையாக இருந்தமையால், எத்துணைத் தகுதி பெற்றவராயிருப்பினும், பிராமணர் அல்லாதார் தேர்தல்களில் வெற்றி பெற முடியவில்லை. அறிவுத்துறையில் போட்டி அதிகமாக இருக்கும் இக்காலத்தில் தேர்வுகளில் தேறுவதற்குத் தனித் திறமை வேண்டும் என்பதை மறுக்கவில்லை. எங்களால் புரிந்து கொள்ள முடியாதது என்னவெனில், சிறுபான்மையான ஒரு வகுப்பினர் மட்டும் ஆங்கிலம் படித்து அரசாங்க அலுவல்களில் உயர்ந்ததுடன் எல்லாத் தகுதிகளையும் ஏகபோகமாகத் தங்கள் உரிமையாகக் கொண்டு, பெரும்பான்மை வகுப்பினருள் படித்த ஒரு சிலருக்குங்கூட இடம் கொடுக்காமல் இருந்து வருவதேயாகும். ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்று புரியவில்லை.

மற்றவர்களும் எல்லாத் தகுதியும், பண்பாடும் பெற்றிருந்தும், அப்படிப்பட்ட மற்ற மக்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. எத்துணை இடையூறுகள் இருந்தும், நீதித்துறையில், கல்வித்துறையில், வழக்கறிஞர் தொழிலில், மருத்துவம், பொறியியல் முதலான துறைகளில், பெரிய

ஜமீன்களை நிருவகித்து ஆட்சி நடத்துவதில் பிராமணரல்லாதார் பலர் மிகச் சிறப்புடன் விளங்கி வருகின்றனர். பிராமணர்களுக்கு மட்டுந்தான் அறிவு இருக்கிறது என்பதை ஏற்கமுடியவில்லை. சிறந்த நிர்வாகியாகப் (Best Administrator) பிராமணர் அல்லாதார் பலபேர் இருக்கிறார்கள். அவர்களுள் சிலருக்கு இணையாகப் பிராமண வகுப்பில் எவரையும் கூறமுடியாத அளவுக்கு அவர்கள் சிறந்து விளங்கி வருகின்றனர். தமது உரிமை உணர்ந்து, சுயமரியாதையுடன் அவர்கள் ஒன்று சேர்ந்து முயற்சி செய்திருப்பார்களேயானால், அரசாங்க அலுவல்களில் அவர்களின் பிறப்புரிமையின்படி முதல் இடத்தைப் பெற்றிருப்பார்கள். இந்தப் பிறப்புரிமை என்பது அறிவால் பெறும் பிறப்புரிமை. தங்களுக்கென்று ஒரு சங்கம் இல்லாததாலும், தங்களுடைய கருத்துக்களை வெளியிடப் பத்திரிக்கை இல்லாததாலும், பிராமணர் அல்லாதார் தங்கள் உரிமையைத் தெரிந்துகொள்ள முடியாமல் போயிற்று" இவ்வாறு தியாகராயர் விளக்கிக் கூறியுள்ளார்.

1918இல் நீதிக்கட்சியின் மாநாடு நடந்தபோது எம்.டி. சுப்பிரமணிய முதலியார் பேசினார். அவர் நல்ல அழுத்தமான தெய்வப் பற்றுள்ளவர். பி.டி.ஆர் அவர்களின் சிறிய தந்தை என்று கருதுகிறேன். அவர் நீதிக்கட்சியிலே இணைந்து பணியாற்றியவர், அவர் ஆற்றிய வரவேற்புரை 1968இல் வெளிவந்த நீதிக்கட்சி பொன்விழா மலரில் இடம்பெற்றுள்ளது இது. "இந்தியா நீங்கலான மற்றப் பொறுப்பான ஆளுகையைப் பெற்றுள்ள தேசங்களில், முதலாளி, தொழிலாளி என்ற இரண்டு வேறுபட்ட நிலை தவிர, பிறப்பினால் ஆகிய எவ்வித வித்தியாசமும் இல்லாததால் அங்குள்ளவர்கள் தங்கள் தங்கள் முயற்சியால், எவ்வித உரிமையையும், முன்னேற்றத்தையும் அடையச் சுதந்திரம் உடையவராய் இருக்கிறார்கள்" They have the ability to fight

to get their right. இங்கே அந்த மாதிரியான வேற்றுமை இல்லாமல், பிறவி அடிப்படையிலான வேற்றுமை வேரூன்றி இருக்கிற காரணத்தால் உரிமையைக் கேட்க முடியவில்லை. ஆனால் இந்தியாவிலோ இந்து மதத்தினர்களின் செய்கையாலும், தொழிலாலும் உயர்வு, தாழ்வு ஏற்படாமல், பிறப்பினால் மட்டுமே உயர்வு, தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. அது மனு தருமத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. பிராமணன் எந்தத் தவறான காரியத்திலே ஈடுபட்டு, பழிக்குரிய செயல்கள் செய்து, இழிமகனாகக் கருதப்பட்டாலுங்கூடப் பிராமணன் பிராமணனே என்று. அதற்கு முன்னர் பிராமணர்கள் ஒழுக்கச் சீலர்களாக இருந்தால்தான் பிராமணர் ஆவர் என்பதாகத் தொடக்கக் காலத்திலே கூறப்பட்டது, அப்படிக் கூறிப் பிராமணர்களின் ஆதிக்கத்தைக் காக்க முடியாது என்பதைக் கண்டதால், கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து, எந்தக் கேவலமான தொழிலில் ஈடுபட்டாலும் பிராமணன் பிராமணனே என்றனர். பிராமணர் அல்லாதார் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும், கற்றவராக இருந்தாலும், திறமையுள்ளவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருந்தாலும் எந்தக் காலத்திலேயும் அவருடைய பிறவிச் சாதியால் வரும் இழிவை மாற்றிக் கொள்ள இயலாது. இழிவும் பழியும் உற்றவனாயினும் பிராமணன் உயர்சாதியே என்கின்றனர். இந்த நாட்டில் தொழிலால், பண்பால், உயர்வு தாழ்வு ஏற்படாமல், பிறப்பினால் மட்டும் உயர்வு தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. உயர்ந்த சாதியில் பிறந்த ஒருவன் என்ன கேவலமான தொழிலைச் செய்தாலும் தனது பிறப்புயர்வின் நிமித்தம் எல்லா உரிமைகளையும், மேம்பாடுகளையும் அடையக் கூடியவனாகிறான். தாழ்ந்த சாதியில் பிறந்த ஒருவர் கல்வி, ஒழுக்கம், பொருள் முதலியவற்றில் மேம்பட்டிருந்து, அவற்றிற்கிணங்க உயர்ந்த தொழிலைச்

செய்தாலும் தமது தாழ்ந்த பிறப்பின் நிமித்தம், கடவுளால் அருளப்பட்ட சுதந்திரத்தை அடைவதும் தடைப்பட்டு, மேம்பாடு அடைவதற்கு இயலாமல் போகின்றார்.” இவ்வாறு கூறியவரின் வழியினரான பி.டி. ராசன் நீதிக்கட்சி ஆட்சியில் அமைச்சராக இருந்தவர், அவர் மதுரை மீனாட்சி கோயில் குடமுழுக்குக் குழுவுக்குத் தலைமை ஏற்று நடத்தியவர். சங்கராச்சாரியாராலே ஒரு பொற்சங்கிலி அணிவிக்கப்பட்டு வாழ்த்தப்பட்டவர். அவருடைய கொள்கையும் அதுவே.

இந்துக்களில் பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு வகுப்பும் பிரும்மாவின் படைப்பு என்று கூறும் பிராமணர்களிலேயே சிலர் இந்த நால்வகுப்பு இன்று உள்ளதென்று ஒத்துக்கொள்வதில்லை. “பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் என்ற நால்வகுப்பில், சத்திரியர் அனைவரும் அவதாரமான பரசுராமரால் அழிக்கப்பட்டு விட்டனர் என்பர்.” அவதாரம் என்றால் தெய்வம் மனிதனாகக் கீழ் இறங்குவது என்றும் தருமத்தைக் காக்க வந்தது என்றும் பொருள். சத்திரியர்கள் அனைவரையும் அவதார புருடர் அழித்தார். “வைசியர் என்பது ஒரு வருணமாக (சாதிமுறைப்படி) இப்போது இல்லாமல் போயிருப்பதால், இந்தியாவில் தற்காலத்தில் பிராமணர், சூத்திரர் என்னும் இரண்டு வகுப்பினரே இருக்கிறார்கள் என்பது அந்தப் பிராமணர்களுடைய கொள்கையாகும்.”

பிராமணர்கள் உட்பட எல்லோருமே பிறக்கும் போது சூத்திரரே என்பது ஒரு கொள்கை. அப்படிப் பிறந்தவர்களுக்குப் பூணூல் அணிவித்து இரு பிறப்பாளர் ஆக்கும் போதே - அவரவர் தொழிலின்படி பிராமண - சத்திரிய - வைசியர் ஆகின்றனர் என்பது அக் கொள்கை. எனவே, பிராமணன் பிறப்பதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆரியர் வேறு இனம்; திராவிடர் வேறு இனம்; ஆகையால், பிராமணர்களுக்கும், பிராமணர் அல்லாதார்களுக்கும் ஏற்றத்தாழ்வு கூற இடம் கிடையாது என்பது ஒரு கொள்கை. ஆரிய பிராமணன் வேறு; தமிழர்களிடையே இருந்த பார்ப்பனர் வேறு என்னும் ஒரு கொள்கையும் மறைமலையடிகள், காசு பிள்ளை, சோமசுந்தர பாரதியார் போன்றவர்களால் கூறப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாட்டிலே அந்த நாட்களில் வைதிக உணர்வுக்கு இடம் இருக்க நியாயம் இல்லை என்று சொன்னாலுங்கூடக் கடவுள் வழிபாட்டு முறையிலே பார்ப்பனர் என்னும் பெயருடைய தமிழர்களே தேவாரம், திருவாசகம் ஓதுபவர்களாகவும், ஓலைச்சுவடி படிப்பவர்களாகவும் இருந்துள்ளனர் என்னும் ஒரு கருத்தும் உள்ளது. தென்னிந்தியாவில் ஆகமத்தின்படி ஏற்பட்டிருந்த சைவ, வைணவ ஆலயங்கள் யாவும் திராவிடர்களுக்கு உரிமையானவை; திராவிடர்களால் வழிபாடு செய்யப்பட்டவை என்றும் சொல்லப்படுகிறது, இது மறைமலையடிகளார் கூறியது. இதற்குத் தக்க சான்று கோயில்களில் உள்ள விக்கிரகங்களே ஆகும். இவ்விக்கிரகங்களின் காதுகள், திராவிட இன நாயன்மார்களின் காது வளர்ப்பு முறையைப் பின் பற்றி அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். தென்னாட்டிலே இருக்கிற விக்கிரகங்களிலேயெல்லாம் இந்த நீண்ட தொள்ளைக் காது அமைப்பு முறை உள்ளது. தொங்கிக் கொண்டிருக்கும் காதுதான் இங்குள்ள விக்கிரகங்களுக்கும் அமைந்திருப்பதால் இது ஆரியக் கடவுள் திருவுருவம் ஆகாது என்பது அவர்தம் கருத்து.

“ஆனால் வைதிகப் பிராமணர்களின் வருணக் கொள்கையின்படி, பிராமணர், சூத்திரர் என்ற இரண்டு வகுப்புக்களே உள்ளன என்றும், சூத்திரன் என்ற பதத்திற்குப்

பொருள் அடிமை என்றும், ஆகவே சூத்திரர்களாகிய அடிமைகள் தங்களிலும் உயர்ந்த சாதிப் பிராமணர்களுக்கு எப்போதும் தொண்டு செய்ய வேண்டியதே கடமை என்றும் கூறி, சூத்திரர் கல்வி, ஞானம் முதலிய விஷயங்களில் விருத்தியடைய ஒட்டாதபடித் தடை செய்யப்பட்டிருக் கிறார்கள். கல்வியில் வளர்ச்சியடைய அனுமதி இல்லை. உயர்நீதி மன்றத்திலேயே சூத்திரன் ஒருவன் சந்நியாசி ஆனது குறித்து ஒரு வழக்கு எழுந்தபோது, அந்த வழக்கில் "சந்நியாசியாகிற உரிமை சூத்திரனுக்குக் கிடையாது, பிராமணன் மட்டும்தான் சன்னியாசியாகலாம்" என்று உயர் நீதிமன்றத்திலேயே தீர்ப்பு கூறப்பட்டது.

"ஒரு பிராமணர் அல்லாதவருக்குத் தமது மனைவியிடம் ஆண் மகவு ஏற்படாமல் தமது காமக் கிழத்தியாகிய ஒரு பரத்தையிடம் ஓர் ஆண் மகவு ஏற்படக்கூடியதாக இருந்தால், அவருடைய சொத்து முழுமைக்கும் தாசி மகனே முழு உரிமையுடையவனாவான் என்று உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பளித்துள்ளார்கள். ஆனால் பிராமணர்களுக்கு மட்டும் அப்படிப்பட்ட சட்டம் ஒன்றும் இல்லை". பிராமணனுக்குப் பரத்தையிடம் ஆண் மகவு பிறந்தாலும் அவனது சொத்தில் பங்கு கேட்க முடியாது. கிணறு, குளம், மருத்துவமனை, கோவில் முதலிய பொது இடங்களில் பிராமணர்கள் தங்கள் தருமப்படி ஏற்கெனவே தாங்கள் உடுத்திய உடைகளைத்தான் மற்றவர்கட்குக் கொடுப்பார்கள். ஆனால் பிராமணன் மற்ற வகுப்பார் வீட்டிலே வேலை செய்தாலும் அவனுக்குப் புது உடைதான் கொடுப்பார்கள். ஏற்கெனவே கட்டி வெளுத்த உடையைக் கொடுக்கமாட்டார்கள். வெள்ளைக்காரன் ஆட்சியில் சிறையிலே கூட பிராமணர்கட்குத் தனி உணவு - பிராமணர் சமையல் ஏற்பாடே இருந்தது. ஆக இவையெல்லாம் பிராமணர் அல்லாத மற்றவர்களுடைய மனங்களை எவ்வளவு

புண்படுத்தியிருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"பண்டைய காலத்தில் நம்முடைய தென்னிந்தியாவில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், சாத்தனார் இளங்கோவடிகள், நக்கீரர், கம்பன், புகழேந்தி, சேக்கிழார் போன்ற புலவர்கள், பெருங்கவிஞர்களாகவும் விளங்கி இருந்தது யாவரும் தெரிந்ததே. இப்படிப்பட்டவர்களை முன்னோர்களாகக் கொண்ட சந்ததியாரைச் சூத்திரர் என்று அழைக்கிறார்கள்." திருவள்ளுவரின் பரம்பரையினர் சூத்திரர், சேர-சோழ-பாண்டிய வழியினர் - சங்கப் புலவர்கள் வழியினர் - நாயன்மார் - ஆழ்வார்கள் வழியினர் எல்லாம் சூத்திரர். என்ன பொருள்? ஒரு மதிப்பிற்குரிய பாரம்பரியம் உள்ள மக்கள் இழிமக்களாக இந்த நாட்டிலே ஆக்கப்பட்டார்களே ஏன்? என்று அவர் கேட்கிறார்.

"தென்னாட்டுத் திராவிட மன்னர்களால் சைவ, வைணவ மடங்களும் ஏற்படுத்தப்பட்டு அவற்றுக்குப் போதுமான சொத்துக்கள் விடப்பட்டு, சைவ, வைணவப் பெரியோர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்த நிலையில், தற்காலப் பிராமணர்கள் தந்திரமாகத் தங்களுடைய செல்வாக்கால் Scheme Suit என்ற பெயரில் ,நீதிமன்றத்திலே ஒரு வழக்குத் தொடர்ந்து இராமேசுவரம், குன்றக்குடி, வைத்தீசுவரன் கோவில் போன்ற கோயில்களைத் தங்களின் ஆளுகையின் கீழ், கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவரையில் மடாதிபதிகளாக இருந்த மற்றவர்களிடம் அதன் ஆளுகை இருந்தது.

திருக்கோயிலில் நைவேத்தியம் பிராமணரே செய்ய வேண்டும் என்று வழக்குத் தொடர்ந்து அவர்கள் உரிமை கொண்டனர். "அரசாங்கம் கோவில் முதலிய மத விஷயங்களில் பிரவேசிக்கவில்லை என்று சொல்லியிருந்தும்,

வெள்ளைக்காரன் ஆட்சியில் பிராமணர்கள் தங்களுடைய செல்வாக்கால், திராவிடர்களால் ஏற்படுத்தப்பட்ட தரும சொத்துக்களில் இருந்து பொருள் எடுத்துத் தங்களுடைய சாதியர்களுக்கே பயன்படும் வகையான சமற்கிருதக் கலாசாலைகளை நடத்தி வருகிறார்கள்."

தளவாய் எம்.டி. சுப்பிரமணிய முதலியார் சொல்கிறார்: "கோயில் கட்டினவன் தமிழன்; விக்கிரகமோ தமிழனைப் போல, பாரம்பரியமாக நடைபெற்றதோ தமிழ் வழிபாடு, அதற்கு உரிமை உள்ளவர்கள் பண்டாரங்கள் அல்லது அறங்காவலர்கள். ஆனால் 'ஸ்கீம் சூட்" போட்டு அதை எடுத்துக் கொண்டவர்களோ, அவைகளுக்கு வந்த பெரிய வருமானத்தைச் சமற்கிருதக் கல்விக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்து மதப் பெயரால்தான் அந்த வேலையினைச் செய்யமுடியும். மேலும் 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டிலே பலபேர் சாதி உயர்வு பெற சற்சூத்திரன் என்ற பெயரைத் தங்களுக்கு உரியதாக மேற்கொண்டார்கள்.

"பிராமணர்களைப் போல் நடிக்கும் பிராமணர் அல்லாதார்களைக்கூட மிருகத்துக்கும் கேவலமாக மதித்து நடத்தி வந்தவர்களே பிராமணர். நாட்டின் பூர்வீகக் குடிகளெல்லாம் பஞ்சமர்களாய்த் தாழ்த்தப்பட்டார்கள். "இங்ஙனம் தாங்கள் வசிக்கும் வீதிகளிலும் பொது வீதிகளிலும் மேற்படி திராவிடக் குடிகளை வரவிடாது தடுத்தும், கல்வி, ஞானம் முதலியவற்றைக் கொடுக்க மறுத்தும் வருவது, ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டிருந்த காலத்திலும் நடந்தது. கிறித்தவப் பாதிரியார்கள், மேல்வகுப்பாரால் புறக்கணிக்கப்பட்டு வந்த பூர்வீகக் குடிமக்கள் மீது கருணை கூர்ந்து, தங்கள் மதத்தில் சேர்த்து, கல்வி, ஞானம் முதலியவற்றைக் கொடுத்து உலகத்தில் சுதந்திரத்துடன், மனிதர்

அடையக்கூடிய சகல வாய்ப்புக்களையும் அடையும்படியாகச் செய்திருக்கிறார்கள்". சிவன் கோவிலுக்குச் செல்லும் சைவரான பெரியவர் சொல்கிறார், கிறித்தவப் பாதிரியார்களே நம் மக்களை மனிதர்களாக வாழவைத்தனர் என்று. இந்நாட்டிற்கு ஆங்கிலேயர் வருவதற்கு முன்னும், பின்னும் கிறித்தவர்களும், முகமதியர்களும், பிராமணரல்லாதவர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் தங்கள் மதத்தில் சேர்த்து, சமத்துவ முடையவர்களாக்கி, சகல உரிமைகளையும் பெறச் செய்திருக்கிறார்கள்.

இந்தச் சூழலில்தான் தியாகராயர் நீதிக்கட்சியைத் தோற்றுவித்தார். இந்தப் பின்னணியை நினைவூட்டுவதற்குக் காரணம் இதுவே. தியாகராயர் சொல்கிறார்: "திராவிடச் சிந்தனைகளின் தலைவரான திருவள்ளுவர், அவ்வை, கம்பர் ஆகியோர் ஆண்டவனின் தலையிலிருந்து தாம் பிறந்ததாக உரிமை கொண்டாடவில்லை. பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தவன்தான் ஞானியாகிறான் என்பதற்கு மாறாக, இவர்களெல்லாம் பிரம்மா முகத்தில் இருந்து பிறக்கவில்லை. நமது நாயன்மார்களும், ஆழ்வார்களும் பிறப்பினால் உயர்வு கருதியதில்லை. நம்மாழ்வார், பெரியாழ்வார், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர் உட்பட எவரும் பிறவி சாதி உயர்வைக் கருதியவர்கள் அல்லர். இந்தப் பிறவி சாதி வித்தியாசங்களை ஆரியர்தாம் தென்னகத்தில் அறிமுகம் செய்ததோடு பல்வேறு தீங்குகளை ஏற்படுத்திய வர்ணாசிரம தர்மமாகப் பரப்பி நிலைநிறுத்தினார்கள்". உண்மையில் தமிழ்நாட்டிலேயே 300 குலம் இருக்கிறது. குலம் என்றால் அவன் பிறந்த குடும்ப வழி, அவன் வழியைச் சேர்ந்தவர்கள் தனிக்கூட்டம் என்று பொருள். அவனைவிட மற்றொருவன் உயர்வு, உயர்ந்த சாதி என்று சொல்ல இடமில்லை.

மனு தரும சாதி நாகரிகமே நமது நாட்டில் படிப்பறிவில்லாத மடமை நிலைக்க ஏதுவாக அமைந்தது.

சூத்திரர்கள் படிக்கக்கூடாது என்று ஆணை பிறந்தது. அன்றைய நிலைமைதான் தலைமுறை பலவாகத் தொடர்ந்து நமது மனப்பான்மையில் நாம் தாழ்வுற ஏதுவாயிற்று. யாராவது இன்றைக்குச் சூத்திரன் எனப்பட்டவனைப் பார்த்து, உனக்கு ஏனடா கல்வி என்று கேட்டால், கேட்டவனை அறைவான். ஆனால், அன்றோ தமிழர்கள் அடிமை மனநிலைக்கு ஆட்பட்டிருந்தனர்.

புராணகாலத்தில் ஏகலைவன் என்னும் வேடன் துரோணாச்சாரியாரிடம் வில்வித்தை கற்றுக்கொள்ள விரும்பினான். துரோணாச்சாரியார் அவனுக்குக் கற்றுத்தர ஒப்பவில்லை. அப்படி விரும்பாததற்குக் காரணம் அருச்சுனனுக்குப் போட்டியாக அவன் வந்துவிடுவான் என்று துரோணாச்சாரியார் பயந்ததாகும். மற்றொரு காரணம் சத்திரியர் அல்லாத கீழ்ச்சாதிக்காரனுக்கு இந்த வில்வித்தையைக் கற்றுத் தரக்கூடாது என்னும் வருண தருமம். வில்வித்தையால் அன்றாட வாழ்க்கைத் தொழில் நடத்துபவனுக்கு அந்த வித்தையைக் கற்றுத்தர மறுப்பதுதான் ஆரிய தருமம். ஏகலைவன் துரோணச்சாரியார் மாதிரி ஒரு களிமண் பொம்மையைச் செய்து வைத்து மானசீகமாக வழிபட்டு வில்வித்தை பயின்று வல்லவனும் ஆனான்.

அவன் வல்லவன் ஆன பின்னர், வேகமாகப் பாய்கிற புலியையோ, பன்றியையோ ஒரே ஒரு கணையால் அடித்து வீழ்த்தியதைப் பார்த்துவிட்ட அருச்சுனன், துரோணாச்சாரியாரிடம் கேட்கிறான். "எனக்குத் தெரிந்த வில்வித்தை இந்த ஊரில் இன்னொருவனுக்குத் தெரிந்திருக்கிறதே, அவன் யார்?" என்று. "நான் அவனுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை!" என்கிறார் துரோணாச்சாரியார். ஆயினும், அவன் எப்படிக் கற்றான் என்று அறிய அவனது குடிசையைத் தேடிக்கொண்டு போகிறார். அவனை

அழைத்துக் கேட்கிறார். அவன் சொன்னான், "நீங்கள் கற்றுத் தரமாட்டேன் என்று மறுத்ததால், நான் உங்களைப் போலச் சிலை ஒன்றைச் செய்து வைத்து, தினம் அதை வழிபட்டு வில்வித்தையைக் கற்றுக் கொண்டேன்!" என்று. அப்படிப் பயின்று அந்த ஆற்றலைப் பெற்றதாக அவன் சொன்னதைக் கேட்டுத் துரோணர் மகிழவில்லை. அவன் குருவாகக் கொண்டு வழிபட்ட அந்தத் துரோணாச் சாரியாராலேயே அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "இதை என்னிடமிருந்து கற்றுக் கொண்டதற்கு எனக்குக் காணிக்கை தரவேண்டும்" என்று கேட்கிறார். "நான் என்ன காணிக்கை தரவேண்டும்?" என்று வேடன் கேட்டான். "எந்த விரல் கொண்டு நீ கற்றுக் கொண்டாயோ அந்தக் கட்டை விரலை எனக்கு வெட்டிக் கொடு" என்றார் துரோணாச்சாரியார். துரோணர் கேட்டதை மறுக்காமல் ஏகலைவன் தன் கட்டைவிரலை உடனடியாக வெட்டிக் கொடுத்தான். இதுதான் அந்த நாள் மனு தருமம்!

ஆனால், தேசியக்கவி பாரதியார் போன்ற முற்போக்குச் சிந்தனையாளர்கள் இதைக் குறித்து வருத்தப்பட்டிருக் கிறார்கள். பண்டித சவகர்லால் நேரு ஒரிசாவுக்குச் சென்றபோது அந்தக் கதையைக் கூறி ஒருவர் குறைபட்ட போது, "அது அந்தக் காலத்து மரபு. இந்தக் காலத்தில் எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்" என்றார். பிராமணன் தான் குருவாக இருக்கலாம்; மற்ற சாதிக்காரர்களுக்கு, குறிப்பாகச் சூத்திரர்களுக்கு எதையும் கற்றுத் தரக்கூடாது என்பது வருண தருமம். தான் கற்றுக் கொடுக்காமலேயே தானாகக் கற்றுக் கொண்ட ஏகலைவனிடம் கட்டை விரலையே காணிக்கையாகத் துரோணாச்சாரியார் கேட்டார்; அவனும் கொடுத்தான் என்பது பழைய செய்தி. அறிஞர் அண்ணா இதைப்பற்றி ஒருமுறை பேசியபோது சொன்னார், "ஏகலைவன் தனது கட்டை விரலை வெட்டிக் கொடுத்ததன் மூலம் எவ்வளவு பெரிய உண்மை நாட்டு மக்களுக்குத்

தெரியவந்தது. ஏகலைவன் வெட்டித் தர மறுத்திருந்தால் துரோணரின் வருணதரும மனப்பான்மையை நாடறிந்திருக்குமா?" என்று. ஆனால், இன்றைக்கு அந்த ஏகலைவனும், தனக்கு வில்வித்தையைச் சொல்லி கொடுக்காத துரோணரை நோக்கி "ஏனய்யா, என் கட்டை விரல் காணிக்கை?" என்று கேட்பான். இக்காலப் பகுத்தறிவு வாதியானால், துரோணர் கேட்ட கட்டை விரலைத் தருவதற்குத் தன் கட்டை விரலைப் போன்றே ஒரு களிமண் கட்டை விரலைச் செய்து அவருக்குக் காணிக்கையாக்கி இருப்பான். அவர் வேண்டுமானால் அதற்கு வழிபாடு செய்து பயன் பெறட்டும் என்பான். அக்காலத்தில் ஏகலைவன் போன்றோர் எவ்வளவு வெள்ளை மனத்தினராக உண்மையுடன் நடந்து கொண்டனர் என்பதை இச்செய்தி உணர்த்தும். உரிமை உணர்வு அடியோடு மரத்துப்போய் இருந்தபோது அந்த மனநிலை. உரிமை உணர்வு வருகிறபோது அந்த மனநிலை மாறத்தான் செய்யும். மனிதனின் உரிமை உணர்வைக் காவாத மனப்பான்மைதான் தமிழனை வீழ்த்த ஏதுவாயிற்று.

ஆரியர்கள் எல்லோரும் அறிவாளிகள் அல்லர். பேராசிரியர் பி.டி. சீனிவாச அய்யங்கார், இராமச்சந்திர தீட்சிதர், பேராசிரியர் நீலகண்ட சாத்திரி போன்று எத்தனை பேர் இருக்கிறார்கள்? பார்ப்பனர்களுக்கு மட்டுமே அறிவு சொந்தமில்லை, எனினும், அவர்களுக்கு மட்டுமே அந்த வாய்ப்பு தரப்பட்டிருந்தது. அதனால் ஆர்வம் கொண்டு உழைத்தார்கள். நம்முடைய மனப்பான்மையில், நம்முடைய தகுதிக்கு மேம்பட்டதை நாம் அடைந்துள்ளதாக எண்ணுவதால் மேலும் தொடர்ந்து முயலும் வேட்கை வளரவில்லை. அதற்கு மாறாகப் பார்ப்பனர் எல்லாத் தகுதியும் ஞானமும் தங்களுக்கே உண்டென்று உரிமை கொண்டாடிப் பழக்கப்பட்டதால், மேலும், மேலும் உயர்வடையும்

வேட்கையுடன் முயல்கிறார்கள். வைதிகப் பார்ப்பனர் ஆதிக்கம் பெறவே, பல்வேறு அநீதிகளை ஏற்படுத்தும் வருணாசிரம தருமத்தை நாட்டினார்கள். அந்தத் தருமந்தான் படிப்பறிவில்லாத மக்களிடம் மடமையை நிலைநாட்டியது. அதன் மீதுதான் பிராமண ஏகபோகச் செல்வாக்கு எழுப்பப்பட்டிருக்கிறது. இந்தச் சமுதாயக் கொடுங் கோன்மையை எதிர்த்திட ஒரு புரட்சி ஏற்படா விடினும், ஓர் அறிவு விளக்க - வழி எதிர்ப்பினைத் திராவிட இயக்கம் ஏற்படுத்தியிருக்கிறது.

2400 ஆண்டுகளுக்கு முன்பு கவுதம புத்தரின் அறிவு மறுமலர்ச்சி சமயம், அனைத்து வகுப்பாரையும் சமத்துவத்துடன் ஒன்றுபடுத்த முனைந்தது. ஆனால், வருணாசிரம தருமம் மறுபடியும் குப்தர் கால ஆட்சியில் செல்வாக்குப் பெற்றதால், புத்தர் நோக்கம் வெற்றி பெறவில்லை. அந்தப் புத்தரின் சிந்தனை அலை வளர்ந்து விடாமல் தடுக்கவும், வருண முறை மக்களிடம் செல்வாக்குப் பெறவும் ஏதுவாகப் புத்தரையே அவதாரமாக்கி விட்டார்கள். பத்து அவதாரத்திலே புத்த அவதாரம் ஒன்று என்றனர். 50 ஆண்டுகளுக்கு முன்னர் இந்துப் பஞ்சாங்கத்திலே புத்தர் படம் வெளியிடப்பட்டிருந்தது. புத்த மதம் ஒரு தனி மதம், இந்து மதமன்று என்று நிலைநாட்ட அவர்கள் நீண்ட காலம் போராட வேண்டியிருந்தது. 2400 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய புத்தருக்கே இந்த நிலை. பிராமணராக இருந்தாலும் வைணவ இராமானுசாச்சாரியார் கோவில் அமைப்பில், பிராமண வைதிக மதக் கொடுங்கோன்மையைக் குறைப்பதற்கு முயன்றார்.

இராமானுசர் காலத்திலே ஆதிதிராவிடர்களையும் தம்மைப் பின்பற்றுவோராகச் சேர்த்துக்கொண்டு, அவர்களைத் திருக்குலத்தார் என்று அழைத்தார். ஆதிசங்கரர் போன்ற

வைதிகர் பலர் - தங்களைக் குருவாக ஏற்க ஆதிதிராவிடரும் - (சூத்திரரும்) முன்வந்தாலும், அவர்களை ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள் என்பதைக் கருதும் போதே இராமானுசரின் பரந்த நோக்கத்தின் சிறப்பு தெளிவாகும். இராமானுசரின் இந்த மனித நேயச் செயல் வைணவத்துக்கு ஒரு செல்வாக்கை அளித்தது. மேலும் சைவத்தை விட வைணவத்துக்கு ஒரு பரந்த நோக்கம் இருப்பதாக உறுதிப்படுத்துவதற்கு இந்தச்செயல் காரணமாக இருந்தது. அதே போல, கருநாடகத்திலே தோன்றிய பசவர், மக்களின் சாதி வேற்றுமையை ஒழித்து ஒன்றுபடுத்தும் முயற்சி மேற்கொண்டார். அது ஒரு வகையில் இன்றும் தொடர்கிறது,

மராட்டியத்தில் தோன்றிய பாபுராவ் பூலே என்ற ஒரு சிறந்த சிந்தனையாளர், ஆரிய வைதிகக் கொள்கையை எதிர்ப்பதற்கும் சாதிபேதத்தை ஒழிப்பதற்கும் ஓர் இயக்கம் நடத்தினார். 100 ஆண்டுகட்கு முன்னர் கேரளத்தில் நாராயண குருவும், ஆந்திராவிலே கவிஞர் வேமன்னாவும், தமிழ்நாட்டிலே பெரியாருக்கு முன்னதாக, வடலூர் வள்ளலாரும் இறைப்பற்று வழியில் ஒருவகை சமரச சுத்த சன்மார்க்க இயக்கம் கண்டவர் ஆவர். அந்த முற்போக்குக் கொள்கைகளை உணர்ச்சியோடு பாடியவர் பாரதியார். பெரியார், அவர்கள் சுயமரியாதை இயக்கம் கண்டு பகுத்தறிவுக் கொள்கைகளை மக்களிடத்திலே எடுத்து வைத்து வாதாடி நிலைநாட்டுகிற அரும்பணி ஆற்றினார். திருக்கோயில்களில் சில சமூகத்தாரை நுழைய விட மறுப்பதைக் குறித்துக் கேட்டவர்களுக்கு, திரு.வி.க. தாம் தலைமை ஏற்றிருந்த விருதுநகர் மாநாட்டில் சொன்னார்: "உங்களை உள்ளே விட மறுக்கும் கோயிலுக்கு நீங்கள் செல்லாதீர்கள்; ஆண்டவன் அங்கு மட்டுமில்லை; எங்கேயும் இருக்கிறான்" என்று.

ஆங்கிலேயர் ஆட்சி பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராகச் செயற்படவில்லை என்றாலும், பலவகுப்பாரும் பொதுவான கல்வி கற்கும் நிலை தோன்றியதாலும், பல்வேறு வளர்ச்சி மாற்றங்கள் உருவானதாலும், அன்றையச் சமுதாயச் சூழ்நிலை மாறியுள்ளது. "எல்லாச் சாதித் தடைகளையும் உடைத்து எறிவதற்கும், தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கி விடுவதற்கும் சமூகச் சீர்த்திருத்தம் மேற்கொள்வதற்கும் இதைவிட உகந்த தருணம் கிடைக்கவே கிடைக்காது. சாதியை ஒழிக்க சமூகச் சீர்திருத்தத்திற்கு வழி காண இது நல்ல சந்தர்ப்பம். சமுதாய மாற்றம் ஏற்படுத்தும் திருப்பம் ஒரே ஒரு முறைதான் வரும். மனித வாழ்வில் கிடைக்கும் ஒரேயொரு சந்தர்ப்பம் இது. இல்லையேல் துன்பப்படுகுழியில் விழுந்து நமது மக்கள் என்றென்றும் தவிப்பர்" என்று தியாகராயர் சொல்கிறார். அதன் மூலம் திராவிடத்தில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தினார். அதுவே தென்னாட்டில் - தமிழ்நாட்டில் ஒரு மறுமலர்ச்சி உருவாவதற்கு வித்திட்ட செயலாகும்.

உண்மையில் இந்தியாவில் இரண்டு இறைத் தத்துவ வழிக் கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று தெய்வங்களைத் தம்முடைய ஆதிக்கத்திற்குக் கருவிகளாக வைத்துக் கொண்டு பயன்படுத்துதல். இன்னொன்று தெய்வம் என்பது பேராற்றல் மிக்கது. அதற்கு நாம் அடிமையாகவேண்டும் என்பது. இரண்டிலேயும் எனக்கு ஈடுபாடு இல்லை. தெய்வம் என்பது ஒரு கருத்து, எண்ணம் (conception). அப்படிப்பட்ட எண்ணத்தில், எல்லாம் வல்லவன் இறைவன், எல்லாவற்றையும் படைத்தவன். அவன் நம்மை ஆட்டி வைக்கிறான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் நம்பிக்கை கொள்வது ஒன்று. இது திராவிடரின் மரபு வழிப்பட்ட நம்பிக்கை. தெய்வம் என் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது; மந்திரம் எனக்குக் கட்டுப்பட்டது. எனவே,

நான் (பிராமணன்) ஆணையிட்டால் தெய்வம் அதை நிறைவேற்றும் என்பது மற்றொன்று. இது ஆரியக் கொள்கை.

மந்திரங்களுக்குத் தெய்வங்கள் கட்டுப்பட்டவை. பிராமணர்களுக்கு மந்திரங்கள் கட்டுப்பட்டவை என்பதால் பிராமணர்கட்குத் தம்மைப்பற்றி ஓர் உயர்வு மனப்பான்மை. அதனால் இயல்பாகவே அவர்கள் எசமான உணர்வு பெற்றார்கள். நம்மை அறியாமலே நம்மால் ஆவது ஒன்றும் இல்லை; எல்லாம் அவன் செயல் என்னும் ஒரு தாழ்வு மனப்பான்மைக்கு நம்முடைய உண்மையான இறைப்பற்று நம்மை ஆளாக்கி வைத்திருக்கிறது. அடக்கமுடையானாய் அடியாருக்கு அடியவன் யான் என்றால், அது நம்மை நம்நிலையிலே தாழ்த்தி வைக்கிறது. நாம் அடியாருக்கு அடியாராகக் கூட இருக்கலாம் ஆதிக்க வாதியாக எவரும் இல்லாவிடில்! ஆனால், ஆதிக்கம் செலுத்துகிறவன் அப்படித் தன்னை வல்லவனாக எண்ணுகிறபோது அவனுடைய ஆதிக்கமே வளர்ந்தோங்கி நிலை பெறுகிறது.

ஆதி சங்கராச்சாரியார் ஒரு பெரிய ஞானி என்று கருதப்பட்டவர்; வேதாந்தக் கொள்கைக்கு இந்த நாட்டிலே ஒரு சிறப்பான இடத்தைத் தேடித் தந்தவர். விவேகானந்தருக்குக் கூட அதே வேதாந்தக் கொள்கைதான். அமெரிக்காவிற்குச் சென்று சிகாகோவில் நடைபெற்ற சர்வ சமய மாநாட்டில் எடுத்துரைத்து அதற்கு ஒரு பெருமை தேடித் தந்தவர் விவேகானந்தர். விவேகானந்தர் தொடக்கத்திலே நாத்திகராக இருந்து, இராமகிருட்டிண பரம அம்சரிடத்திலே சீடரான போது அந்த உணர்வு மாறி, இறை என்ற பரம்பொருள் உண்மை என ஏற்றுக் கொண்டவர். ஆதிசங்கரர் பற்றி அவர் சொல்கிறார், ''ஆதி சங்கரரின் அறிவு வாள் முனை போன்று கூர்மையானது. அவர் ஆற்றல் மிக்க சிந்தனையாளர்,

சந்தேகமில்லை. ஆனால், அவரிடம் அவ்வளவுக்குப் பரந்த பொது நோக்கம் இல்லை. மானிடம் பற்றிய பொதுநோக்க மில்லை, அவருடைய இதயமும் அப்படியே இருந்தது. அவரிடம் தான் ஒரு பிராமணன் என்ற கர்வம் இருந்தது" என்று.

ஆதிசங்கரர் காலம், கி.பி. 7வது நூற்றாண்டு. கேரளத்தில் காலடியிலே பிறந்தவர். தென்னிந்திய நம்பூதிரி பிராமணர். பிராமணன் அல்லாதவன் பிரம்மஞானம் பெறமுடியாதவன் என்று தமது வேதாந்தச் சூத்திர விளக்க உரையில் எழுதியுள்ளார். விவேகானந்தர் கேட்கிறார், "பிராமணன் அல்லாதவனுக்குப் பிரம்மஞானம் கிடைக்காது! என்ன சாதுர்யமான வாதம், சங்கரரின் வாதம்! முற்பிறவியில் பிராமணனாக இருந்ததால்தான் விதுரர் பிரம்மஞானி ஆனார் என்பது.. போன சென்மத்திலே பிராமணனாக இருந்ததால்தான் இந்தச் சென்மத்தில் பிரம்மஞானம் கிடைத்தது என்கிறார் சரி. இப்போது ஒரு சூத்திரன் பிரம்மஞானம் பெற்றால் ஆதிசங்கரர் கருத்துப்படி அவன் போன பிறவியில் பிராமணனாக இருந்ததால்தானே கிடைத்தது. அப்படித் தானே! கடவுளே! பிராமணத்துவத்தை இப்படி இழு இழு என்று ஏன் இழுக்க வேண்டும்? பிராமணத்துவத்தினுடைய மகிமையைக் காப்பாற்ற, உயர்வாகக் கருத இன்றைக்கு இருக்கிற சூத்திரனைப் போன சென்மத்திலே பிராமணன் ஆக இருந்தவன் என்கிறார். ஆக, அந்தப் பிராமணன் எவ்வளவு அயோக்கியனாக இருந்திருந்தால் இந்த சென்மத்திலே சூத்திரனாகப் பிறப்பான்?'"

விவேகானந்தர் மேலும் கூறுகிறார், "முதல் மூன்று சாதியினர் வேதங்களைப் படிக்கலாம், பிரம்மஞானம் அடையலாம் என்று வேதங்கள் கூறவில்லையா? எனவே,

சங்கரர் வேதங்களுக்கு எதிராகத் தமது புத்திசாலித் தனத்தைக் காட்ட வேண்டியதில்லை. இந்த வாதத்திலே தோற்ற பல புத்தபிட்சுகளை நெருப்புக்கு இரையாக்கியவரை என்னவென்று சொல்வது? இதயம் இல்லாதவர் என்று சொல்வதா? புத்த பிட்சுகள் தங்கள் வாதத்தில் தோற்றபோது நெருப்பிலே போடப்பட்டதாகச் செய்தி கூறப்பட்டுள்ளது. சங்கரரின் இந்த இரக்கமற்ற செய்கையை என்னவென்று சொல்வது? ஆனால், புத்தரின் இதயத்தைப் பார், ஓர் ஆட்டுக்குட்டியைக் காப்பாற்றத் தமது உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த அவரது விவேகத்தைப் பார். புத்தர் அவரது கொள்கையான "பகுஜன உறிதாய, பகுஜன ஸூகாய" என்பதன் மூலமாகப் பலருடைய நன்மைக்காகவும், பலருடைய மகிழ்ச்சிக்காகவும்தான் (மனிதன்) வாழவேண்டும் என்பது எவ்வளவு மகத்தானது. "எவ்வளவு பரந்த இதயம்! என்ன கருணை!"

விவேகானந்தர் ஏன் இவ்வாறு விளக்குகிறார் என்றால், வைதிகப் பிராமணீயம் சமுதாயத்தை அழித்துவிட்டது என்பதனால்தான். மனித நேயத்தை அழித்துவிட்ட வைதிகக் கொடுமையைப் பல்வேறு இடங்களில் விவேகானந்தர் கண்டித்திருக்கிறார். அவரது உரைகள் எல்லாம் புத்தகங்களாக இராமகிருட்டிணர் மடத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. வாய்ப்பு உள்ளவர்கள் ஓய்வு நேரத்திலே படித்தால் அவை சிந்தனைக்குத் தெளிவு தரும்.

சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் நீதிக்கட்சியின் ஆதரவுடன் ஆட்சி அமைத்த டாக்டர் சுப்பராயன் முதலமைச்சராக இருந்தபோது, அமைச்சராக இருந்த முத்தையா முதலியார் என்ற அறிஞரால் வகுப்புவாரி உரிமை அரசாணை பிறப்பிக்கப்பட்டது. 1921வது ஆண்டிலேயிருந்து

சட்டமன்றத்திலே தொடர்ந்து வாதாடித் தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட வகுப்புவாரி உரிமையைப் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்திய அன்றைய அரசு நிருவாகம் நிறைவேற்றாத காரணத்தால்; சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றினாலும் அதிகாரிகளை வேலைக்குத் தேர்ந்தெடுப்பவர்கள் திரும்பத் திரும்பப் பிராமணர்களையே தேர்ந்தெடுத்த காரணத்தால், அதனை மாற்றும் வழியாக முதன்முதலாக இந்த வகுப்புவாரி ஆணை வெளியிடப்பட்டது. வகுப்புவாரி உரிமை ஆணை வெளியிட்ட காரணத்தாலேதான் அப்போதைய சென்னை மாநில மக்கள் தொகையில் நூற்றுக்கு 68பேராக இருந்த பார்ப்பனர் அல்லாதாருக்கு 5 இடம், 3 பேராக இருந்த பார்ப்பனருக்கு 2 இடம், 4 பேராக இருந்த கிறித்தவருக்கு இரண்டு இடம், 8 பேராக இருந்த முகமதியருக்கு 2 இடம். 16 பேராக இருந்த ஆதிதிராவிடருக்கு 1 இடம் என்று முதல் தடவையாக வகுப்புவாரி ஆணை (The First Communal G.O.) பிறப்பிக்கப்பட்டது. அதையும் சிலர் எதிர்த்தார்கள். அந்த அமைச்சரவையிலே இராமரத்தினம் ஐயர் என்பவரும் அமைச்சராக இருந்தார். அவர் இதனை ஆதரித்தார். பிராமணர்களின் விகிதத்துக்குக் கிடைத்திருக்க வேண்டிய பங்கை விடக் கூடுதலாகக் கிடைத்திருக்கும்போது எதிர்ப்பு ஏனென்றார். ஆனால், அந்த விளக்கமெல்லாம் சொல்லியும் அந்தக் காலத்திலே அதை ஒத்துக் கொள்ளக்கூடியவர்களாகத் தேசியப் பார்ப்பனர் இல்லை.

அதே போல வகுப்புச் சுழற்சி முறை, (Roaster System) ஏற்படுத்தி அரசு அலுவல்களுக்குப் பணியாளர்கள் எடுக்கப்படும்போது முதல் இடம் பிராமணரல்லாதாருக்கு எனில், 2வது இடம், 3வது இடம், 4வது, 5வது இடம், இன்னின்னாருக்கு என்பது போன்ற ஒரு முறை வகுத்து அரசு வேலைகள் வழங்கப்பட்டன.. அதனாலேதான் அந்தநாள்

தமிழன் கல்வித்துறையில், கல்லூரியிலே இடம் பெற்றான். கல்லூரிகளிலே ஒரு கல்விக் குழு அமைத்து அதன் மூலம் வகுப்புரிமை அடிப்படையில் இடமளிக்கப்பட்டது. இப்பொழுதுகூடக் கல்லூரிகளிலே மாணவர்களுக்கு இடம் தருவதை முறைப்படுத்த அந்தந்தக் கல்லூரி முதல்வருடன், ஒரு மூத்த பேராசிரியரையும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்த்த மற்றொரு பேராசிரியரையும் கொண்ட குழு அமைத்துத்தான் செயல்படுத்தப்படுகிறது.

இந்த உரிமைகள் வந்தாலுங்கூட மக்களிடம் விழிப்புணர்ச்சி இல்லாத நிலைமையைப் பெரியார் பார்த்தார். சர் சி. சங்கரன் நாயர் வடக்கே நடைபெற்ற ஒரு தேசியக் காங்கிரசு மாநாட்டுக்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிராமண அறிஞர்களோடு போயிருந்தார். மாநாட்டிலே நிகழ்த்தப்பட்ட உரைகள் முடிந்து உணவுக்குச் செல்கிறபொழுது, அவருடன் வந்த பிராமண நண்பர்கள், “சங்கரா! நீ உங்கள் பந்தியிலே சாப்பிடு. நாங்கள் பிராமணாள் பந்திக்குப் போகிறோம்” என்று சொல்லி விட்டுச் சென்றனர். அதுவரைக்கும் சங்கரன் நாயருக்கு உரைக்காமல் இருந்த உண்மை அப்பொழுதுதான் பளிச்சிட்டது. ஓகோ, தேசியக் காங்கிரசு மாநாடு என்றாலும் உணவுப் பந்தி வேறு வேறுதான்! பிராமணாள் சாதி தருமம் - இங்கேயும் ஆட்சி செய்கிறது என்று வேதனைப்பட்டார். அந்தக் கருத்தைத்தான் பாரதியும் கொண்டிருந்தார்.

ஒரு முறை சர் பிட்டி. தியாகராய செட்டியார் மயிலாப்பூர் கோவில் ஒன்றுக்குக் குடமுழுக்கு நடத்துவதற்கு ரூ. 5000/- நன்கொடை கொடுத்தார் 1914ல் அல்லது 1915 ஆம் ஆண்டில். அன்று 5000 ரூபாய் கொடுத்தால் இப்பொழுது 5 லட்சம் கொடுத்ததுபோல் ஆகும். கோயில் குடமுழுக்கு நடந்தது; அதைச் காணச் சென்றார் தியாகராயர்.

அவரிடம் ஏஜெண்ட் வேலை பார்த்துக் கொண்டிருந்த பிராமணர்கள் எல்லாம் கோபுர உச்சியில் மேலே ஏறி நின்று குடமுழுக்கு கண்டனர். தியாகராயரை மேலே வாராதவாறு ஓர் ஓரமாக உட்கார வைத்தார்கள். அவரோ பெரிய பக்தர், என்னடா இது! நம்மையும் மேலே கூப்பிடுவார்கள் என்று நினைத்தால், ஓரமாக உட்கார வைத்து விட்டார்களே? என்று ஏஜெண்டைக் கூப்பிட்டுக் கேட்டார். "தாங்கள் மேலே வந்தால் தீட்டாகிவிடும்; தோசம் ஏற்படும்'' என்று பதில் கிடைத்தது. எத்தனையோ பெருமைகளுக்கு உரியவரான தியாகராயருக்கே இந்த நிலை. திராவிட இனத்தின் நிலை பற்றி எண்ணிப் பார்ப்பவர்கட்கு இது போதாதா?

அக்காலத்தில் தமிழ்நாடு காங்கிரசு கட்சியின் சார்பாகச் சேரன்மாதேவியிலே ஏழைப் பிள்ளைகளுக்குக் குருகுலம் அமைத்தார்கள். அந்தக் குருகுலத்திலே ஏழை மாணவர்கட்கு உணவும், உறைவிடமும், கல்வியும் வழங்கப்பட்டன. அதை நடத்தும் பொறுப்பு வகித்தவர் வ.வே.சு. அய்யர். அப்போது காங்கிரசு கட்சியின் பொருளாளராக இருந்தவர் வரதராசுலு நாயுடு. காங்கிரசு கட்சி ரூபாய் 5000 நிதி உதவி கொடுத்தது. பெரியார் ஈ.வெ.ரா. அங்கே சென்று பார்த்தபோது பிராமணப் பிள்ளைகளுக்கு மட்டும் முதலில் தனிப் பந்தி. மற்ற பிள்ளைகளுக்குப் பின்னர் தனிப் பந்தி என்ற முறை செயல்பட்டது. அதை எண்ணிப் பார்த்த பெரியார் வ.வே.சு. அய்யரைப் பார்த்து "காங்கிரசு பணம் பொது மக்கள் பணம். அதைக் கொண்டு நடக்கும் குருகுலத்தில் சாதி முறையில் பிரிக்கிறீர்களே; மாணவர்களை வெவ்வேறு பந்தியில் சாப்பிடச் சொல்வது நியாயமாகுமா?" என்று கேட்டார். வ.வே.சு. அய்யர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். அப்படிப்பட்ட அறிஞர் "ஐதீக முறைப்படித்தான் குருகுலம் நடைபெறுகிறது; அந்த

முறையை மாற்றினால் எதிர்ப்பு வரும்" என்று சொன்னார். பெரியார் சுயமரியாதை இயக்கம் தொடங்குவதற்குத் தூண்டுகோலான காரணங்களில் அதுவும் ஒன்று.

அக்காலத்தில் கல்லூரியில் படிக்கச் சேரும் மாணவர்கட்குச் சென்னையிலே மாணவர் விடுதி கிடையாது. மாநிலக் கல்லூரியிலும் விடுதி கிடையாது. பார்ப்பனர் அல்லாத மாணவர்கட்குச் சாப்பிடவும் வழியில்லை. பிராமணர் ஓட்டலில் பார்ப்பனர் அல்லாதார் உள்ளேயே வரக்கூடாது. அப்படி ஒரு சாதி முறை பின்பற்றப்பட்ட காலம். அப்படிப்பட்ட நிலையில்தான் டாக்டர் நடேசனார் 1911, 1912இல் திருவல்லிக்கேணியிலே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, திராவிடர் மாணவர் விடுதி என்ற பெயராலே ஒரு பத்துப் பேர் தங்கிச் சாப்பிட்டுப் படிக்க வழி செய்தார். படித்து வெற்றிபெற்றுப் பட்டம்பெறத் துணை செய்வதன் மூலம் நம்மவர் சிலராவது படித்திட வேண்டும் என்று உதவியவர் டாக்டர் நடேசனார். அவர் பெருஞ் செல்வரும் அல்ல; நடுத்தரக் குடும்பந்தான். அவரது பொதுநலத் தொண்டினைத் திரு.வி.க. பாராட்டியுள்ளார். பலவகையிலும் ஏழைகளுக்குச் சமூகத் தொண்டாற்றுவதில் டாக்டர் நடேசனார் பொதுமக்களின் நன்மதிப்பையும், அன்பையும் பெற்றிருந்தார்.

நான் மாணவனாக இருந்த காலத்தில் கூட 1942இல் கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் பிராமண மாணவர்கட்குத் தனித் தண்ணீர்ப் பானை, மற்றவர்களுக்குத் தனிப் பானை என்று வைத்ததனை எதிர்த்துக் கல்லூரி மாணவர் போராட்டம் நடைபெற்றது. அதன் விளைவாகத்தான் முதல் திராவிட மாணவர் மாநாடு குடந்தையில் நடைபெற்றது.

மதுரையிலே ஒருவருக்கு ராவ் பகதூர் பட்டம் வழங்கப்பட்டதைப் பாராட்டி நடைபெற்ற விழாவுக்கு,

காங்கிரசு தலைவர்கள் பலரும் சென்றனர். அங்கே பிராமணர்களுக்குப் பந்தி போட்ட இடத்திலே இருந்து 300 மீட்டருக்கு அப்பால் பிராமணர் அல்லாதாருக்குப் பந்தி போட்டிருந்தார்கள். சுதந்திரம் கேட்ட கட்சியிலேயே இந்தப் பந்தி வேறுபாடு நடைமுறையில் இருந்தது. இவைகளின் விளைவாக டாக்டர் நடேசனார் முயற்சியால் இணைக்கப்பட்ட தியாகராயரும், நாயரும் நீதிக்கட்சியைத் தோற்றுவித்தனர். அந்தக் கட்சியிலே இளைஞர்களாகச் சேர்ந்தவர்கள்தான் டாக்டர் ஏ. இராமசாமி, முதலியார், சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார், சர் ஏ.டி. பன்னீர்ச்செல்வம், தமிழவேள் பி.டி. இராசன், பட்டிவீரன்பட்'டி சவுந்திரபாண்டியன் முதலானோர்.

அந்த நிலையிலேதான் காங்கிரசின் வழிகாட்டியான காந்தி அடிகளை மிகவும் மதித்தவரான பெரியார் ஈ.வே.ரா. காங்கிரசில் இருந்து வெளியேறி, 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்தார். அவர் தொடங்கிய குடியரசு இதழில் இரண்டு ஆண்டுகள் வரையில் ஒரு பக்கம் காந்தியார் படமும், இன்னொரு பக்கம் கைராட்டினப் படமும் இடம் பெற்றிருந்தன. ஆனால் காந்தி அடிகள் தலைமையில் சுதந்திரத்திற்குக் குரல் கொடுத்து வந்த காங்கிரசு கட்சி பிராமணர்கள் ஆதிக்கம் பெற ஒரு கருவியாகப் பயன்படுகின்ற அளவுக்கு நாட்டு மக்களிடம் ஒரு பெரிய செல்வாக்கு பெற்றிருந்தது. ஆகவே, பார்ப்பனீய - வைதிகப் புரோகிதச் செல்வாக்கை ஒழிக்கும் மனப்பான்மை நமக்கு ஏற்பட்டாலொழிய, எதிர்காலத்தில் தமிழர்கள் உரிமை வாழ்வு அடையமுடியாது என்று பெரியார் கருதினார். எனவேதான், குடியரசு ஏட்டினைத் தொடங்கிச் சுயமரியாதைக் கொள்கையை மக்களிடம் பரப்ப முனைந்தார்.

என்ன அந்தக் கொள்கை? மனிதனுக்கு உயிரினும் மானம் பெரிது, பிறவியில் எல்லோரும் சமம், யாரும்

பிறவியினால் உயர்ந்தவரும் அல்லர், தாழ்ந்தவரும் அல்லர். மகளிருக்கும் ஆண்களைப் போலவே சம உரிமை வேண்டும். சாதிமத வேற்றுமைகள் நீங்கும் வரை, நாட்டின் ஒற்றுமையைக் காக்க, அனைத்து மத, சாதியினருக்கும் அரசியலில் அவரவர் மக்கள் தொகைக்கேற்றபடி பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். கண்மூடித்தனமான பழக்க வழங்கங்களும் - மூடநம்பிக்கைகளும் ஒழியவேண்டும். வேத புராண இதிகாச சாத்திர வழியில் வந்த பழக்க வழக்கங்களால், மனிதனின் பகுத்தறிவை முடக்கும் பார்ப்பனீயத்தை ஒழிக்கும் நிலை உருவாகி வருகிறது. அதனை மக்களிடத்திலே விளக்கிச் சிந்தனைச் சுதந்திரத்தையும், பகுத்தறிவுப் பழக்கத்தையும் வளர்க்க வேண்டும். இவையெல்லாம் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் படிக்கின்ற பேராசிரியர்கள் அறிந்த செய்திகளே.

இந்த உணர்வுகளை மக்களிடம் பரப்புவதற்கு நாட்டிலே எவ்வளவு எதிர்ப்பு? பல ஊர்களில் பொதுக் கூட்டம் போட்டுப் பேசமுடியாத நிலைமை கூட இருந்தது. அந்த எதிர்ப்பை எல்லாம் தாங்கிக்கொண்டு இயக்கம் நடத்தப் பெரியாரைவிடத் துணிவு கொண்ட தலைவர் வேறு எவருமில்லை. அறிஞர் அண்ணா நீதிக்கட்சித் தலைவர்களிடத்திலேதான் முதலில் தொடர்புடையவராக இருந்தார். ஆனால், அவர் முதன் முதலாகக் கலந்து கொண்ட சுயமரியாதை மாநாட்டிலே, அந்தக் கொள்கை நாட்டிலே பரவினால்தான், தமிழர்கள் மனிதத்தன்மை கொண்டு தலைநிமிர முடியும் என்று தாம் உணர்ந்ததை விவரித்தார் அதைத் தொடர்ந்து பெரியாருடைய தலைமையை ஏற்றுக்கொண்டு, சுயமரியாதை இயக்கத்திலே ஈடுபட்டு, அதனை மக்களிடம் பரப்பும் பணியில் தம்மை ஒப்படைத்துக் கொண்டார்.

அறிஞர் அண்ணா பெரியாரோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டு விலகினார் என்பதைச் சிலர், ஏதோ அரசியலில் பகை உணர்ச்சி கொண்டுதான் விலகினார் என்று நினைக்கிறார்கள். அவருக்கு அப்படிப்பட்ட மாறுபாடு கிடையாது. பெரியார் எவ்வளவு தன்னலமில்லாத தலைவரோ, அந்த அளவுக்குத் தன்னலமற்ற தலைவர்தான் அறிஞர் அண்ணா. இயக்கத்தை நடத்தும் முறையில் தமது கொள்கையில் மற்றவர்கள் அவ்வளவு உறுதியாக இருக்க மாட்டார்கள் என்பது பெரியாரின் எண்ணம். தமது கொள்கையிலும் அதைப் பரப்புவதிலும் பெரியார் கொண்டிருந்த உறுதியால், அதை எவரேனும் மாற்றிடக் கேட்டால், "நான் சொல்வதைக் கேட்டால் கேளு, இல்லாவிட்டால் செல்" என்பார். அண்ணா அப்படிச் சொல்ல மாட்டார். தாம் கொண்ட கருத்து மட்டுமே முக்கியம் என்று கருதவும் மாட்டார், தொடர்புடைய அனைவரையும் கலந்தே முடிவு செய்வார். சனநாயக முறையில் செயற்பட்டால்தான், இயக்கம் வளரும் என்பதிலே அண்ணா உறுதி கொண்டிருந்தார். அவ்வகையில் பெரியாருக்கும், அண்ணாவுக்கும் இருந்த வேறுபாடுகளைச் சிந்திப்பவர்கள் விளங்கிக் கொள்ளலாம். பெரியார் தாம் சொல்கிற கொள்கை மட்டுமே முக்கியம் என்றெண்ணுவார்; அது எப்படி வெற்றி பெறும்? யாரைக் கொண்டு வெற்றி பெறும்? யார் அதனை ஏற்றுக்கொண்டு செயற்படுத்துவார்கள் என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க மாட்டார்.

பெரியாரிடம் நான் பழகியிருக்கிறேன். எனக்கு 6 வயதாக இருக்கும்போதே பெரியாரைப் பார்த்துள்ளேன். அவரது பேச்சைப் புரிந்து கொண்டது 10 - 12 வயதிலே. அண்ணாவை 17 வயதிலேதான் தெரியும். கடைசிவரை அவரோடு பழகி உள்ளேன். பெரியாரின் தலைமையை ஏற்று அவருடன் 27 வயது வரையில் பழகிக்

கொண்டிருந்தவனே நான். தந்தை பெரியார் சொல்வார்: "நான் எழுதுகிற எழுத்தை நானே அச்சுக்கோத்து - பத்திரிக்கை அச்சடித்து, எவரும் வாங்கவிட்டாலுங்கூட - அதற்காக நான் கவலைப்பட மாட்டேன்; நானே எழுதுவேன்; அச்சுக் கோப்பேன்; அச்சடிப்பேன்; படிப்பேன்; மடித்து வைத்துக் கொள்வேன்" என்பார். யார் ஆதரவு இருக்கிறது என்பது பற்றியும் கவலை இல்லை என்பார். எதிர்ப்பிலேயே வளர்ந்தவர் அவர். அதற்கு நேர்மாறாக அண்ணா நான் எழுதுவதைப் படிக்கவும் பலர் வேண்டும், பரப்பவும் பலபேர் வேண்டும். அது மக்களைச் சென்றடைய வேண்டும், இல்லையானால் அவ்வளவும் வீண் என்பார். எனவே, நாம் சொல்வதைக் கேட்கக்கூடிய பலபேருடைய நம்பிக்கையைப் பெறவேண்டும். நாட்டு மக்கள் ஒத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு நம்முடைய கருத்து, பொதுநல நோக்கு உடையதாக அமைய வேண்டும் என்று சொல்வார்.

இருவருக்கும் நோக்கம் ஒன்றுதான் - கடவுள் நம்பிக்கையைத் தகர்த்து விட்டால் மத சாதி வேற்றுமை ஒழியும் என்பது பெரியாரின் முடிவு. மக்கள் மனநிலையில் 'கடவுள்' நம்பிக்கையை அறவே ஒழிக்கும் முயற்சி எளிதல்ல. அதை முன் வைப்பதால் மற்ற கருத்துக்களையும் ஏற்கச் செய்வது கடினம். எனவே, கடவுள் குறித்து அவரவரும் தத்தம் நிலையிலிருந்து தெளிவு பெறும் வழியைத்தான் நாம் மேற்கொள்ள வேண்டும் என்று கருதியவர் அண்ணா! 'கடவுள் ஒருவரே' - பலரல்லர் என்ற தெளிவு ஏற்பட்டாலே - பல பொய்மைகளையும் கண்மூடிச் செயல்களையும், மதவேற்றுமைகளையும் களைய முடியும் என்று கருதியவர் அண்ணா! அதனால்தான் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலர் மொழியை மக்கள் ஏற்றாலே போதும் என்றார். பெரியார் நடத்தும் பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தில் நீங்கள் பங்கேற்பீர்களா என்று நிருபர்கள்

கேட்டபோது, நான் பிள்ளையாரையும் உடைக்கமாட்டேன், அவருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டேன் என்று நகைச்சுவை தோன்றப் பதிலளித்தவர் அண்ணா.

இரண்டு நண்பர்கள் - ஒருவன் கடவுள் நம்பிக்கை உடையவன். மற்றவன் நம்பாதவன், அதனால் நண்பனைப் பார்க்குமிடமெல்லாம், கடவுள் நம்பிக்கை மூட நம்பிக்கை, கடவுள் இல்லை என்பதே உண்மை என்பான். மற்றவனோ கடவுள் உண்டு, நம்பாதவனுக்கு நல்வாழ்வோ - நல்ல கதியோ கிடைக்காது என்பான்.

நம்பிக்கையாளனுக்கு ஒரு பெருந்துயரம். அவன் அன்பு மனைவி - ஐந்து குழந்தைகளை விட்டு விட்டு இறந்து விட்டாள். கடவுளே உனக்குக் கண்ணில்லையா என்று புலம்பியவன் கடவுள் இருந்தால் நமக்கு இப்படி நேருமா என்று நம்பிக்கை இழந்திருந்தான். அன்று துயரப்பட்ட நண்பனுக்கு ஆறுதல் கூறினான் மற்றவன்.

சிலநாள் கழித்து ஒரு கார் விபத்தில் சிக்கினான் மற்றவன். அவனுடன் பயணம் செய்த 5 பேர் பலி யானார்கள். அவன் ஒருவனே உயிர் தப்பினான், விபத்துக்கு இலக்கணமில்லை என்றாலும் - தன்னைக் கடவுள் காப்பாற்றியதாக அவன் நம்பலானான். அதை அவன் நண்பனிடத்திலே கூறி ஒப்புக்கொள்ள எண்ணிச் சென்று கடவுள் இருக்கிறார் என்பதை இன்றுதான் உணர்ந்தேன் என்றான். இதிலிருந்தே கடவுள் இல்லை என்பது எனக்கு விளங்கிவிட்டது என்று சொன்னான் நண்பன்.

இதுதான் உலகோரின் கடவுள் நம்பிக்கை அமையும் வகை. இது அவரவர் மனநிலையின் விளைவு. உயர்ந்த ஞானியென உலகம் போற்றும் கவுதம புத்தரிடம் சென்ற சில பிராமணர்கள் - அவரை மடக்கும் நோக்கில் கடவுள் பற்றிய தங்கள் கருத்து யாது? என்று கேட்டனர். அவர்

பூட்டப்பட்ட ஓர் அறையில் உள்ளதைச் சொல்ல உங்களால் முடியுமா? என்றார், முடியாது என்றனர். அதே போன்று, மனிதன் முயன்றால் தெரிந்து கொள்ளக் கூடியவற்றைக் குறித்துப் பல கேள்விகளைக் கேட்டபொழுது, அதைத் தாங்கள் பார்க்காததால் - பிராமணர்கள் தெரியாது என்றனர்.

இவைகளே தெரியாதபோது கண்ணுக்குத் தெரியாத, கருத்துக்கும் எட்டாத கடவுளைப்பற்றி நான் என்ன கூற முடியும் என்றார் புத்தர். விளக்கவோ, விவரிக்கவோ முடியாத ஓர் எண்ணத்தைப்பற்றி - உண்டு என்பதிலோ - இல்லை என்பதிலோ பொருளும் பயனும் இருப்பதாகக் கவுதம புத்தர் கருதவில்லை. வைதிக தருமத்தை ஏற்காததால் அவரை வைதிகர் - நாத்திகர் எனத் தூற்றினர். அவருடைய அறிவு வழிப்பட்ட கொள்கையை - மதத்தை வீழ்த்தினர் என்பது வரலாறு.

அறிஞர் அண்ணா மக்களுக்காகத் தொண்டு செய்யப் புறப்பட்ட நாம் எதையும் மக்களுடைய நிலையிலே இருந்து எண்ணிப் பார்த்து, அவர்கள் தெளிவடையும் வழியில் கொள்கையை விளக்க வேண்டும் என்பார். பெரியாரோ கடவுள் நம்பிக்கையை வைத்தே - வைதிகப் பார்ப்பனர் மக்களை வஞ்சித்து ஏமாற்றிப் பிழைக்கின்ற காரணத்தால் - மக்கள் மனத்தில் கடவுள் நம்பிக்கை ஒழிந்தால்தான் - சாதி, மத வேற்றுமை நாட்டும் வைதிக உணர்வை ஒழிக்க முடியும் என்று உறுதி பூண்டவரானார். அவரது சூழ்நிலையும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் வாழக்கூடிய நிலை. அண்ணா நிலை அப்படிப்பட்டது அல்ல. தன் குடும்பத்தைக் கூடக் காப்பாற்ற வேண்டிய கடமை இருந்தது அவருக்கு. அப்படி இருந்தாலுங்கூட, அண்ணா மற்றவர்களால் எந்த அளவு சிந்திக்கவும் ஏற்றுக் கொள்ளவும் முடியுமோ அந்த அளவுக்கு முறையாகக்

கொள்கைகளை விளக்கிப் பரப்பினால் போதும் என்றார். நான்கூட இவற்றைச் சொல்லவில்லை என்றால் அப்புறம் வேறு எவன் சொல்வான் என்று கேட்பார் பெரியார். நான் மட்டுந்தானா? யார் யாரோ சொன்னார்கள்; நாம் அதை நமது மக்களிடம் பரப்புகிறோம் என்பார் அண்ணா.

தந்தை பெரியார் தம்முடைய சிலை வைக்கப்படுகிற பீடத்திலே எல்லாம் 'கடவுள் இல்லை இல்லவே இல்லை'; என்று எழுதச் செய்வதே அவரது இலட்சியமாயிற்று. அதைச் சொல்வதிலேயே அவருக்கு ஒரு மனநிறைவு. இரண்டு பேருக்கும் தமிழினம் வாழவேண்டும் என்னும் நோக்கம் ஒன்றே. பல்லாயிரக்கணக்கான மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் தமது கொள்கையை விளக்கி, கதையாக, கட்டுரையாக, அறிஞர் அண்ணா வரைவார். தம்மைச் சேர்ந்தவர்கள் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலே தந்தை பெரியார் வரைவார். ஆனால், வரலாற்றுச் சிறப்புள்ள தந்தை பெரியாரின் இயக்கம் செயற்பட்ட பின்னணியில்தான் அண்ணாவினுடைய எண்ணம் - குறிக்கோள் வெற்றி பெற்றது எனலாம். பெரியார் இல்லை என்றால், அறிஞர் அண்ணா இல்லை. அவர்கள் எல்லாம் இல்லை என்றால் கலைஞரும், நானுங்கூட இல்லை. நம்மைத் தலைநிமிரச் செய்யும் அப்படிப்பட்ட திராவிட இயக்க உணர்வு பெரியாரால், அண்ணாவால் நமக்கு - நாட்டுக்குக் கிடைத்தது.

உலகம் பலவிதம்; ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வகை உணர்வுடையவன். அதனால் மக்கள் பலநிலைகளில் - பல்வேறு வழிப்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள். வைதிகத்தை உண்மை என்று நம்பி ஏற்றவனும் இருக்கிறான். அதன் நோக்கமே தெரியாமல் அதற்குப் பலியாகிறவனும் இருக்கிறான். வழிவழியாகப் புரோகிதத்

தொழில் செய்பவர்களிலேகூட, நல்ல மனம் கொண்டவர்களும் உள்ளனர். அந்தத் தொழிலையே அவன் விரும்பாவிட்டாலும் அதுவே அவனுக்குள்ள தருமம் - கடமை என்று நம்புகிறவனும் உள்ளான். அந்தப் புரோகிதனையே - மதகுருவாக - சாதிவழி எசமானராக இக்காலத்திலும் நம்பி ஏற்கும் தெளிவற்றவர்களும் உள்ளனர். அவன் சொல்வதெல்லாம் ஆற்றல் வாய்ந்த மந்திரம் என்று நம்பி அவனையே தெய்வமாக மதித்து அவன் காலில் விழுபவர்களும் உள்ளனர். பார்ப்பனர்களிலேயே - புரோகிதத்தை ஏற்காத - முற்போக்குக் கொள்கையுடையாரும் பலர் உள்ளனர். உண்மை உணர்ந்தும் அதை ஊருக்குச் சொல்லாத பார்ப்பனர்களும் பலர் உள்ளனர். ஒப்புக்குப் புரோகிதரிடம் மண்டியிடும் - செல்வரான பார்ப்பனரல்லாதாரும் பலர் உள்ளனர்.

அப்படிப்பட்ட சமுதாய மக்களின் மனமும், உணர்வும் பல்வேறு நிலையில் அமைவதை எண்ணிப் பார்த்திட்ட ஆழ்ந்த சிந்தனையாளரான அறிஞர் அண்ணா, பெரும்பாலோர் ஏற்கக்கூடிய பக்குவமான முறையில், பகுத்தறிவு நோக்கம் வெற்றிபெற ஏதுவான கருத்துக்களையும், செய்திகளையும் - அதற்குரிய சான்றுகளையும் மக்களிடம் எடுத்து வைப்பதே பயன்தரும் என்று கருதினார். முள்ளை முள்ளால் எடுப்பது போன்று, மக்கள் மனத்தில் அவ்வப்போது தோன்றக்கூடிய எண்ணங்களை எடுத்துக்காட்டியே தமது வாதத்தை எடுத்துவைத்தார் அண்ணா. அதனால் அவரது எழுத்தையும் - பேச்சையும், நாடகத்தையும் பெரும்பாலான மக்கள் விரும்பிக் கேட்கவும் - காணவும் செய்வதன் மூலம் தமது கொள்கையைப் பரப்புவதில் பெரும் வெற்றி கண்டார்.

அவரது பேச்சுத்திறன் - எழுத்தாற்றல் - கற்பனை வளம், எடுத்துக்காட்டு, உவமை அழகு, சிந்தனை ஓட்டம்,

கலைப்படைப்புத் திறன் காட்டும் - சிறுகதை, உரையாடல், நெடுங்கதை, நாடகம் ஆகியவை மக்களைத் திராவிட இயக்கத்தின்பால் ஈர்த்தன.

அவருடைய எளிமை, இனிமை இயல்புகளும், அன்புள்ளமும் - தோழமை உணர்வும், சனநாயக நடைமுறையில் கொண்டிருந்த உறுதியும் - அவரது அயராத உழைப்பும் தளராத தன்னம்பிக்கையும், அறிவாற்றல் மிக்க அவரிடம் காணப்பட்ட அடக்கமும் அவரது நா அசைவுக்கு மக்களைக் கட்டுப்பட வைத்தன. அவரால்தான் திராவிட இயக்கம் மக்கள் இயக்கமாக - சனநாயக சக்தியாக மலர்ந்தது என்பதை எவரும் மறுத்திடார்.

அதனால்தான் அறிஞர் அண்ணா முதலமைச்சராக அமர்ந்து, நாட்டுக்கு அவர் செய்ய எண்ணிய பலவற்றை நிறைவேற்ற முடிந்தது. தமிழ்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார், சுயமரியாதைத் திருமணம், செல்லுபடியாகும் சட்டத்தினைச் செய்தார். இந்தியை நீக்கி, இருமொழித் திட்டத்தைத் தமிழ்நாட்டில் செயற்படுத்தினார். அந்த அளவிலே தமது இலட்சியம் வெற்றி பெறத் தொடங்கிய நிலையில் இயற்கை எய்தி விட்டார். அண்ணா ஆட்சிப் பொறுப்புக்கு வருமுன்னர் எதிர்த்துக் குரல் எழுப்பிய பெரியாரும் பின்னர் தம்முடைய இலட்சியம் வெற்றி அடைவதை எண்ணி மகிழ்ச்சியடைந்தார். அண்ணா மறைந்த போது துயரத்தில் ஆழ்ந்த பெரியார், "புத்தரைக்கூட அண்ணாவைப் போல, என்னால் கருதமுடியாது. பல புத்தர் சேர்ந்தால்தான் ஓர் அண்ணாதுரை ஆகமுடியும்!" என்று வியந்தார்.

பெரியாரின் சிந்தனையில் வைரத்தின் உறுதி, அண்ணாவின் இதயத்திலே வைரத்தின் ஒளி. தனிக்கட்சி அமைத்ததற்குப் பின்னரும் அண்ணா சொன்னார், பெரியார்

தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, நம்மை ஏற்பதாக இருந்தால் நம்முடைய கட்சியில் அவருக்குத் தலைமையிடம் எப்போதும் காத்துக்கொண்டிருக்கும்'' என்று. "என் வாழ்நாளில் நான் கண்டதும் தலைவராகக் கொண்டதும் - தந்தை பெரியார் ஒருவரையே" என்று பெரியாரைப் போற்றி உரைத்தவர் அண்ணா! இந்த நாட்டு வரலாற்றில் தந்தை பெரியார் ஒரு சகாப்தம் - என்று போற்றியும் பேசியவர் அண்ணா. இந்த இனத்தின் விழிப்பிற்கு அவர் ஆற்றிய தொண்டினை வேறு யாராலும் செய்ய முடியாதென்று அண்ணா கருதினார். எனவே, அப்படிப்பட்ட உயர்ந்த நோக்கங்கொண்ட அறிஞர் அண்ணாவால் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்க்கப்பட்ட வழியிலேயே, சமூகநீதியை நிலைநாட்டி அடித்தட்டு மக்களுக்கு நன்மை செய்தாலும், மகளிர் உரிமைக்காகப் பாடுபட்டாலும், ஆட்சியில் அமர்ந்து முற்போக்கான திட்டங்கள் பல தீட்டி நிறைவேற்றப்பட்டாலும், சட்டமன்றத்தில் பெரும்பான்மை இடம் கிடைப்பதைப் பொறுத்தே ஆட்சி அமைக்க முடியும். அறிஞர் அண்ணா "சனநாயகம் என்பது சட்டமன்றத்திற்கு மக்கள் வாக்களித்து தேர்தல் நடத்துவது மட்டும் அல்ல; சட்டமன்ற முறைப்படி நடத்தும் ஆட்சி நிருவாகம் மட்டுமல்ல; எல்லோரையும் சமமாகவும், உடன்பிறப்பாகவும் மதிக்கிற ஒரு வாழ்க்கை முறை. ஒப்பரவு வளர்த்து, விட்டுத் தருவதற்குப் பக்குவம் பெறுகிற முறை. பிறர் வாழ நாம் வாழ்வோம் என்று கருதும் வாழ்க்கை முறை" என்று விளக்கியுள்ளார்.

ஒரு சூழ்நிலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்திலே இடம் பெற்றிருந்த எம்.ஜி.ஆர். பிரிய நேரிட்டது. அதற்கான காரணமோ விளக்கமோ கேட்டால் காவல்துறைத் தலைவர் (Inspector General of Police) ஆக இருந்த திரு. லட்சுமிநாராயணன், திரு. மோகன்தாசு இருவரும் எழுதியுள்ள

ஏடுகளைப் படிப்பவர்கள் விளங்கிக் கொள்ளலாம். நான் தி.மு.க.வில் உள்ளவனாதலின் அதை இங்கே விளக்கிப் பேசுவதை விரும்பவில்லை. அதைப் படிப்பவர்கள் எதனால் ஒரு கட்சியை எம்.ஜி.ஆர். தோற்றுவிக்க நேரிட்டது என்பதை அறியலாம். பின்னர் ஏன் தி.மு.க.வில் இருந்த தலைவர்கள் சிலர் அங்கே போய்ச் சேர்ந்தார்கள் எனிலோ, அங்கே நாற்காலி இருக்கிறது அதனால் சென்று அமர்ந்தோம் என்பார்கள்.

அரசியல், (Politics) பதவியில் இருந்தால்தான் உலகம் நம்மை மதிக்கும் என்ற நினைப்பிற்கு நம்மை ஆளாக்குகிறது. அது தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாக்கிவிடும். முதலிலே பதவி ஆசைக்கு ஆட்படுகிற காரணத்தினால்தான், திசை தெரியாமலே பறக்க நேரிடுகின்றது. ஆனால், அவரவருடைய தனிப்பட்ட உணர்வுகளால் ஏற்படுகிற விளைவுகளால், ஓர் இயக்கத்தின் இலட்சியத்தின் வெற்றி வாய்ப்பு தள்ளிப் போய்விடுவது உண்மை.

திராவிட இயக்கம் பல அரசியல் கட்சிகளாக இயங்குகிற நிலையில் இன்றைக்குப் பல பேருடைய மனத்திலே சுயமரியாதை – தன்மானக் கொள்கையில் ஆர்வம் இல்லை. ஓர் இனத்தினுடைய வீழ்ச்சியை மாற்றுவதற்கு ஒவ்வொருவரும் சுயமரியாதை உணர்வு பெறவேண்டும். அந்த நோக்கத்தில், பகுத்தறிவுக் கருத்தை முடிந்தவரையில் முழு அளவுக்குப் பரப்ப வேண்டும். ஏன்? பகுத்தறிவு என்பது பொதுவாகக் (Reasoning) காரண காரியச் சிந்தனை ஆகும். அவரவர்கட்கு இயலும் அளவில்தான் பகுத்தறியும் நோக்கமும் மனப்பான்மையும் உருவாகும். அவரவர்க்கு எவ்வளவு முடியுமோ, அந்த அளவில் பெறக்கூடிய பகுத்தறிவைப் பயன்படுத்தினால் போதும். பகுத்தறிவைப் பயன்படுத்துவோர் தரமும், வகையும்

பலவகைப்பட்டன. பற்பல மதவாதக் கொள்கைகளில் எதைக் குறித்தும் ஒரே முடிவுக்கு வருகிற வாய்ப்பு இல்லை, அது இயலாது. ஒருவரிடம் எந்த மதச்சார்பு உணர்வும் மிக அழுத்தமாக இடம் பெற்றிருக்குமானால் அவர்கள் அது குறித்துப் பகுத்தறிவதும் கடினமே.

நீண்ட காலமாகத் தமிழர்களுக்கு இடையிலே நிலவிய மதவேறுபாடுகளுக்கு இடையிலும், எல்லோரையும் மனிதனாக மதிக்கிற அடிப்படைக் கொள்கையும் சமத்துவ நோக்கும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன.

*“ஒன்றே குலம், ஒருவனே தேவன்”.*

*“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”,*

*“சாதி இரண்டொழிய வேறில்லை. சாற்றுங்கால்*
*நீதி வழுவா நெறி முறையில்*
*இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்”,*

*“சாதிகள் இல்லையடி பாப்பா”,*

*“இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி*
*இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே,”*

என்னும் வகையில் இப்படியொரு கொள்கை விளக்கம் நடைபெற்று வந்துள்ளது. திருவள்ளுவர் காலத்திலேயும் அதற்கு முன்னரும் நிலவிய தமிழர் மரபு வழிப்பட்ட கொள்கை இவை.

*“உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே”*

என்னும் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடலில்

*“வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்,*
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*
*மேற்பா லொருவனும் அவன்கட் படுமே”*

எனக் கூறப்பட்டுள்ளது. அது வருணாசிரமக் கருத்துக்கு நேர் மாறான கருத்து. நால்வகையாக மக்கள் பிளவுபட்டமை என்பது வருணாசிரம தருமத்தில் உள்ள நால் வருணச் சாதி அல்ல. நால்வகை என்பது பலவகை என்றும் பொருள்தரும். அது சமுதாயத்திலே உள்ள பல ஏற்றத்தாழ்வு நிலை. வருணாசிரம தரும சாதிதான் என்று சொன்னாலுங்கூடக், கீழ்ச்சாதியாரிடத்தில் மேல்சாதிக்காரன் கல்வி கற்கச் செல்வான் என்பதால், அந்தப் பெருமை கீழ்ச் சாதிக்காரனுக்கு உளதாகிறது, அதிலேயிருந்து வருணசாதி அடிப்படையில் அமைந்த கொள்கையை மறுத்த பாடல் அது என்னும் சிறப்பு விளங்கும்.

சுருக்கமாகக் கூறின், தமிழனுடைய பண்பாடு, திருக்குறள் பண்பாட்டைத் தழுவியது. ஆரியப் பண்பாடு வேதகாலத்திற்குப் பின்னர் கீதையின் கருத்தாக வளர்ந்தது. திருக்குறள் கருத்தின் அடிப்படையை ஒப்பாதது கீதை. கீதைக்கு நேர் முரணான கருத்தைக் கொண்டது குறள். இடையிலே ஒன்றிரண்டு கருத்துக்கள் ஒரே வகையாகத் தெரியலாம். பசித்தவனுக்குச் சோறு போடுவது தமிழ் அறம். இந்தக் கொள்கை உலகத்தில் உள்ள மக்கள் அனைவரையும் வாழச் செய்வதற்கு வழிகாட்டியாவது. அதற்கு அடிப்படையாகும் ஈகையைக் குறித்த எண்ணங்களை எடுத்துச் சொல்வது திருக்குறள். அவரவர் வினையின் வழிப்பட்ட பிறவிக்குரிய வருண தருமத்திற்கான, தொழிலைக் கைக்கொண்டு (வருணதருமத்தை மீறாது) மக்கள் வாழவேண்டும் என்பதையும் அந்தக் கடமையிலே இருந்து மாறக்கூடாது என்பதையும் வலியுறுத்துவது கீதை. அந்தக் கீதையுங்கூடக் கிருட்டிணன் இயற்றியதல்ல; சொன்னதுமல்ல. கீதை உலகியல் வாழ்வை மேம்படுத்துவதற்குரிய அடிப்படையான சமத்துவத்தை ஏற்கவில்லை. மாற்றானை வஞ்சிப்பதற்கும் எப்படியும் கொல்வதற்கும், பொய்

சொல்வதற்கும் வழிவகுத்தது. அதில் இன்னும் பல முறைகேடுகள் ஏற்கப்பட்டுள்ளன.

இன்று வெளிவந்த தினமணியிலே வந்துள்ள ஒரு குறிப்பு இது: அசுவத்தாமா இறந்தான் என்று கிருட்டிணன் உரத்துச் சொல்லச் சொன்னான். அவ்வாறே ஒருவன் உரத்துச் சொல்ல, அதைக் கேட்டு வீட்டுமர் அதிர்ச்சி அடைந்ததால் அவர் தேர் தரையிலே மண்ணோடு மண்ணாக அழுந்திப் போய்விட்டதாம். அதனால் அவர் வீழ்த்தப்பட்டார். அசுவத்தாமா என்ற ஒரு யானை செத்துப் போனதை, அசுவத்தாமன் என்ற வீரன் இறந்து போனதாக வீட்டுமர் நினைக்குமாறு உரத்த குரலில் சொல்லவைத்து வீட்டுமரைத் தோற்கடிக்க இந்தத் தந்திரத்தைக் கிருட்டிணன் பயன்படுத்தினான். இதற்கு ஏன் அவதாரம்? அவதாரத்தின் பெயரால் இப்படிப்பட்ட செய்திகளைச் சொல்லிய பின்னும் அதற்கு ஒரு பெருமை எப்படி வரலாம்? கிருட்டிணனைப் பற்றிச் சொல்லப்படுகிற வேறு பல செய்திகளும் இன்று விவாதத்திற்கு ஆளாகியுள்ளன.

வள்ளுவரின் திருக்குறள் நெறியில் அன்புதான் மனிதத் தன்மைக்கு உரம் ஊட்டுவது. அன்பு என்னும் அகத்து உறுப்பு இல்லையென்றால் அவன் மனிதனே அல்ல. கடைசி வரை போர்க்களத்திலே மட்டுந்தான் வீரம் காட்டிப் போரிடலாமே தவிர, மற்ற எல்லா நிலையிலேயும் அன்பு அடிப்படையில் வாய்மை அடிப்படையில், வாழ்வதே மனிதனுக்குப் பெருமை. ஆல்பர்ட் சுவைட்சர் (Albert Switcher) இந்தியாவின் தத்துவங்கள் ("The Philosophy of India") என்னும் தலைப்பில் எழுதியுள்ள நூலில், திருக்குறள் எத்தனை வகையில் பகவத்கீதைக்கு மாறான கருத்தால் உயர்ந்து நிற்கிறது என்பது விளக்கப்பட்டிருக்கிறது. சுவைட்சர் அதை விளக்கிவிட்டு இந்தியாவின் பூர்வீகக் குடிமக்களாக,

இந்திய மண்ணிற்கே உரிய மக்களாக வாழ்ந்தவர்கள், உலகியல் உணர்வோடு வாழ்ந்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டும் சான்றாகத் திருக்குறள் நமக்குக் கிடைத்திருக்கிறது என்று பாராட்டுகிறார். அதனால்தான் பாரதியார், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார். கிருட்டிணனைப் போற்றுவது வைதிக வருணாசிரம தருமக் கண்ணோட்டத்திலே; வள்ளுவரைப் பாராட்டுவது அறிவு அடிப்படையான மானிட வாழ்வு கண்ணோட்டத்திலே. திராவிட இனத்தின் இந்த அடிப்படைக் கொள்கையையும் அதன் தனித் தன்மையையும் உணர்ந்ததாகத்தான் நீதிக் கட்சியினுடைய செயற்பாடும் திராவிட இயக்கத்தின் குறிக்கோளும் அமைந்தன.

தொல்லுலகின் மூத்த குடியான திராவிடர்களிடம் வளர்ந்த நாகரிகத்தின் சுவடு - தமிழ்மொழியில் அதன் பழைய சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. அக்கால மன்னர்கள் தத்தம் வீரத்தைக் காட்டிப் போர் நடத்தி வெற்றி பெற்றுப் புகழ்க் கொடி பறக்க விடுவதில் மிகுந்த நாட்டம் உடையவராயிருந்தனர் என்பது உண்மை. ஆனால், எந்தப் போரும் 'சாதி' அடிப்படையிலோ - மத மாறுபாட்டாலோ நடைபெற்றதில்லை. அது கூட அந்த மன்னர் தம் ஆட்சியை விரிவுபடுத்தவே எனலாம். வேற்று மதத்தார் வெளியிலிருந்து படையெடுத்த பின்னர்தான், மதவழியில் எதிரியைக் குறிப்பிடும் நிலையே தமிழ் மண்ணில் பிறந்தது.

அப்படிப்பட்ட மரபினராகிய தமிழர் - ஆரியர்கள் குடியேற்றப்பட்ட காலங்களில், அவர்களிடம் எவ்வகையிலும் வேற்றுமை பாராட்டாது ஏற்றனர். அவரவர் பழக்கத்தினுடன் ஒட்டிய மதத்தினராகவே வாழ்ந்தனர். நாளடைவில் ஆரியம் தனது பிறவி உயர்வுக் கொள்கையால், பாடுபட்டு வாழும்

தமிழர்களை - சாதிமுறையில் இழிமக்களாகக் கற்பித்துத் - தம்மைப் பூதேவர்களாகவும் உயர்த்திக் கொண்டு அர்ச்சகராகவும், புரோகிதராகவும் ஆகி, மத வழிப்பட்ட குருமார்களாகவும் ஆயினர்.

மதவழி குருமார்களாக ஆன நிலையால், தமது சமற்கிருதத்தை தேவபாடை எனவும் - தமிழ் சூத்திரர் மொழியாதலின் நீசபாடை எனவும் நாட்டு மக்கள் ஏற்கும் நிலையை உருவாக்கினர். தென்னக மன்னர்கள் - பார்ப்பனரைக் குருவாக மதித்து ஏற்றவர்களானதால் - 'மன்னன் எவ்வழி - குடிகள் அவ்வழி' என்பதற்கு ஏற்ப, மக்களும் அவர்களைத் தனிப்பிறவியாக மதிக்கும் மனத்தினராயினர். அவர்தம் பொய்மை, புரட்டு, வஞ்சகம், சூழ்ச்சி ஆகியவற்றைத் தெளிய முடியாதவர் ஆயினர். ஐயம் எழுந்தாலும் வெளியில் சொல்லக்கூட முடியாத சூழல் நிலவியது. பார்ப்பனர்கள் சொல்லையும் - செயலையும் சந்தேகிப்பதே பாபம் என்று சாத்திரம் பேசிய சழக்கர்கள் தெளிந்த தமிழர்களையும் கண்மூடி நம்ப வைத்தனர். இந்தக் கண்மூடித்தனமான குருட்டு நம்பிக்கையில் ஆழ்ந்திருந்த மக்களை விழித்திடச் செய்யவே - திராவிட இயக்கமும் குறிப்பாகப் பகுத்தறிவு அடிப்படைச் சுயமரியாதை இயக்கமும் தோன்ற வேண்டியதாயிற்று.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்னுமாறு தமிழர் வாழ்வில் மன்னனுக்கே தலையான இடம் வழங்கப்பட்டிருந்தது உண்மையே. வள்ளுவரும் மன்னனுக்கே நாட்டையும் அங்கமாக்கி உரைக்கின்றார். அக்காலத்தில் - மன்னர்களின் ஆற்றலுக்கு ஏற்பவே 'நாடு' உருவாகி வந்ததும் மன்னனின் செங்கோன்மையைப் பொறுத்தே மக்கள் வாழ்வு அமைந்ததும் அதற்குக் காரணமாகலாம்.

ஆனால், மன்னன் குடிமக்களைக் காப்பதையே தலையான கடமையாக ஏற்றிருந்தான். மன்னன் உயிரெனினும்

குடிகளையே தன் உடலாக மதித்தான். குடிபழி தூற்றும் கோல் உடையவனாதலை - இகழ்வாகக் கருதினான். அக்காலத் தமிழ் மன்னர்கள் குடிமக்களுடன் நெருக்க முடையவராய் வாழ்ந்தனர்.

எனவே, மன்னர் ஆட்சி முறை நிலவினாலும், மக்கள் உரிமைகள் மதிக்கப்பட்ட நிலையால், மக்களிடையே சமத்துவமும் சனநாயக நடைமுறையும் இயல்பாகவே இடம்பெற்றிருந்தன. சங்ககாலத்துப் புலவர்களிடம் மன்னர்கள் கொண்டிருந்த மதிப்பினைச் சங்கச் செய்யுட்களால் அறியலாம். அந்தநாள் வாழ்வு தமிழர்கட்கு வாய்த்திட வேண்டும் என்பதையும் புரட்சிக் கவிஞர் வலியுறுத்துவார்.

அந்த வாழ்வினை - உரிமை நலன்கள் காக்கப்பட்ட சூழலை உருவாக்கவேண்டுமெனில் - தமிழர்கள் எப்படிப்பட்ட கொள்கைத் தெளிவும் - சமத்துவ நோக்கும் தோழமை உணர்வும் கொண்டவர்களாக வேண்டும் என்பதையே அண்ணா விளக்கியுள்ளார்கள்.

திராவிடத்தின் வருங்கால வாழ்வு அப்படிப்பட்ட சனநாயக நெறியில் தழைப்பதாக வேண்டும். அந்தத் திராவிட மரபுக்கு ஏற்ற நெறியை வளர்த்திட நாம் உறுதிகொள்ள வேண்டும் என்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநிலத்திலும் தமிழ்நாட்டிலும் திராவிடர் இயக்க ஆட்சிக்காலத்திலே நிறைவேற்றப்பட்ட சாதனைகளை எல்லாம் குறிப்பெடுத்து வந்திருந்தாலுங்கூட அவற்றை விவரிக்கத் தேவை இல்லை என்று கருதுகிறேன். மகளிர் உரிமைக்கு வைதிகம் எப்படியெல்லாம் மாறுபட்டது என்பதையும், மனித உரிமைகட்கும், மானிட நேயத்துக்கும் ஆரிய வைதிகக் கொள்கை எப்படி மாறானது என்பதையும் நீங்கள் அறிவீர்கள் என்ற நம்பிக்கையோடும், திராவிடத்தின்

வழிவழி வந்த உயர் நெறியைக் காத்து நிற்கவும் பின்பற்றவும் உறுதிகொள்வீர்கள் என்னும் நம்பிக்கையோடும் அறிஞர் அண்ணா கொண்டிருந்த ஒரு கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

Referring to democracy Anna said, "Democracy is not a mere form of government alone - it is an invitation to a new life - an experiment in the art of sharing responsibilities and benefits - an attempt to generate and coordinate the inherent energy in each individual for the common task. Hence, we cannot afford to waste a single talent, impoverish a single man or woman or allow a single individual to be stunted in growth or held under tyranny and the universities should, through the graduates it sends forth year after year, annihilate the forces that attempt at aggrandisement and tyranny, fight against caste and hypocrisy and enthrone human dignity".

அண்ணா சனநாயகத்தைக் குறித்து விளக்கி உரைத்தது இது.

"ஜனநாயகம் ஒரு ஆட்சியின் அமைப்புமுறை மட்டுமே அல்ல; புதிய வாழ்வுக்கு அது ஓர் அழைப்பு - கடமைப் பொறுப்புக்களையும் அதன் பயன்களையும் பங்கிட்டுக்கொள்ளும் கலையில் நிகழும் ஆய்வு; ஒவ்வொரு மனிதனிடமும் பொதிந்துள்ள ஆற்றலை பொதுநலனை வளர்த்திடும் வகையில் வெளிப்படச் செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் செய்யும் முயற்சி. எனவே எந்தத் தனி மனிதனின் ஆற்றலும் வீணாகக் கழிய இடந்தரவியலாது; எந்த ஆணையும், பெண்ணையும் பயனற்றவர்களாக்கவோ, தனியொருவனின் வளர்ச்சியைத் தடைசெய்யவோ, எவரும் கொடுமைக்கு ஆட்பட்டுக்கிடக்கவோ இடங்கொடுக்க முடியாது. எனவே பல்கலைக்கழகங்கள் ஆண்டுதோறும்

வெளியுலகுக்கு அனுப்பி வைக்கும் படித்த பட்டதாரி இளைஞர்கள் மூலம், தன்னல ஆதிக்கத்தையும், கொடுமை இழைக்கும் சக்திகளையும் அடியோடு ஒழிப்பதுடன், சாதி வேற்றுமையையும், பிறப்பு உயர்வு பேசும் பித்தலாட்டத்தையும், எதிர்த்துப் போராடுவதன் மூலம், மானிடத்தின் மாண்பு மேலோங்கச் செய்திடப் பாடுபடவேண்டும்".

அறிஞர் அண்ணாவின் வேண்டுகோளை உங்கள் முன்வைத்து, திராவிடத்தின் பண்பாட்டுக் கேற்ப, சாதியற்ற சமத்துவ சமுதாயமும் மதவேறுபாடு கருதாத உடன்பிறப்பு உரிமையும் தழைக்கும் வகையில், ஜனநாயக நெறி நின்று, பணியாற்ற உறுதிகொள்ள வேண்டிக் கேட்டுக்கொண்டு இந்த திராவிட இயக்கக் கருத்தரங்கைத் தொடங்கி வைக்கிறேன்.

வணக்கம்!

Being Dravidians, the inhabitants of Mohenjo-Daro and Northern India naturally spoke a Dravidian language, yet this language was not one of the Dravidian languages now spoken in India, but probably their parent, which may be called proto-Dravidian. The largest proportion of the words used in the Proto-Dravidian are also found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages.

— H. Heras — Light of the Mohenjadaro riddles,
The New Review Vol. IV No. 9

# பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

பேராசிரியர் க. அன்பழகன், தஞ்சை மாவட்டம் திருவாரூரை அடுத்த காட்டூரில் 1922-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது தந்தையார், சுயமரியாதை இயக்க முன்னோடியான திரு. மு. கலியாணசுந்தரனார். இளமையில் இராமையா என்னும் பெயருடையவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும்போது 1941-ல் தனித்தமிழ் ஆர்வத்தால், அன்பழகன் என்று பெயர் மாற்றம் செய்து கொண்டார். அக்காலத்திலேயே இந்தி ஆதிக்க எதிர்ப்பு, தமிழ் இயக்கம், தன்மான இயக்கம் ஆகியவற்றில் முனைந்து செயற்பட்டார்.

1944-ல் பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றார். 1944 முதல் 1957 வரை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறையில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார். தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் அடிதொடர்ந்து, திராவிடர் இயக்கப் பேச்சாளரானார். 1949-ல் அறிஞர் அண்ணாவுடன் தி.மு. கழகத்தினைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவராவார்.

1957, 1971, 1977, 1981, 1985, 1989-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினராகவும், 1962-ல் சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும், 1967-ல் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தி.மு.க. ஆட்சியில், கலைஞர் மு.க. முதல்வராக இருந்தபோது 1971 முதல் 1976 வரை நல்வாழ்வுத்துறை அமைச்சராகவும், 1989 முதல் 1991 வரை கல்வித்துறை அமைச்சராகவும் பணியாற்றினார். 1996-ஆம் ஆண்டுகளில் — முதல்வர் கலைஞர் தலைமையில் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

1989-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

தமது பேச்சாலும் எழுத்தாலும் — தமிழ் மொழிப்பற்றையும் இன உணர்வையும் பகுத்தறிவுச் சிந்தனையையும் மக்களிடையே வளர்த்து வருபவர். 1974-ல் தி.மு.க.வின் பொருளாளராகவும், 1977-ல் தி.மு.க.வின் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு — அத்தொண்டினை இன்றும் தொடர்பவர். தி.மு. கழகத்தின் அறப்போராட்டத்தில் ஈடுபட்டு, பலமுறை சிறைப்பட்டவர். ஈழத்தமிழர்கள் உரிமைகாக்க சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்து 1983-ல் விலகியவர்.

வகுப்புரிமைப் போராட்டம், கலையும் வாழ்வும், விடுதலைக் கவிஞர், உரிமை வாழ்வு, தமிழ்க்கடல் அலை ஓசை பரவுந்தமிழ் மாட்சி, நீங்களும் பேச்சாளராகலாம், தமிழ்வானின் விடிவெள்ளி தந்தை பெரியார் முதலான நூல்களை இவர் எழுதியுள்ளார்.

**— பூம்புகார் பதிப்பகத்தார்**